உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 09 புதன்கிழமை (25.08.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 272

# இடம்பெயர் ஈழத்தமிழர் நலனில் இலங்கை அரசு மந்தப் போக்கில்!

## கொழும்பு செல்லும் குழுவில் தமிழர்கள் இல்லை



சென்னை, ஒகஸ்ட் 25

இந்திய அரசின் கருத்துக்கும் எதிர்பார்ப்புக்கும் மாறாக, இலங்கை அரசு இடம்பெயர்ந்த தமிழர்களின் பிரச்சினையில் இன்னும் மந்த நிலையிலேயே செயற்படுகிறது. மேலும், இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வுக்கு உரிய வழி காண இந்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முதல்வர் கருணாநிதி தலைமையில் நேற்று நடைபெற்ற தி.மு.கவின் எம்.பிக்கள் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை செல்லவிருக்கும் இந்தியத் தூதுக்குழுவில் தமிழ் நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெறமாட்டார்கள் - என்று கருணாநிதி செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோது தெரிவித்தார். (24ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பஸில் இந்தியா பயணமானார்

கொழும்பு, ஒக. 25


நாட்டின் அரசியல்,பொருளாதாரம் ஆகிய விடயங்கள் குறித்து இந்திய அரச பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள் நடத்துவதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மட்டுமே நேற்று இந்தியா புதுடில்லிக்குப் பயணமானார்.

முன்னர் அறிவிக்கப்பட்டது போன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் புதுடில்லி செல்லவில்லை.

(24ஆம் பக்கம் பார்க்க)

## கடும் மழை குளிருக்கு மத்தியில் பாடசாலையில் தங்கியிருந்து அவலப்படும் சாந்தபுரம் மக்கள்

### எங்கள் இருப்பிடங்களுக்குப் போக விடுங்கள் என்கின்றனர் அவர்கள்



மீள்குடியமர்வு வாழ்வின் இலச்சணம் இது தான்

கிளிநொச்சி, ஒக. 25

கிளிநொச்சியில் தற்போது பெய்து வரும் கடும் மழையினால் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்த்தப்படாது பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டிருக்கும் சாந்தபுரம் கிராம மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த சாந்தபுரத்தைச் சேர்ந்த 281 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்படுவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டு அழைத்து வரப்பட்டன.

இரண்டு மாதங்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தங்கவைக் கப்பட்டிருந்த இந்த மக்கள் சொந்தக் கிராமத்தில் மீள் குடியமர்த்தப்படுவதாகக் கூறப்பட்டு சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்துக்கு அழைத்துவரப்பட்டு அங்கு தங்கவைக் (24ஆம் பக்கம் பார்க்க)

## சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட கப்பலிலுள்ள இலங்கையரை மீட்க முயற்சி

கொழும்பு, ஒக. 25

சோமாலிய நாட்டு கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட பனாமா நாட்டுக் கொடியுடனான கப்பலிலிருந்து இலங்கையர்களை விடுவிப்பதற்கான பேச்சு இடம்பெறுகிறது என வெளிவிவகார அமைச்சு தெரிவிக்கின்றது.

கென்யாவிலுள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகளே இந்தப் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளனர். (24ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. துணை நிரந்தரப் பிரதிநிதியாக ஜெனரல் சவேந்திர சில்வா நியமனம்



கொழும்பு, ஒக. 25

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான துணை நிரந்தரப் பிரதிநிதியாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நிய மிக்கப்பட்டுள்ளார் என்றும் விரைவில் அவர் பதவி யேற்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றங்கள் குறித்து தமக்கு ஆலோசனை வழங்க ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் நிபுணர் குழு ஒன்றை நியமித்துள்ளார்.

இதேவேளை, சவேந்திர சில்வாவின் நியமனமும் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (24ஆம் பக்கம் பார்க்க)

## ஹக்கீமுக்கு கட்சிக்குள் நெருக்கடி அதிகரிப்பு; மு.கா. எந்நேரமும் அரசு பக்கம் தாவலாம்

கொழும்பு, ஒக. 25

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இவ்வாரம் இணையவுள்ளதாக அரச வட்டாரங்களில் இருந்து நம்பகமாகத் தெரியவருகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் பலர் அரசுடன் இணைய வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்றனர். எதிர்க்கட்சியில் தொடர்ந்து ஸ்ரீல.மு.கா. இருந்தால் தமக்கு வாக்களித்த (23ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் வெடிப்புச் சம்பவம் ஐ.நாவின் புல்டோசர் சேதம்

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர், தோப்பூரில் ஐ.நா. திட்டத்தின் கீழ் (24ஆம் பக்கம் பார்க்க)

## சன் சீ கப்பல் தமிழ் அகதிகளுக்கு சட்ட உதவி வழங்குகிறது கனடா

வன்கூவர், ஒக. 25

'சன் சீ' கப்பலில் கனடா சென்று தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகளுக்கு சட்ட தேவைகளுக்கான நிதி உதவி வழங்கப்படும். அத்துடன் அகதிகள் தங்களின் சட்டத்தரணிகளைத் தாமே தெரிவு செய்யவும், விசாரணைகளுக்கு முன்னர் சட்டத்தரணியை சந்திக்கவும் அனுமதி அளிக்கப்படும்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்புக் குறித்து ஆராயும் முதல் கட்டப் பேச்சு இன்று

கொழும்பு, ஒக. 25

எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு ஒன்றை அமைப்பது தொடர்பான முதற் கட்டப் பேச்சு இன்று பிற்பகல் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெறவுள்ளது.

(23ஆம் பக்கம் பார்க்க)

நவீன் செரமிக்
யாழ் நகரிலும் தடம் பதித்துள்ளது!
Naveen Ceramic (PVT) LTD.
# 212,Palaly Road, Jaffna.
Tel :212220033, 212220044



உள்ளூர் நிகழ்வுகளை உலகறியச்செய்வோம்!
நல்லைக் கந்தனின்
உற்சவக் காலத் திருக்காட்சிகள்
தினமும் உங்கள் உதயனின்
வலைத் தளத்திலும்....
www.uthayan.com

குறைந்த வட்டி
அதிகூடிய பணம்
பவுணுக்கு
ரூ. 29,000 வரை
மாதாந்த வட்டி 1.16% மட்டுமே!
துரித இலக்கம்: 011 2353806
கொமர்ஷல் வங்கியின்
தங்க நகை அடகுச் சேவை
COMMERCIAL BANK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் சிவகுரு
சண்முகலிங்கம் (அப்பி)



பிறப்பு
06.08.1939



இறப்பு
26.07.2010

குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து
எமை அன்புடன் அரவணைத்து
நன்நெறி காட்டி வாழ வைத்த
எங்கள் அன்புத் தெய்வமே!
பாசத்தினால் எம்மை ஆண்ட எம் அன்புத் தெய்வமே!
பண்பின் சிகரமாயிருந்து - எம்மை
உயர வைத்த எங்கள் தெய்வமே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல.96, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

(இ/570148)

# மரண அறிவித்தல்

## திருமதி கனகசபை வள்ளிப்பிள்ளை



சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் புத்தூரை வதிவிடமாகவும் தற்போது சிறுப்பிட்டியில் வசித்து வந்தவருமான கனகசபை வள்ளிப்பிள்ளை நேற்று (24.08.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு (பாண்டியர்) - பூதாத்தைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பர்வதராசபுத்திரி தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் கனகசபையின் அன்பு மனைவியும் திருச்சிற்றம்பலம் (பிரான்ஸ்), மகாலிங்கம், காலஞ்சென்றவர்களான சிவதேவி, சுவேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும் சரஸ்வதி, ருக்குமணிதேவி, காலஞ்சென்ற கதிர்காமநாதன் ஆகியோரின் அன்பு மாமியும் வாசவன், கேசவன், ஜனனி, சாம்பவி, மதிவதனன், தசாந்தன் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை, செல்லாச்சிப்பிள்ளை, சின்னத்தம்பி, சின்னப்பிள்ளை மற்றும் வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2010) புதன்கிழமை அவரின் சிறுப்பிட்டி இல்லத்தில் இடம்பெற்று, பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் த்கனக்கிரியைக்காகச் சிறுப்பிட்டி மத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
திருச்சிற்றம்பலம் - 0777743462,
மகாலிங்கம் 0779672845
(மகன்மார்).

சிறுப்பிட்டி மத்தி,
நீர்வேலி.

(102441)

# நீடூழி வாழ பாராட்டி வாழ்த்துகின்றோம்



மன்னார், வவுனியா, யாழ்.மாவட்டங்களின் முன்னாள் அரச அதிபர் சாணக்கிய நாயகன் திரு.க.கணேஷ் ஐயா அவர்களின் 50 ஆண்டுகள் அர்ப்பணிப்பான அரச சேவையைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர் நீடூழி வாழ எல்லாம் வல்ல, எல்லோருக்கும் பொதுவான இறைவனை வேண்டுகின்றோம்.

எமது சபையின் எல்லாத் திட்டங்களுக்கும், உறுதுணையாகவும், A9 பாதை மூடியிருந்தபோது எமது அலுவலகத்தை சுமுகமான முறையில் இயங்குவதற்குத் தூண் போல உதவியமைக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக யாழ். - கிளிநொச்சி நீர்வழங்கல் திட்டம் நடைமுறைக்குவரப் பெரும் ஒத்துழைப்பை வழங்கியமைக்கும் மற்றைய மாவட்டங்களிலும், அரச அதிபராக இருந்தபோது அம் மாவட்டங்களிலும் எமது சபைக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கும் நன்றி கூறுவதோடு, தொடர்ந்தும் எமது மாவட்டத்திற்கு அவரின் சேவையை, அவரின் இயல்பிற்கேற்ப கடிகாரம் போல ஓய்வின்றி வழங்கவேண்டுமெனப் பணிவுடன் வேண்டுகின்றோம்.

பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு),
உதவிப் பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு),
முகாமையாளர் (யாழ்ப்பாணம்),
சகல உத்தியோகத்தர்களும்,
தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, யாழ்ப்பாணம்.

(சி/570150)

## இலவச ஆங்கில வகுப்பு

தென்மராட்சி, ஓக. 25

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான 3 மாத இலவச ஆங்கில வகுப்புகளைச் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் ஆரம்பித்துள்ளனர்.

பயிற்சி வகுப்புகளில் பங்கு பற்றவுள்ளோர் பரீட்சைப் பெறுபேற்றின் மூலப்பிரதியுடன் சாவகச்சேரி நவீன சந்தை விமலாஸ் வர்த்தக நிறுவனத்தில் பதிவு செய்யுமாறு கழகத் தலைவர் லயன் தி.முருகதாஸ் அறிவித்துள்ளார்.

(த-207)

## அழகியல் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஓக. 25

கோப்பாய் கோட்ட ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான அழகியல் பாடச் செயலமர்வு நாளை வியாழக்கிழமையும், நாளைமறுதினம் வெள்ளிக்கிழமையும் காலை 8.30 மணிக்கு யாழ். கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

(த-10)

WANTED

Full Time/Part Time MBBS Qualified Medical Officers to Green Memorial Hospital, Manipay.

Salary and Accommodation will be negotiable. apply before 31st of August 2010.

Mr.S.R.Jesupalan.J.P
*Secretary Mission Hospitals,*
*Green Memorial Hospital, Manipay.*
*&*
*McLeod Hospital, Inuvil.*

T.P. No: 021 7451935

LAVA HOSPITAL

75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
www.lavahospitals.com/blog

ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

Basic Body Checkup
அடிப்படை உடற் பரிசோதனைகள்

★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 21 |  | 25 |
| ★ | | ★ |
| 04 | | 07 |
| ★ | | ★ |
| 1943 | | 2010 |

## அமரர் நீக்கிலான் பிரான்சிஸ் சேவியர் (சேவியர்)

கடந்த 25.07.2010 ஞாயிற்றுக்கிழமை, நாரந்தனை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் நீக்கிலான் (மரிசில்) பிரான்சிஸ் சேவியர் (சேவியர்) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நீக்கிலான் - சூசானம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செபஸ்தி - மதலேனாள் தம்பதியரின் அன்பு மருமகனும் மெற்றலீனின் அன்புக் கணவரும் லூமினாவின் (ஆசிரியை - பிரான்ஸ்) பாசமிகு தந்தையும் றேடியஸின் (பிரான்ஸ்) மாமனும் திரு.திருமதி தனுசா, சிவரூபன் ஆகியோரின் பேரனும் றெமோவின் பூட்டனும் அமிர்தவாசகம் (துரையான்), நேசம்மா (வவுனியா), அருளம்மா, காலஞ்சென்ற வேவிராசா (கொழும்பு) ஆகியோரின் சகோதரரும் மாணிக்கம், காலஞ்சென்றவர்களான பக்கீரி, சின்னையா மற்றும் அல்வீனம்மா, காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் சற்குணம், காலஞ்சென்ற குணமாலை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் 31.07.2010 அன்று நாரந்தனையில் இடம்பெற்றன. எனது அன்புத் தந்தையின் மறைவுச்செய்தி கேட்டு நேரடியாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் அனுதாபச் செய்தியைத் தொலைபேசி மூலம் தெரிவித்தோருக்கும் இறுதிச்சடங்கில் நேரடியாகக் கலந்துகொண்டோருக்கும் இன்னும் பல வழிகளில் உதவி புரிந்தோருக்கும் மற்றும் ஏனையோருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல் : மகள்
றேடியஸ் - லூமினா
(ஆசிரியை - பிரான்ஸ்)

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை.

(102440)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நோய்நாடி, நோய் முதல் நாடி செய்யும் வைத்தியமே தேவை

ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) கிளர்ச்சிக்குத் தூபமிடும் செயல்களில் ஈடுபட்டு வருவதாக அரசாங்கத்தின் மூத்த அமைச்சர்களில் ஒருவரான சுசில் பிரேம ஜயந்த குற்றஞ்சாட்டி உள்ளார். அரச கூட்டமைப்பின் மூத்த அமைச்சரும் அதன் செயலாளருமான பிரேம ஜயந்த இந்தக் குற்றச்சாட்டை, அது உண்மையற்றதெனின் முன்வைத்திருக்க முடியாது. பொறுப்பு வாய்ந்த ஓர் அமைச்சர் வெறும் ஊகங்களை அடிப்படையாக வைத்தோ அல்லது எழுந்தமானமாகவோ இந்தக் குற்றச்சாட்டை ஜே.வி.பியின் பக்கம் எறிந்திருக்க முடியாது.

அரசுக்கு எதிராக மக்களைக் கிளர்ச்சி செய்யத் தூண்டும் வகையில், ஜே.வி.பி.சமீபகாலமாகச் செயற்பட்டு வருகிறது. இச்செயலுக்கு ஒருபோதும் அரசு இடமளிக்கப் போவதில்லை என்றும் அமைச்சர் எச்சரிக்கைத் தொனியில் தெரிவித்திருக்கிறார்.

அமைச்சரின் குற்றச்சாட்டை ஜனதா விமுக்திப் பெரமுனவின் தலைவர்கள் மறுக்கிறார்களா இல்லையா என்பது இன்று அல்லது நாளை தெரியவரலாம். அதனைப் பொறுத்திருந்து பார்ப்போமே!

இலங்கையின் சரித்திரத்தில், அது பிரிட்டிஷ்காரரிடம் இருந்து விடுதலை பெற்ற பின் - அதாவது 1948 ஆம் ஆண்டில் நாடு சுதந்திரமடைந்த பின்னர் - முதலாளித்துவக் கொள்கைகளுடன் ஆட்சி நடத்திய ஆரம்பகால கட்டத்தில் - இடதுசாரிக் கட்சிகள் வறுமைப் புரட்சி, தொழிலாளர் புரட்சி, சமத்துவப் புரட்சித் தேவை என்று 'வெறுவாய் சப்பினார்களே' அன்றி ஆயுதப் புரட்சி குறித்துச் சிந்திக்கவில்லை.

முதல் முறையாக 1971 ஆம் ஆண்டில் - சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையார் இலங்கைக்கு (இல்லை, இல்லை) சிறிலங்காவுக்கு வெறும் அடையாளப் பெயராகக் குடியரசு என்று பெயர் சூட்டுவதற்கு முந்திய வருடத்தில் - சிங்கள இளைஞர்கள் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். முற்போக்குக் கொள்கைகளைப் பின்பற்றிய தமிழ் இளைஞர்களும் அந்த ஆயுதப் புரட்சிக்கு ஆதரவளித்தனர். அப்போதைய அந்த ஆயுதப் புரட்சிக்கு, ஆயுதப் புரட்சி என்று அன்றைய அரசாங்கம் நாமமிடவில்லை. வெகுஜனங்களுக்கு எதிரான கிளர்ச்சி என்று பெயரிட்டது.

1971ஆம் ஆண்டில் கிளர்ந்தெழுந்த ஜனதா விமுக்தி பெரமுனவின் ஆயுதப் புரட்சியை அவ்வேளை பிரதமராக இருந்த சிறிமாவோ தமது படை பலம் கொண்டு அடக்கி விட்டார்.

எனினும் ரோஹண விஜயவீரவின் தலைமையில் இயங்கிய ஜே.வி.பி. மீண்டும் 1988 ஆம் ஆண்டில், ஜூனியஸ் றிச்சாட் ஜெயவர்த்தனாவின் பதவிக் காலத்தில், வீச்சோடும் வினைத்திறனோடும் மீண்டும் தனது ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கியது.

அரசாங்கத்தைப் பல வாரங்கள் கதிகலங்க வைத்த ஜே.வி.பியின் ஆயுதப் போராட்டம், பெரும் பிரயத்தனத்தின் பின்னர், பொதுமக்களில் பலரும் ஆயுதப் படையினரால் சுட்டொழிக்கப்பட்ட பின்னர், முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. ஜே.வி.பியின் தலைவர் ரோஹண விஜயவீரவும் சுட்டுக் கொல்லப்பட்டார். எனினும் அவருடன் சேர்ந்து இயங்கிய சோமவன்ஸ அமரசிங்க, ரில்வின் சில்வா உட்பட்ட பல தலைவர்கள் ஜாதிக விமுக்தி பெரமுனவை தக்கவைத்து இப்போது ஜனநாயக ரீதியில் நிலைநிறுத்தி உள்ளனர்.

அவை ஒருபுறமிருக்க -

இரண்டு பதவிக் காலங்களுக்கு மேல் நாடாளுமன்றத்தில் ஜனநாயகக் கட்சியாக இயங்கும் ஜே.வி.பி. மக்களைக் கிளர்ச்சிக்குத் தூண்டும் விதத்தில் செயற்படுவதாக அரசு தரப்பு குற்றஞ்சாட்டுகிறது. அதில் உண்மை உண்டா இல்லையா என்பதை அரசுதான் கண்டறியவேண்டும்; நிரூபிக்க வேண்டும்.

30 வருடங்களாக நடைபெற்ற தமிழ் இளைஞர்களின் - தமிழ்மக்களின் - அரசியல் உரிமைகளுக்கான ஆயுதப் போராட்டத்தையும் இப்போதைய அரசு சென்றவருடம் முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டது. அதனை அடிக்கடி சிங்கள மக்களுக்கு ஞாபகமூட்டி, தனது அரசியல் தளத்துக்கு உரமூட்ட, பலமாக்க, பல உத்திகளைக் கைக்கொண்டு வருகின்றது அரசு.

ஜே.வி.பி.இரண்டு தடவைகளும் நடத்திய போராட்டத்தை ஆயுதக் கிளர்ச்சி என்று கூறிய அரசுகள், தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்று பெயரிட்டன. அதனூடு இந்தியா, அமெரிக்கா உட்படப் பல சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கிறது இன்றைய அரசு. இதனைத் தன் வாயாலேயே கூறி வருகிறது.

இரண்டு தடவைகள் ஜே.வி.பி. நடத்திய ஆயுதப் போராட்டங்கள் தலையெடுக்க மூல காரணமாக இருந்த அரசு பக்கத்தின் தவறுகள் எவை என்பதனை பதவியில் இருந்த ஆட்சியாளரால் கண்டுபிடிக்கமுடியாது போனது ஏன்? அரசி யல் உயர் பீடத்தில் கண்வைத்து, ஆட்சிக் கட்டிலில் சுகபோகம் அனுபவிக்க விரும்பும் அரசியல் உயர் தலைவர்கள்தானும் அதில் அக்கறை காட்டாதது ஏன்?

ஜே.வி.பியின் ஆயுதப் போராட்டங்கள் இரண்டுக்கும் உரிய அடிப்படைக் காரணங்களைக் கண்டறிவதில் ஆர்வம் இருந்திருப்பின் - அது மீண்டும் தலை எடுக்காமல் ஜன நாயகத்தின் உயரிய கோட்பாடுகளை, விழுமியங்களை, மக் கள் நலன் நாடிச் செயற்படுத்தி இருப்பின் - ஜே.வி.பி.மீது கைவிரல் நீட்டவேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது அல்லவா?

சிங்கள மக்களின் ஜனநாயக உரிமைகளை நசுக்கும் சிந்தனைக்கு சிந்தனைக்கு அரசாங்கம் வடிவம் தரத் துடிக்கும் போது ஜே.வி.பி. மீது சந் தேகக் கண் விழுகிறது. நோய் நாடி, நோய் முதல் நாடி மருந்து கொடுக்காத வைத்தியர்கள் தொழில் கெட்டுத் தாழ்வது உண்டு.

தமது மக்களிடையே இருந்து எழும் பிரச்சினைகளை இனங்காண முடியாத கொழும்புத் தலைவர்களுக்கு -

தமிழ்மக்களின் ஜனநாயக உரிமைகள் குறித்தோ, அவர்களின் பிறப்புரிமை குறித்தோ, அவர்களுக்குள்ள சம உரிமைகள் குறித்தோ ஆராய்ந்து, மனதிலிருத்தி -

நேர்மையுடனும் இதயசுத்தியுடனும் அவர்களுக்குரிய உரிமைகளை வழங்கி நாட்டின் நலனுக்கும், வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் உழைக்கும் அப்பழுக்கற்ற நிலையை அடையாதவரை-

தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினைகளை நிதானத்துடனும் நேர்மையுடனும் ஆராய்ந்து அவற்றை நிறைவேற்ற, மனப்பூர்வமாக வழங்கும் மருந்து கண்டறியப்படாத வரை-

இப்போது ஜே.வி.பி. மீது எழும் சந்தேகம் போன்ற ஒரு நிலை உருவாகிவருமானால் -

அதனையும் இராணுவ பலம் கொண்டு முடிவுக்குக் கொண்டுவர காலம் இடம்கொடுக்குமா என்பது குறித்து இப்போதே ஆட்சியிலுள்ளவர்கள் கவனத்தில் கொள்வாராக.

# நாட்டில் அராஜகம் தலைவிரித்தாடும் அபாயநிலை உருவாகி வருகின்றது

### என்.எம்.பெரேரா நினைவுப் பேருரையில் சட்டத்தரணி குணசேகர

கொழும்பு, ஓக. 25

கடந்தவருடம் மே மாதம் 19ஆம் திகதி யுத்தம் முடிவடைந்தவுடன் நாட்டில் காணப்பட்ட - கொண்டாட்ட கோலாகல நிலைமை இப்பொழுது நாட்ளாவிய சோர்வாகவும் ஏக்கப் பெருமூச்சாகவும் மாறிக்கொண்டு வருகின்றது. அதிகார அங்கலாய்ப்புக் காரணமாகச் சட்ட ஒழுங்கு சீரழிந்து போயிருப்பதே இதற்குக் காரணம்.

காலஞ்சென்ற சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என்.எம்.பெரேராவின் 31ஆவது ஞாபகார்த்ததின நிகழ்வில் உரை நிகழ்த்துகையில் சட்டத்தரணி எஸ்.எல்.குணசேகர மேற்கண்டவாறு கூறினார்.

இந்த நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படாவிட்டால் பொதுமனிதன் சட்டத்தை தன்கையில் எடுத்துக்கொண்டு விடுவான். நாட்டில் அராஜகம் தலைவிரித்தாடத் தொடங்கிவிடும் என்று அவர் எச்சரிக்கை விடுத்தார்.

சட்ட ஒழுங்கு சீரழிந்து வருவதற்கு உதாரணம் காட்டிய அவர், காலியில் அமைதியாக நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணி ஆர்ப்பாட்டத்தின் மீது பொலிஸார் தடியடி நடத்தியமை, பொலிஸ் நிலையத்தில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் விகிதஹேரத் மற்றும் இன்னொரு நாடாளுமன்ற உறுப்பினரையும் காவலில் வைத்தமை, கொழும்பில் ஐ.நா. காரியாலய வளவுக்குள் அமைச்சர் வீரவன்ஸ எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தியமை, இந்தப் போராட்டம் ஜனநாயக உரிமையின் பாற்பட்டது என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நியாயம் கற்பித்தமை, ஐ.நா.பணியாளர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தினால் பணிக்குச் செல்ல முடியாமல் தடுக்கப்பட்டமை, அதேகாலப்பகுதியில் சரத் பொன்சேகா காவலில் வைக்கப்பட்டமைக்கு எதிராகக் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் உண்ணாவிரதம் இருந்த பௌத்த பிக்குமார் பொலிஸாரால் பலவந்தமாக அப்புறப்படுத்தப்பட்டமை, அதே வேளை மேர்வின் சில்வா அரசாங்க அலுவலர் ஒருவரை மரத்துடன் கட்டித் தண்டித்தபோது பொலிஸார் கண்களை மூடிக்கொண்டிருந்தமை போன்ற சம்பவங்களை அவர் சுட்டிக் காட்டினார்.

அரசமைப்பின் 12ஆவது அத்தியாயச்சட்டத்தின் முன் எல்லோரும் சமமான வர்கள் என்றே வரையறுத்திருக்கிறது என்றார் - சட்டத்தரணி குணசேகர.

அவர் மேலும் பேசுகையில், சீரழிவு 1970ஆம் ஆண்டு அபரிமிதப் பெரும்பான்மையுடன் சிறிமாவோ பண்டாரநாயக்க தெரிவுசெய்யப்பட்டவுடன் ஆரம்பித்தது. இந்த நிலைமையானது நூறுக்கு ஐந்து வீதம் என்ற முறையில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தெரிவானதுடன் மேலும் மோசமடைந்தது - என்றார்.

இதற்குத் தீர்வு என்னவென்றால் நல்ல மனிதர்கள் [illegible]களும் பெண்களும் அரசியலுக்குள் வரவேண்டும். கட்சிகள் பின் ஆசனத்துக்குப் போய்விட வேண்டும். விகிதாசாரத் தேர்தல் முறை கைவிடப்பட்டு, தமது தலைவர்களைத் தெரிவுசெய்யும் உரிமை மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் கட்சிகளுக்கு அல்ல என்று அவர் கூறினார். (ப)

## யாழ். மாவட்டத்தில் அதிகரித்துள்ள "லீசிங்" முறையிலான ஓட்டோ விற்பனை

நாவற்குழி, ஓக. 25

ஓட்டோக்கள் குத்தகை (லீசிங்) அடிப்படையில் விற்பனையாவது யாழ். மாவட்டத்தில் மிக அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ளதைக் காண முடிகின்றது.

குத்தகைக்கு வாகனங்களை வழங்கும் தென்பகுதி நிறுவனங்களது வருகையும், புலம்பெயர் உறவுகள் இங்குள்ள தமது உறவினர்களுக்கு ஓட்டோக்களைக் குத்தகைக்கு வாங்க உதவியதும் இதற்கான காரணமாகும்.

இதனால் தற்போது யாழ். குடாநாட்டில் ஓட்டோக்களின் பாவனை திடீரென அதிகரித்து உள்ளமையைக் காணமுடிகின்றது.

பொதுமக்களும் தமது உறவுகளின் நிகழ்வுகள், கோயில்கள், தேவாலயங்களின் நிகழ்வுகள் எனச்செல்வது அதிகரித்துள்ளதால் ஓட்டோ உரிமையாளர்களும் வருமானம் பெற முடிவதாகக் கூறுகின்றனர். (த-121)

## ஆறு குடும்பங்களுக்கு தையல் இயந்திரங்கள்

தென்மராட்சி, ஓக. 25

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆறு குடும்பங்களுக்கு கடந்த 20 ஆம் திகதி பிரதேச செயலகத்தில் தையல் இயந்திரங்கள் கையளிக்கப்பட்டன.

சமூக சேவைகள் அமைச்சின் தாயை அல்லது தந்தையை இழந்த குடும்பங்களின் சுயதொழில் உதவித் திட்டத்தின் கீழ் தையல் இயந்திரங்கள் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனால் கையளிக்கப்பட்டன.

சிவராசா இராஜேஸ்வரி (கொடிகாமம்), செல்வகுமார் தியாக்கிளி( சாவகச்சேரி), மகேந்திரன் தெய்வமலர் (வெள்ளாம் போக்கட்டி), நடராசா ரஞ்சிதமலர் (இடைக்குறிச்சி கிழக்கு), நர்மதன் சிவாஜினி(கல்வயல்), இராசகுலசிங்கம் ஜெயரஞ்சி (தாவளை -இயற்றாலை) ஆகியோருக்கே தையல் இயந்திரங்கள் கையளிக்கப்பட்டன. (த-207)

## ரணில் அரசின் கடந்தகாலத் தவறுகளே சமாதான ஒப்பந்தத்தின் தோல்விக்குக் காரணம்

### ஆணைக்குழு முன் பேராசிரியர் ரஜீவ

கொழும்பு, ஓக. 25

ரணில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட பல தவறுகள் புலிகளுக்கும், அரசாங்கத்துக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கையின் தோல்விக்கு முக்கிய காரணமெனத் தெரிவித்திருக்கின்றார் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் சமாதானச் செயலகத் தலைவருமான பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகளின்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

சமாதான செயலகமானது விடுதலைப்புலிகளுக்கு நிதி வழங்கியிருந்தது. ஆனால் இந்த நிதிமூலம் விடுதலைப்புலிகள் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டனர் என்பதை அப்போதைய அரசு கண்காணிக்கவில்லை. இவ்வாறாக ரணில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட பல தவறுகள் சமாதான உடன்படிக்கையின் தோல்விக்குக் காரணமாக அமைந்துவிட்டன.

அதேவேளை -

சமாதான உடன்படிக்கையின் சில சரத்துக்கள் விடுதலைப்புலிகளை எதிர்க்கும் தமிழர்களைக் காட்டிக் கொடுப்பதாகவும் அமைந்தது. சில இடங்களில் சட்ட நடவடிக்கைகள் உரிய விதத்தில் மேற்[illegible]ப்படவில்லை.

திருகோணமலையில் ஐந்து இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அறிவிக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யப்படவில்லை. மேலும் சமாதான முயற்சிகளின் தோல்விக்குரிய காரணங்கள் பற்றி நோக்கினால், உண்மையில் யார் பாதிக்கப்பட்டவர்கள், கவனம் செலுத்தப்பட வேண்டியவர்கள் என்பதிலும் பார்க்க, பாதிக்கப்பட்டமைக்கு பரிகாரம் தேடுவதற்காக யார் பயங்கரவாதத்தை நாடினார்கள் என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டமையே காரணம் என்றும் அவர் மேலும் கருத்துத் தெரிவித்தார். (க)

## பதின்மூன்று கிலோமீற்றர் நீளமான சுரங்கப் பாதை மேல்; கொத்மலையில்

கொழும்பு,ஓக.25

இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட நீளமான சுரங்கமான மேல் கொத்மலை சுரங்கத்தின் நிர்மாணப் பணிகள் கடந்த 19ஆம் திகதி வெற்றிகரமாக நிறைவு பெற்றுள்ளதாக மின்சக்தி,எரிசக்தி அமைச்சின் ஊடகச் செயலாளரான தனுஷ்க்க ராமநாயக்க ஊடகமொன்றுக்குத் தகவல் வழங்கியுள்ளார்.இலங்கைப் பொறியியலாளர்களின் திட்டங்களுக்கு அமைய தோண்டப்பட்டுள்ள இச் சுரங்கத்தின் முழுமையான நீளம் ஏறத்தாள 13 கிலோமீற்றர்களாகும்.

மேலும்,நிலத்தை அகழ்ந்து மிகச் சரியாக இத்தகைய நீளமான சுரங்கம் ஒன்றை நிர்மாணிப்பது பொறியியல் ரீதியில் பெரு வெற்றியாகவே கொள்ளத்தக்கதாகும்.ஐந்து மீற்றர்கள் விட்டத்தைக் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தச் சுரங்கத்தைப் பார்வையிடுவதற்கு இவ்வாரத்தில் ஊடகங்களுக்கு வாய்ப்பளிக்கப்படவுள்ளதாகவும் ஊடகச் செயலாளர் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

மேல் கொத்மலை நீர்மின்சாரத் திட்டத்தின் செயற்பாடுகள் எண்பது வீதம் வரை நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது.அடுத்த ஆண்டின் இறுதியில் மேற்படி மின் உற்பத்தி தேசிய மின் உற்பத்தித் தொகுதியுடன் இணைந்து கொள்ளும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (த)

## மதவாச்சி - தலைமன்னார் ரயில் பாதைப் பணி இரண்டு கட்டமாக 30 மாதங்களில் பூர்த்தியாகும்

கொழும்பு.ஓக.25

மதவாச்சிக்கும் தலை மன்னாருக்கும் இடையேயான புகையிரதப் பாதையின் அபிவிருத்தி வேலை கள் இரண்டு கட்டங்களாக நிறைவேற்றப்படவுள்ளதாகப் போக்கு வரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தப் புகையிரதப் பாதையின் மொத்த நீளம் 110 கிலோ மீற்றர் ஆகும். இதில் 6 முக்கிய பாலங்களும், 6 புகையிரத நிலையங்களும் அடங்கும்.

முதற் கட்டமாக மதவாச்சியிலிருந்து மடு வரையான வேலைகள் நிறைவேற்றப்படும்.இதற்கு ஆகும் மொத்தச் செலவு 7 ஆயிரத்து 350 மில்லியன் ரூபாய்களாகும்.

இந்த வேலைகள் அடுத்த ஆண்டு முடிவு[illegible] நிறைவேற்றப்படும். இரண்டாம் கட்ட வேலைகள் மடுவிலிருந்து தலை மன்னார் வரை மேற்கொள்ளப்படும். இதற்கான மொத்தச் செலவு 17 ஆயிரத்து 220 மில்லியன் ரூபாய்களாகும்.

மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரையிலான புகையிரதப் பாதை வேலைகள் 30 மாதங்களில் நிறைவுபெறும் எனவும் மேலும் கூறப்படுகின்றது. (க)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 10 | 26.08.2010 |
| | வியாழக்கிழமை |
| திதி: | : துதியை |
| | பி.இ.02.39 வரை |
| நட்சத்திரம் : | பூரட்டாதி |
| | பி.இ.03.09 வரை |
| சுபநேரம் | : 07.35-09.05 வரை |
| ராகுகாலம் | : 01.35-03.05 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



## க.கை.விக்கினேஸ்வரன்
### (இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதிக் கிளை, யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதிக் கிளையைச் சேர்ந்த திரு.கைலாசபிள்ளை விக்கினேஸ்வரன் சிறந்த சேவைகளில் ஒன்றான வங்கிச்சேவையில் தொடர்ந்து 28 வருடங்களுக்கு மேல் சீரிய சேவையாற்றியமைக்காக 21.08.2010 இல் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (B.M.I.C.H) வங்கியின் தலைமையகத்தினால் தங்கப்பதக்கம் சூட்டி கௌரவிக்கப்பட்டமையையிட்டு நாம் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம். மேலும் இவர் தீவகத்தின் தலைத்தீவாம் மண்டைதீவின் முன்னாள் கிராமசபைத் தலைவர் (சேர்மன்) அமரர் கைலாசபிள்ளையின் மகனும் யாழ்.இந்துவின் மைந்தனும், மாணவத் தலைவனும், பழைய மாணவர் சங்கச் செயற்குழு உறுப்பினரும், யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயற்குழு உறுப்பினரும் ஒரு சிறந்த சமூக சேவையாளருமாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

### வாழ்த்துபவர்கள்

சிவாச்சாரிய குருமணி பே.ந.பிரபாகேஸ்வரக்குருக்கள் (உபதலைவர், யாழ்.இந்துக்குருமார் ஒன்றியம்)
அருட்திரு.ஜி.பிலேந்திரன் அடிகளார் (கிறிஸ்தவ நாகரிகத்துறை யாழ்.பல்கலைக்கழகம்)
கம்பவாரிதி இ.ஜெயராஜ் (அகில இலங்கைக் கம்பன் கழகம்)
திரு.ஆறு.திருமுருகன் (செஞ்சொற் செல்வர்)
பேரா.திரு.பொ.பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)
பேரா.திரு.என்.சண்முகலிங்கன் (இந்நாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)
பேரா.திரு.அ.சண்முகதாஸ் (தமிழ்த்துறை)
பேரா.எஸ்.சத்தியசீலன் (பீடாதிபதி, உயர் பட்டப் படிப்புக்கள் பீடம்)
திருமதி யோ.பற்குணராசா (முதல்வர், மாநகர சபை)
திரு.தே.ஸ்ரீமோகனன் (ஊர்காவற்றுறை AGA)
திரு.வே.கணேசராசா (அதிபர், யாழ்.இந்துக் கல்லூரி)
திரு.ஓங்காரமூர்த்தி (அதிபர், யாழ்.மத்திய கல்லூரி)
திருமதி வே.பேரின்பநாதன் (அதிபர், யாழ்.இந்து மகளிர் கல்லூரி)
திருமதி க.பொன்னம்பலம் (அதிபர், யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி)
திரு.மா.பிரபாகரன் (ஆங்கில விரிவுரையாளர், யாழ்.கல்வியற்கல்லூரி)
திரு.வே.ஞானகாந்தன் (அதிபர், ஸ்ரான்லிக் கல்லூரி)
டாக்டர் எஸ்.ரவிராஜ் (அறுவைச் சிகிச்சை நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை)
டாக்டர் ரி.பேரானந்தராசா (பொது மருத்துவ நிபுணர்)
டாக்டர் என்.விமலகாந்தன் (சிரேஷ்ட மருத்துவர்)
திரு.எஸ்.தியாகலிங்கம் (அதிபர், யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை)
திரு.சண்.தயாளன் (உடற்கல்விப் பணிப்பாளர், யாழ்.கல்விவலயம்)
திரு.மா.இளம்பிறை (யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி விரிவுரையாளர்)
திரு.பொ.சிவதாஸ் (சிரேஸ்ட நில அளவை, அத்தியட்சகர், யாழ்ப்பாணம்)
திரு.மு.திருநாவுக்கரசு (முன்னாள் மாவட்ட நீதிபதி)
திரு.க.கேசவன் (பதில் நீதிபதி)
திரு.பா.தவபாலன் (சட்டத்தரணி)
திரு.குகதாசன் (ஒப்பந்தகாரர்)
திரு.ஏ.இராமச்சந்திரன் (ஒப்பந்தகாரர்)
திரு.ர.நகுலேஸ்வரன் (ஒப்பந்தகாரர்)
திரு.எம்.ஞானசீலன் (வர்த்தகர், வியாபார நிறுவனம்)
திரு.ஜெயந்தன் (சங்கு சக்கரம் வியாபார ஸ்தாபனம்)
திரு.செ.ரஜனிகாந் (அம்பாள் மரக்காலை, நல்லூர்)
திரு.எஸ்.நவநாதன் (நல்லூர் மூத்த விநாயகர் கோயிலடி)
திரு.க.முருகானந்தன் (வர்த்தகர், அரியாலை)
திரு.சே.சேதுராசா (அதிபர், நெல்லியடி ம.ம.வி.)
திரு.கை.பேரின்பநாதன் (ஓய்வுபெற்ற அதிபர், மண்டைதீவு)
திரு.அ.ஸ்ரீபத்மராசா (ஜே.பி., மண்டைதீவு)
திரு.என்.சுந்தரராசா (கிராம சேவை அதிகாரி, யாழ்ப்பாணம்)
திரு.தவநேசன் (கிராம சேவை அதிகாரி, நீராவியடி J/101)
திரு.எஸ்.சுந்தரலிங்கம் (கிராம சேவை அதிகாரி, J/104)
திரு.எஸ்.சபேசன் (மாருதி டிராக்ரர் என்ஜினியர்ஸ்)
திரு.எஸ்.சச்சிதானந்தசிவம் (வர்த்தகர்)
திரு.ஏ.சிவகாந்தா (நிதியியல் ஆலோசகர், காப்புறுதிக் கூட்டுத்தாபனம்)
திரு.என்.தேவா (நிதியியல் ஆலோசகர், காப்புறுதிக் கூட்டுத்தாபனம்)
திரு.ட.கிரிதரன் (பணிப்பாளர், கமத்தொழில் காப்புறுதிச் சபை)
திரு.நா.தனேந்திரன் (ஒப்பந்தகாரர், யாழ்ப்பாணம்)
திரு.பீ.இராஜலிங்கம் (முன்னாள் உதவி முகாமையாளர், இலங்கை வங்கி)
திருவாளர்கள் பி.எஸ்.பாலமுருகன், செந்தில் (நாதஸ்வர, தவில் வித்துவான், நல்லூர்)
திரு.என்.சச்சிதானந்தன் (இளவரசி ரெக்ஸ்ரைல்ஸ், யாழ்ப்பாணம்)
திரு.இரட்ணவடிவேல் (விஸ்ரா விசன்)
திரு.ப.பத்மகுமரா (பிரதேச செயலகம், கோப்பாய்)

(இ/5701149)

# கண்ணீர் அஞ்சலி

## வைத்தீஸ்வரன் சாரங்கன்





சென்ற முதல் நாள் தொட்டு
வென்ற பல கதை சொல்லி
என்றுமில்லா புன்னகையால்-
மனதையெல்லாம்
மென்று தின்ற வீரனவன்

நெருப்பெரிந்த விவாதப் பேச்சும்
தருநிழல் குளிரான கவிவரியும்
மருதாணி விரலான சங்கீதக் குரலும்
ஒருங்கே கொண்ட கனியவன்

உடல் உருக்கி உதவிட்ட உத்தமனே!
கடல் கொதிக்கும் கண்ணீரால் கருகிப்போனோம்
மடல் மூடி மறுதவம் செய்வதேனோ
இடமெங்கும் உன் நினைவால் நனைந்து போனோம்

தேரோடும் தெருக்கலெல்லாம் திகைத்து நிற்க
தீராத உறக்கத்தால் திசைமறந்து -எமை
சாராமல் நின்ற போதும்
மாறாத வடுக்களோடு எம் நெஞ்சில்- நீ சாரா

என்றென்றும் உன் நினைவுடன்:
24ஆம் அணி நண்பர்கள், மருத்துவ பீடம்

(இ/102435)

## வெளிநாட்டில் உயர்கல்வியைத் தொடர விரும்புவர்களுக்கான இலவச நேர்முகத் தேர்வு

**Express International Studies and Consultants**
ஆகிய நாம் இதுவரை ஆயிரக்கணக்கான மாணவர்களை வெளிநாடுகளில் உயர் கல்வியினைக் கற்று பட்டதாரியாவதற்கு (Degree) அனுப்பியுள்ளோம். அந்த வகையில் யாழ் மாணவர்களின் நன்மை கருதி மாணவர்களின் எதிர்காலக் கல்வி சம்பந்தமான அறிவுரைகளுக்கும், ஆலோசனைகளுக்காகவும் இவ் நேர்முகத் தேர்வை நடாத்துகின்றோம்.

இத் தேர்விலே எதிர்வரும் **December – January Intake** இற்கான அனுமதிகளைப் பெற விரும்பும் மாணவர்களும், A/L பரீட்சை எழுதிய மாணவர்களும் பயனடையமுடியும். இந்நேர்முகத்தேர்விலே பங்குபற்றுவதன் மூலமாக மாணவர்கள் தங்கள் தகுதியினை, சுயமதிப்பீடு செய்து, உயர் கற்கைநெறிகள் சமபந்தமான பூரண அறிவை அடைவார்கள்.


மாணவர்களுக்கான ஆலோசனைகளும், வழிகாட்டுதல்களும் துறைசார் அனுபவமுள்ள பிரபல சட்டத்தரணிகளினால் வழங்கப்பட உள்ளது

திகதி : 28.08.2010 , 29.08.2010
நேரம் : 10.00 - 04.00 வரை
இடம் : British College of Higher Studies (Cosy Hotel இற்கு மேலே)
*No:15, 2/1, Sirampiyady Lane, Off Stanley Road, Jaffna.*

தொலைபேசி.இல:
0777222422, 071429935,

குறிப்பு: நேர்முகத்தேர்விற்கு வருபவர்கள் தமது சுயவிபரக்கோவை மற்றும் கல்விச்சான்றிதழ்களைக் கொண்டு வருவது வரவேற்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் தீர்த்தத் திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. துர்க்கை அம்மன் தீர்த்தமாடுவதற்காக புஸ்பகரணி தீர்த்தக்கேணி நோக்கி எழுந்தருளி வருவதையும், தீர்த்தக் கேணியருகில் வீற்றிருந்து அடியார்களுக்கு அருள்காட்சியளிப்பதையும் முதலிரு படங்களிலும், தீர்த்தமாடும் பக்தர் கூட்டத்தை இறுதிப்படத்திலும் காணலாம்.
*(படங்கள்: நேசன்)*

# இரணைமடு நீர் விநியோகத்துக்குள் உள்ளடங்காத பகுதிகளுக்குக் குடிதண்ணீர் வழங்க 280 மில்லியன் ரூபா

## ஜப்பான் அரசு நன்கொடையாக வழங்கியது

யாழ்ப்பாணம்,ஓக.25

இரணைமடு நீர் விநியோகத்துக்குள் உள்வாங்கப்படாத கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் நெடுந்தீவு பிரதேசங்களின் பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்க ஜப்பான் 280 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணை மற்றும் ஆலோசனையின் பேரில் ஜப்பான் மேற்படி நிதியை தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபைக்கு வழங்கியுள்ளது.

வடக்கு மாகாண தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் உதவிப் பொது முகாமையாளர் எந்திரி தி.பாரதிதாசன் இத்தகவலைத் தெரிவித்தார்.

பாரம்பரிய கைத்தொழில் சிறுதொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தேசிய நீர்வழங்கல் சபை அமைச்சர் தினேஷ் குணவர்த்தனாவுக்கு சமர்ப்பித்த முன்மொழிவு பத்திரத்தை அடுத்தே இதற்கான திட்டம் அங்கீகரிக்கப்பட்டு ஜப்பான் நாடு 280 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இதனையடுத்து இரணைமடு மூலமான குழாய்நீர் விநியோகத்திற்குள் உள்வாங்கப்படாத கிளிநொச்சி, யாழ்ப்பாணம், நெடுந்தீவு ஆகிய பகுதிகளின் வரட்சிப் பிரதேசங்களுக்கு நுண் நீர்விநியோகத் திட்டத்தின் கீழ் குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது.

மேற்படி திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் அரச அதிபர்களையும், உள்ளூராட்சி பிரதிநிதிகளையும், யாழ்.மாநகர மேயரையும் ஏற்கனவே சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

மேற்படி திட்டம் ஆரம்பிப்பது குறித்து இறுதி முடிவு இம்மாதம் 31 ஆம் திகதிக்குள் மேற்கொள்ளப்பட்டதும், வேலைகள் வைபவரீதியாக கிளிநொச்சியிலும், யாழ்ப்பாணத்திலும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-302)

### ரம்ழான் சிந்தனை

இம்மாதம் ஐயமின்றி மகத்தானது. அருள்வளம்மிக்கது. ஆனால் வெறுமனே காலச் சக்கரத்தின் சுழற்சியால் இந்த மாதத்தை இழந்தவர்கள் அனைவருக்கும் இதன் அருள்வளம் கிடைத்துவிடாது.

-எம்.ஏ.காதர்-




# யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

வலி.வடக்கு, ஓக. 25

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் நடத்தப்படவுள்ள எட்டுப் பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மூன்று மாதங்களுக்கான குறுகிய காலப் பயிற்சி நெறிகளுக்கு இவ்விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பயிற்சிக் காலத்தில் நாளாந்த ஊக்குவிப்புப் பணம் போக்குவரத்துக்கான பிரயாண பருவகாலச் சீட்டு மற்றும் சீருடைகளும் வழங்கப்படவுள்ளன.

10 ஆம் ஆண்டு சித்தியடைந்தவர்களும், 17 வயதைப் பூர்த்தி செய்தவர்களும் இப்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் திருத்துதல், வீட்டு மின்சார பாவனைப் பொருள்கள் திருத்துதல், வானொலி மற்றும் தொலைக்காட்சி உபகரணங்கள் திருத்துதல், கணணிப் பிரயோக உதவியாளர், காஸ் மற்றும் 'ஆர்க்வெல்டிங்', கட்டுதமானப் பயிற்சி நெறிகளான குழாய் இணைப்பு, மரவேலை, மேசன் ஆகிய பயிற்சி நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை பணிப்பாளர், தொழில்நுட்பவியல் கல்லூரி, த.பெ.இல. 04, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த-86)



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கல்லூரி சதுர வளாகத்தில் முதல்வர் என்.ஏ.விமலேந்திரன் தலைமையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், திருமதி கௌரி சண்முகலிங்கன் பேராயர் கலாநிதி டானியல் எஸ்.தியாகராசா, இணை உப அதிபர் வண.ஜி.நடராஜா, கலாநிதி எஸ்.ஜெபநேசன், வண. டி.எஸ்.சொலமன், இடைநிலை மேற்பார்வையாளர் அ.ஜெயராஜன் ஆகியோர் முன்வரிசையில் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். *(படம்-இரா.சுதா)*

# புலமைப் பரிசில் விடைத்தாள் மதிப்பீடு யாழ்ப்பாணத்திலும்

அச்சுவேலி,ஓக.25

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

புலமைப் பரிசில் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் யாழ். மாவட்டத்தில் இரண்டு நிலையங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் விடைத்தாள் மதிப்பீடுப் பணியில் 16 குழுக்கள் ஈடுபடவுள்ளன.

யாழ்.இந்துமகளிர் கல்லூரியில் செயற்படவுள்ள மதிப்பீட்டு நிலையத்தில் 10 குழுக்களும் நெல்லியடி வடஇந்து மகளிர் கல்லூரியில் செயற்படவுள்ள நிலையத்தில் 6 குழுக்களும் பணியில் ஈடுபடவுள்ளன.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் செப்ரெம்பர் 4ஆம் திகதி தொடக்கம் 9ஆம் திகதிவரை 6 தினங்களுக்கு நடைபெறவுள்ளன. (த-11-26)

# பெரும்போக செய்கைக்கு தயாராகும் விவசாயிகள்

கொழும்புத்துறை,ஓக.25

அண்மையில் பெய்த மழையை அடுத்து யாழ்.குடாநாட்டு நெற்செய்கையாளர்கள் பெரும்போக பயிர்ச் செய்கைக்குத் தயாராகும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

வயல் நிலங்களை சீர்செய்வதிலும், வரம்புகளை அமைப்பதிலும், உழவு வேலைகளிலும் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

புதிதாக நெற்செய்கைக்கு அனுமதிக்கப்பட்ட தென்மராட்சி, அரியாலைப் பகுதி விவசாயிகள் நீண்ட காலத்துக்குப் பின்னர் இம்முறை நெற்செய்கையை மேற்கொள்ள இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதனைவிட காரைநகர், சண்டிலிப்பாய், தீவகப் பகுதிகளிலும் பெரும்போக விவசாயத்துக்கான முன் நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-135)

# கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்திக்கு வங்கிகளில் கடன் பெறுவதற்கு உதவுங்கள்

## யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.25

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்திக்கு வங்கிகளிடமிருந்து கடன்களைப் பெற்றுத் தர உதவி செய்யுமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் அண்மையில் அரசாங்க அதிபருடன் மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தனர்.

இதன்போதே இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும் தமது சேவைக் கட்டணங்களை அதிகரித்துத் தருமாறும் சங்கங்களின் தலைவர்கள் கோரிக்கை விடுத்தனர். அத்துடன் வியாபாரத்தை பாதிக்காத வகையில் கூட்டுறவுச் சங்கங்களின் பழைய நிலுவைகளைச் செலுத்த நடவடிக்கை எடுக்குமாறும், சமுர்த்தி முத்திரை விநியோகத்தை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக விநியோகிக்க ஆவன செய்யுமாறும், அந்த விநியோகத்தை மேற்கொள்ள முற்பணம் தந்து உதவுமாறும் சங்கங்களின் அதிகாரிகள் அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாகப் பதிலளித்த அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் இந்தக் கோரிக்கை தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுப்பதாகவும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்கு எவ்வாறு சேவைகளை வழங்க வேண்டும் என்பது தொடர்பாகவும் விளக்கமளித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவலைகள்

முதலாம் ஆண்டு

9 ஆம் ஆண்டு





பிறப்பு:
18.05.1945

இறப்பு:
24.08.2009

அமரர்
**பீற்றர் பொன்கலன்**

(கிப்சலா தச்சுத் தொழிற்சாலை
உரிமையாளர்)

25.08.2010

பிறப்பு:
25.07.1963

இறப்பு:
18.07.2001

**இம்மானுவேல் ஜேம்ஸ்**
**(விஜயன்)**

(வெல்டிங் வேக்ஸ் உரிமையாளர்)

தேவன் உம்மை அழைத்து
தேவை என்று வைத்துக்கொண்டான்
தேசத்தில் நாம் வாழ
தேடி வைத்தீர் செல்வங்கள்
இன் முகம் காணாமல்
ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் முகம் மறவோம்
எம் உள்ளத்தில் என்றும்
ஊராரைக் கூட்டி
உபசரிக்கும் பழக்கம் தந்தாய்
இன்று உங்கள் நினைவாய் காட்டி
உபசரிப்பேன் ஆனால் நீங்கள் இல்லை.

(102422)

இல.33, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் அன்புடன்:
மனைவி, பிள்ளைகள்.
பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்



## இராசநாயகம் சற்குணம்

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இராசநாயகம் சற்குணம் கடந்த (22.08.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.08.2010) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கல்லுண்டாய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உறவினர்கள்.

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

(102425)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை மத்திய வங்கியின் கலந்துரையாடல் "கிறீன் கிராஸ்" விடுதியில் அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
இலங்கை மத்தியவங்கியின் பிரதி ஆளுநர் டபிள்யூ.எம்.கருணாரத்ன உரையாற்றுவதை முதலாவது படத்திலும், வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி வி.அமிர்தலிங்கம், மத்திய வங்கியின் வடபிராந்தியப் பிரதிப் பணிப்பாளர் இ.சிறிதரன் ஆகியோர் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம்.

# நாவலர் பெருமானின் உருவச்சிலை மீண்டும் நல்லூர் மணிமண்டபத்துக்கு

## நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

நல்லூர்,ஓக.25

நல்லூர் நாவலர் மணிமண்டபத்திலிருந்து இடம்மாற்றப்பட்ட நாவலர் பெருமானின் திருவுருவச் சிலை மீண்டும் அதே இடத்தில் வைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.மாநகரசபை மாநாட்டு மண்டபத்தில் பாரம்பரிய கைத்தொழில் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற கூட் டத்தில் ஒரு மனதாக முடிவெடுக்கப்பட்டது.

நாவலர் மணிமண்டபத்தைச் சுற்றி மதில் இருப்பதால் திருவிழாக் காலங்களில் பக்தர்களுக்கு பல அசௌரியங்கள் ஏற்படுவதுடன் ஏனைய காலங்களில் கலாசாரச் சீர்கேடுகள் இடம்பெறுவதாகவும் எனவே குறிப்பிட்ட மதிலை அகற்றுவதுடன் மதிலுக்குப் பதிலாக கம்பிகளினாலான அழகுபடுத்தப்பட்ட வேலிகளைப் போடுவது எனவும் உற்சவ காலத்தில் அவற்றை பக்தர்களுக்கு இடையூறுகளற்ற வகையில் கழற்றக் கூடியதாகவும் இருக்கும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கூறினார்.

மதிலுக்கு அண்மையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சகடையையும் இடம் மாற்ற வேண்டும் எனவும் நாவலரின் பண்பாடுகளைக் கொச்சைப்படுத்தாத வகையில் செயற்பட வேண்டும் என்ற உணர்வு பூர்வமான நேயப்பாட்டுடன் கலந்துகொண்டவர்கள் ஒருமனதாக இந்த முடிவுகளை மேற்கொண்டிருந்தனர் எனவும் முதல்வர் தெரிவித்தார்.

நேற்றைய கூட்டத்தில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், முன்னாள் அரச அதிபர் கே.கணேஸ், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், தெல்லிப்பழைதுர்க்கைஅம்பாள்தேவஸ்தான தலைவர் ஆறு.திருமுருகன், யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் மற்றும் பேராசிரியர்கள், நாவலர் சபை, இந்துகுருமார் ஒன்றியம், சைவக்குருமார் ஒன்றியம், இந்து கலாசாரப் பேரவை, மாநகரசபை சைவசமய விவகாரக்குழு, சங்கிலியன் மன்றம், நல்லூர், யாழ்ப்பாணம் பிரதேச செயலர்கள் உட்பட இந்துப் பெரியார்கள், மன்றங்களின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (த-111)

## தரிசு நிலங்கள் பற்றிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக.25

வலி.மேற்கு பிரதேச சபையில் பயன்படுத்தப்படாத தரிசு நிலங்களின் முகாமைத்துவமும்-பிரதேச அபிவிருத்தியும் தொடர்பான பிரதேச கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை சுழிபுரம் பிரதேச சபையில் இடம்பெறும்.

சுழிபுரம் பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி தலைமையில் கருத்தரங்கு இடம்பெறும்.

இதில் சுழிபுரம் பிரதேச பொறியியலாளர் ஆர்.ரி.இராம்ச்சந்திரனும், சுழிபுரம் ஐ.என்.எஸ்.ஜி.டி. இயக்குநருமான திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன் ஆகியோர் தரிசு நிலப் பயன்பாடு தொடர்பாக விளக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வுக்கு தரிசு நிலமுகாமைத்துவ அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட 50 பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.

'வலி.மேற்குப் பிரதேசத்துக்கு உட்பட்ட 9 முக்கிய பிரதேசங்கள் தொடர்பாக விரைவில் தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது. (த-302)

# உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி 28இல் ஆரம்பம்

அச்சுவேலி,ஓக.25

ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் 24ஆம் திகதிவரை மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ளன.

முதற்கட்டம் ஓகஸ்ட் 28ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 9ஆம் திகதி வரையும், இரண்டாம் கட்டம் செப்ரெம்பர் 10ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரையும், மூன்றாம் கட்டம் செப்ரெம்பர் 13ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் 24ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் ஒவ்வொரு கட்டமும் தனித்தனியாக யாழ்.மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆகிய மூன்று நிலையங்களிலும் நடைபெறவுள்ளன.

யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள விடைத்தாள்கள் மதிப்பீட்டுப் பணியில் 6 மதிப்பீட்டுக் குழுக்கள் பணியில் ஈடுப டவுள்ளன. பொருளியல், கணக் கியல், சித்திரம் ஆகிய பாடங்களின் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்படவுள்ளன.

இரண்டாம் கட்டமாக யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ள விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் 10 மதிப்பீட்டுக் குழுக்கள் செயற்படவுள்ளன. தமிழ், அளவையியல் விஞ்ஞானம் ஆகிய பாடங்களின் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்படவுள்ளன.

மூன்றாம் கட்டமாக யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள மதிப்பீட்டுப் பணியில் 10 குழுக்கள் ஈடுபடவுள்ளன. இதில் இந்து சமயம், இந்து நாகரிகம், நாடகமும் அரங்கியலும், புவியியல் ஆகிய நான்கு பாடங்களின் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்படவுள்ளன.

மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறும் பாடசாலைகள் மூன்றாம் தவணைக்காக ஆரம்பிக்கும் தினங்கள் பொருத்தமான தினங்களுக்கு பின்தள்ளி போடப்பட்டிருப்பதுடன் இழந்த நாள்களுக்குச் சனிக்கிழமைகளில் பதில் பாடசாலைகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (த-11)

# கால்நடைகளுக்கான தடுப்பூசி இதுவரை ஏற்றப்படவில்லை

வலி.வடக்கு,ஓக.25

கால்நடைகளுக்கு வருடாந்தம் ஏற்றப்படும் தடுப்பூசி இதுவரை ஏற்றப்படவில்லையென கால்நடை வளர்ப்போர் கவலை தெரிவித் துள்ளனர்.

வருடாந்தம் கால்நடைத் திணைக்களத்தினால் கால்நடைகளுக்கு தொற்று நோய்கள் மற்றும் வருத்தங்கள் வராது தடுப்பூசி ஏற்றப்படுவது வழமையாகும்.

யாழ்.குடாநாட்டில் இம்முறை கடந்த ஆண்டுகளைவிட கூடிய வெப்பமான காலநிலை காணப்படுவதாகவும், இதனால் ஆடுகள், மாடுகள், கோழிகள், நாய்கள் என வளர்ப்புப் பிராணிகள் நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகும் நிலை அதிகரித்துள்ளதாகவும் அவற்றை வளர்ப்போர் தெரிவிக்கின்றனர்.

எனினும் இவற்றுக்கான தடுப்பூசி இதுவரை ஏற்றப்படவில்லையெனக் கூறப்படுகின்றது. இது தொடர்பாக வலி.தெற்குப் பிரதேசசபையின் மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சம்மேளனங்கள் சுட்டிக்காட் டியுள்ளன. (த-86)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# அமைச்சர் பௌஸி 12ஆம் திகதி வருவார்

யாழ்ப்பாணம், ஓக.25

அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் எம்.எச்.எம்.பௌஸி செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதியே யாழ்.மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இம்மாதம் 28ஆம் திகதி யாழ்.மாவட்டத்துக்கு அமைச்சர் பௌஸி வருகை தரவுள்ளதாக முன்னர் தெரிவிக்கப்பட்டபோதும் சில காரணங்களினால் அது பிற்போடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இங்கு வருகைதரும் அமைச்சர் பௌஸி யாழ்.மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தவுள்ளார்.

இக்கலந்துரையாடலில் தேசிய பாதுகாப்பு தினம் இம்முறை யாழ்.மாவட்டத்தில் கொண்டாடப்படவுள்ளதால் அது தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (த-319)

# ஜும்மா பள்ளிவாசல் வீதியில் சுத்திகரிக்கப்படாத வடிகால்கள்

யாழ்ப்பாணம்,ஓக.25

யாழ்.நகரில் ஜும்மா பள்ளிவாசல் வீதியில் உள்ள வடிகால்கள் துப்புரவு செய்யப்படாமையால் கழிவுநீர் தேங்கி நின்று இப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாக வர்த்தகர்கள் முறைப்பாடு செய்கின்றனர். இந்த வடிகால்களில் கழிவுநீர் தேங்கி நிற்ப தால் ஈக்கள், நுளம்புகளின் பெருக்கமும் அப்பகுதியில் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இந்த வடிகால்கள் சேதப்பட்டுக் காணப்படுவதால் கழிவுநீர் வழிந்தோட முடியாமல் வீதிக்கு வருகின்றது.

உணவகங்கள், பள்ளிவ்ாசல் என்பன உள்ள இந்த வீதியின் கால்வாயில் கழிவுநீர் தேங்கித் துர்நாற்றம் வீசுவது குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (த-26)

# யாழ்.நகரில் பட்டுப்புளி வியாபாரம்



இந்த பட்டுப்புளி நல்லூர் கந்தன் ஆலய சுற்றாடல் பகுதியிலும் அதிகளவில் வைத்து விற்பனை செய்யப்படுகின்றது.

யாழ்ப்பாணம்,ஓக.25

நீண்ட காலத்தின் பின்னர் பட்டுப் புளி வியாபாரம் யாழ்.நகரில் களை கட்டியுள்ளது.

தென்பகுதியில் இருந்துவரும் வியாபாரிகள் இந்த பட்டுப் புளிகளைப் பெருமளவில் எடுத்துவந்து விற்பனை செய்கின்றனர்.

ஒரு சுண்டு பட்டுப்புளி 50 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

நீண்ட காலத்தின் பின்னர் பட்டுப் புளியைக் கண்ட குடாநாட்டு மக்கள் அதனை ஆவலுடன் [illegible] (த-26)

# குடாநாட்டில் மழை தொடர்ந்தால் வெங்காயப் பயிர் பாதிப்படையும்

யாழ்ப்பாணம்,ஓக.25

யாழ்.குடாநாட்டில் மழை இன்னும் சில தினங்கள் தொடர்ந்து பெய்தால் வெங்காயப் பயிர்கள் கடுமையாகப் பாதிக்கக் கூடும் என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு நாள்களாக மழை விட்டு விட்டுப் பெய்த வண்ணம் உள்ளது.

பயிரிடப்பட்டுதற்போது அறுவடையை [illegible]டிருக்கும் வெங்காயப் பயிர்கள் இந்த மழையினால் பாதிக்கப்படும் அபாய நிலை உள்ளதாக அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை- நீர்வேலி, கோப்பாய் பகுதி விவசா யிகள் சிலர் நேற்று முன் தினம் திங்கட் கிழமை அறுவடை செய்து தோட்டங் களில் காயவைத்த வெங்காயம் நேற்று செவ்வாய்க்கிழமை பெய்த மழையில் முற்றாக நனைந்து சேதமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில் வெங்காயப் பயிர்கள் முழுமையாகப் பாதிக்கப்படலாம் என்று விவசாயிகள் தெரிவித்தனர். (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கலாசாரத்தை இழக்கும் அபாயத்தில் யாழ்ப்பாணம்

ஈழத் தமிழர்களது கலாசாரத் தலைநகரம் என அறியப்பட்ட யாழ்ப்பாணம் இன்று புதியதொரு மாற்றத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. பொருளாதார அபிவிருத்தியினை நோக்கிய தொரு பாதையில் அது உறுதியுடன் பயணித்தாலும் தமிழர்களின் தனித்துவ கலாசார அடையாளங்களை இழந்து போய்விடுவோமா என்ற அச்சத்தையும் அது ஏற்படுத்துகின்றது.

குடாநாட்டில் நிலையாக இருப்பவர்களை விட பிற மாவட்டங்களிலிருந்து நீண்டநாள்களின் பின்னர் யாழ்ப்பாணத்திற்குச் செல்பவர்கள் இந்த மாற்றத்தை இலகுவில் உணர்ந்துகொள்கிறார்கள். அண்மையில் பணி நிமித்தமாக ஐந்து நாட்கள் குடாநாட்டில் தங்கியிருந்த நான் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று வந்தேன். இதன்போது அங்கு ஏகப்பட்ட மாற்றங்கள் இடம்பெற்றிருப்பதை நான் விளங்கிக்கொண்டேன்.

இந்த மாற்றங்களில் பொரும்பாலானவை ஆக்கபூர்வமானவையாகவும் வினைத்திறன் கொண்டவையாகவும் இருப்பதாகவே எனக்குத் தெரிகிறது. இருப்பினும், நேரெதிர் மாறான விளைவுகளைத் தரவல்ல குறித்த சில அம்சங்களையும் அவதானிக்கமுடிந்தது.

இதுநாள் வரைக்கும் நாட்டின் தென் பகுதிகளில் மாத்திரம் இருந்த தனியார் வங்கிகள், வாடகைக்கொள்வனவு (லீசிங்) நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் பல்வேறுபட்ட வர்த்தக தாபனங்கள் என்பன குடாநாட்டின் பல பாகங்களிலும் தங்களது கிளைகளைத் திறந்துவருகின்றன.

வழமைபோலவே குடாநாட்டு மக்களிடத்தே செல்வம் நிறைந்து கிடக்கிறது. தங்க ஆபரணங்களாகவும், நிலையான வைப்பிலுள்ள பணமாகவும் அசையும், அசையாச் சொத்துக்களாகவும் இவை இருக்கின்றன. புலம்பெயர்வாழ் நாடுகளில் யாழ்ப்பாணத்தவர்கள் அதிகம் இருப்பதும் குடாநாட்டுக்கு அந்நியச் செலாவணி வந்து குவிவதற்கான பிரதான காரணம். புலம்பெயர் நாடுகளில் வசித்துவரும் சுமார் 7லட்சத்து 50 ஆயிரம் ஈழத் தமிழர்களில் 65 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் யாழ்ப்பாணத்தவர்களே எனப் புள்ளிவிவரம் ஒன்று கூறுகிறது.

குடாநாட்டில் துரித கதியில் கடை விரிக்கும் இந்தத் தனியார் வங்கிகளின் குறி அங்கு குவிந்திருக்கும் தங்க நகைகள் மீதும், அவர்களது பணத்தின்மீதும் இருக்கிறது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது.

குடாநாட்டில் களவுகள் அதிகரித்துவிட்டமையால் தங்களது நகைகள் மற்றும் பணத்தை வங்கிகளில் பத்திரப்படுத்தவே மக்கள் விரும்புகிறார்கள்.

மக்களுக்கான சேவை என்பதற்கு அப்பால், தங்களது வருமானத்தைப் பெருக்கிக்கொள்வதற்கான ஓர் உபாயமாக தனியார் மற்றும் அரச வங்கிகள் தங்களது கிளைகளை வேகமாகத் திறந்து வருகின்றன. இருப்பினும், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இந்த வங்கிகள் தொழில் முயற்சிகளுக்கான கடன்திட்டங்களையும் குடாநாட்டில் முன்னெடுத்து வருவது இங்கு குறிப்பிட்டத்தக்கது.

குடாநாட்டுக்குச் செல்லும் யாழ். கண்டி நெடுஞ்சாலையின் இரு மருங்கிலும் பல்வேறுபட்ட பொருள்களின் பிரமாண்டமான விளம்பரக் கட்டவுட்களைக் காண முடிகிறது. குடாநாட்டில் தமக்கான சந்தை வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதனால் அனைவருமே யாழ்ப்பாணத்துச் சந்தையில் தமக்கென்றோர் இடத்தைப் பிடிப்பதற்கு முண்டியடிக்கிறார்கள்.

இது தவிர, குடாநாட்டில் தற்போது உட்கட்டுமான அபிவிருத்திப் பணிகளும் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. உதாரணமாக, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் யாழ்ப்பாணம் தொடக்கம் பருத்தித் துறை வரையிலான வீதி அகலமாக்கப்பட்டு தாரிடப்பட்டு வருகிறது.




காங்கேசன்துறைச் சிமெந்து ஆலையை மீளவும் இயக்குவதற்கான முன்முயற்சி கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட் டன. இதுதவிர, குடாநாட்டுக்கான ரயில் பாதையை மீளவும் அமைக்கும் வகையில் ரயில் பாதையை அண்மித்த பகுதிகளில் கண்ணிவெடியகற்றும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தவர்களைப் பங்கு வர்த்தகத்தில் ஈடுபடவைக்கும் ஒரு முனைப்பாக கொழும்புப் பங்குச் சந்தையின் கிளையொன்று அண்மையில் யாழ். நகரத்தில் திறக்கப்பட்டிருக்கிறது. பங்குச் சந்தையில் முதலிடுவதற்கு ஆர்வத்துடன் இருக்கும் யாழ்ப்பாணத்து வர்த்தகர்கள் மற்றும் மக்களின் வேண்டுகையை ஏற்றுக்கொள்ளும் வகையிலேயே கொழும்பு பங்குச்சந்தை யாழ்ப்பாணத்தில் தனது கிளையைத் திறக்கும் முடிவை எடுத்ததாக அதன் அலுவலர் ஒருவர் கூறுகிறார்.

குடாநாட்டு மக்கள் மத்தியிலிருக்கும் பணத்தைக் கறப்பதற்கான இன்னொரு முனைப்பே இது என்ற குற்றச்சாட்டு பரவலாக முன்வைக்கப்படுகிறது.

இந்த ஆண்டு ஜனவரியில் யாழ். கண்டி நெடுஞ்சாலை மீண்டும் போக்குவரத்திற்காகத் திறக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக குடாநாட்டு உற்பத்திப்பொருட்கள் தெற்கிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. குறிப்பாக சின்னவெங்காயம், வாழைக்குலை, புகையிலை, திராட்சைப்பழம் மற்றும் பனம்பொருள் உற்பத்திகள் போன்ற குடாநாட்டு உற்பத்திகள் தெற்கின் சந்தைகளுக்குக் கொண்டு வரப்படுகின்றன.

2009ஆம் ஆண்டு 52 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் செய்கைபண்ணப்பட்ட திராட்சைப்பழம் இந்த ஆண்டு 56 ஹெக்ரெயராக அதிகரித்திருக்கிறது. இந்த ஆண்டினது முதற்காலாண்டுப் பகுதியில் குடாநாட்டில் அறுவடை செய்யப்பட்ட திராட்சைப்பழங்கள் ஏ-9 நெடுஞ் சாலை மீளவும் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து பிற மாவட்டச் சந்தைகளிலும் பெருமளவில் விற்பனையாகியமை குறிப்பிடத்தக்கது. தற்போது குடாநாட்டில் அதிக சுவை கொண்ட திராட்சை வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

போர் இடம்பெற்ற காலப்பகுதியில் நாட்டின் ஏனைய பாகங்களிலிருந்து குடாநாடு துண்டிக்கப்பட்டிருந்தமையால் திராட்சைப்பழத்திற்கான கிராக்கி குடாநாட்டில் குறைவடைந்திருந்தது. இதன்விளைவாக திராட்சைப்பழச் செய்கையை மேற்கொள்வதில் விவசாயிகள் அவ்வளவாக ஈடுபாடு காட்டவில்லை. ஆனால், தற்போது நிலைமை மாறிவிட்டது.

தற்போது குடாநாட்டில் பரவலாக அறுவடை செய்யப்படும் சின்னவெங்காயம் பெருமளவில் தம்புள்ளை பொருளாதார மையத்திற்கு வந்துசேர்கிறது. இந்த அறுவடைக் காலத்தில் குடாநாட்டி லிருந்து தினமும் ஒரு லட்சத்து 10ஆயிரம கிலோ சின்ன வெங்காயம் தம்புள்ளைச் சந்தைக்கு வந்துசேர்வதாக தம்புள்ளைப் பொருளாதார அபிவிருத்திச் சமூகத்தின் தலைவர் தயானந்தசிறி கூறுகிறார். குடாநாட்டில் விவசாயிகளிடமிருந்து 20 தொடக்கம் 30 ரூபாய்க்குக் கொள்வனவு செய்யப்படும் சின்ன வெங்காயம் தம் புள்ளைச் சந்தையில் 45 தொடக்கம் 55 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தென்பகுதிச் சிங்களவர்களின் வடக்கு நோக்கிய படையெடுப்புத் தொடர்பில் சொல்லவே தேவையில்லை.



தினமும் 300 தொடக்கம் 350 பஸ்களிலும் வான்களிலும் இவர்கள் குடாநாட்டுக்குச் செல்கிறார்கள். இவர்களுக்காகவே ஏ-9 வீதியோரங்களில் படையினர் உணவகங்களைத் திறந்திருக்கிறார்கள். ஓமந்தை தொடக்கம் யாழ்ப்பாணம் வரையிலான 132 கி.மீ நீளமான வீதியோரத்தில் 35இற்கும் மேற்பட்ட படையினரின் உணவகங்கள் உள்ளன. இந்த உணவகங்களுக்கு அருகே இவர்களுக்காகக் கழிப்பிட வசதிகளையும் குளித்து உடைமாற்றுவதற்கான வசதிகளையும் படையினரே ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள்.

கிளிநொச்சியில் சந்திரன் பூங்கா அமைந்திருந்த இடத்தில் தற்போது அமைக்கப்பட்டிருக்கும் இராணுவத்தினரின் நினைவுத்தூபி, ஆனையிறவின் உல்லாசவிடுதிப் பகுதியில் விடுதலைப் புலிகள் கவசவாகனமாகப் பயன்படுத்திய புள்டோசர் இருக்கும் பகுதி, ஆனையிறவுக் கோட்டைக்கு அருகே அமைக்கப்பட்டிருக்கும் படையினரின் பிரமாண்டமான நினைவுத்தூபி, யாழ் நூலகம், நயினாதீவிலுள்ள நாகவிகாரை, ஆரியகுளம் சந்தியிலுள்ள விகாரை, நல்லூர் கந்தசுவாமி கோவில், வடமராட்சியின் வல்வெட்டித்துறையிலுள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனது சிறுபராய வீடு, படையினரால் இடித்தழிக்கப்பட்டிருக்கும் துயிலகங்கள் என்பன தென்பகுதியைச் சேர்ந்த சிங்கள உல்லாசப் பயணிகைளப் பெரிதும் கவர்ந்திருக்கின்றன.

இவை தவிர புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் யாழ்ப்பாணத்தவர்கள் தற்போது குடாநாட்டுக்கு வருவது பெரிதும் அதிகரித்திருக்கிறது. நாளொன்றுக்கு 60இற்கும் அதிகமான குடும்பங்கள் புலம்பெயர் நாடுகளிலிருந்து குடாநாட்டுக்குள் வருகின்றன.

இவ்வாறாக உள்ளூர் உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்திருப்பதனால் குடாநாட்டில் சிறு வியாபாரம் என்றுமில்லாதளவிற்கு அதிகரித்திருக்கிறது. இவர்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அரைகுறை வசதிகளுடன்

**- யாழினி -**

கூடிய தங்குமிடங்கள் பல முளைத்திருக்கின்றன. குடாநாட்டுக்குப் படையெடுக்கும் சிங்கள உல்லாசப் பயணிகள் இரவில் படுத்துறங்குவதற்கே இடமின்றி, துரையப்பா விளையாட்டரங்கில் இராப் பொழுதைக் கழிப்பதை அவதானிக்க முடிகிறது.

இவை தவிர, தென்பகுதியைச் சேர்ந்த சிங்கள மற்றும் முஸ்லிம் வியாபாரிகள் பலர் குடாநாட்டின் நகர வீதி யோரங்களில் சிறுவியாபாரத்தில் ஈடுபடுவதை அவதானிக்க முடிகிறது. பஸ் நிலையத்தில் கைகளில் சில அலங்காரப் பொருட்களுடன் சிங்கள வியாபாரிகள் வியாபாரத்தில் ஈடுபடுவதை யும் அவதானிக்க முடிகிறது.

குடாநாட்டு வீதிகளில் முன்னர் இருந்த சிங்கள இராணுவத்தினரின் கெடுபிடிகள் தற்போது பெரிதும் குறைந்திருக்கின்றன என நகர மக்கள் கூறுகிறார்கள். ஒப்பீட்டளவில் சோதனைச் சாவடிகளின் அளவுகள் பெரிதும் குறைந்திருக்கின்றன. எது எவ்வாறிருப்பினும் குடாநாட்டில் தனியார் மற்றும் பொதுக் கட்டடங்கள்

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு 5 வருடங்களின் பின்னர் 25 வைத்தியர்கள் நியமனம்

## மாகாண சுகாதார அமைச்சு நடவடிக்கை

மட்டக்களப்பு,ஓக.25

கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்கென புதிதாக 25 வைத்தியர்கள் நியமிக்கப்பட்வுள்ளனர் என கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்துள்ளார்.

இந்த நியமனங்களை மேற்கொள்வதற்கான அனுமதியைக் கிழக்கு மாகாண ஆளுநர் வழங்கியுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் 52 ஆயுர்வேத வைத்தியசாலைகள் உள்ளன. இந்த வைத்தியசாலைகளில் பணியாற்ற 82 வைத்தியர்கள் தேவை. இருப்பினும் 40 நிரந்தர வைத்தியர்களும் தற்காலிக அடிப்படையில் 17 வைத்தியர்களும் பணியாற்றுகின்றனர்.

இந்த நிலையில் 5 வருடங்களின் பின் 25 புதிய ஆயுர்வேத வைத்தியர்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர். இந்நியமனங்களால் ஆயுர்வேத வைத்தியர்கள் பற்றாக்குறை நீங்கிவிடும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ளி)

# நல்லூர் கிராமத்தில் உப தபாலகம் இல்லை

திருகோணமலை,ஓக.25

மூதூர், நல்லூர் கிராமத்தைச் சேர்ந்த மக்கள், உப தபாலகம் ஒன்று இல்லாமையால் பல்வேறு சிரமங்களை தாங்கள் எதிர்நோக்கி வருகின்றனர் என முறையிடுகின்றனர்.

இதனால் தமது தபால் மூலமான தொடர்புகளைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்றும் சுட்டிக் காட்டுகின்றனர்.

நேர்முகப் பரீட்சைக் கடிதங்கள் உட்பட ஏனைய கடிதங்களையும், பொதுசன உதவிப் பணக் கொடுப்பனவுகளையும் பெற்றுக்கொள்ள நீண்ட தூர தபாலகத்தை நாட வேண்டியுள்ளது என்றும் இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ளி)

# பழைய பிள்ளையானாக மாறுவேன் என்று தாம் கூறவில்லை என்கிறார் சந்திரகாந்தன்

கொழும்பு,ஓக.25

பழைய பிள்ளையானாக மாறுவேன் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவிக்கவில்லை என அவரது ஊடகப்பிரிவு 'உதயன்'க்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''பழைய பிள்ளையானாக மாறுவேன் என்கிறார் சந்திரகாந்தன்'' என்ற தலைப்பில் ஆரையம்பதி சமூக அபிவிருத்தி அமைப்பினரை மேற்கோள் காட்டி செய்தியொன்றை கடந்த சனிக்கிழமை வெளியிட்டிருந்தது. இந்தச் செய்திக்கே கிழக்கு மாகாண முதலமைச்சரின் ஊடகப்பிரிவு மறுப்பு அறிக்கை அனுப்பிவைத்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும்கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

குறித்த தினத்தில் தங்களது பத்திரிகையில் பிரசுரமாகியிருக்கும் 'பழைய பிள்ளையானாக மாறுவேன் என்கிறார் சந்திரகாந்தன்' எனும் தலைப்பிலான செய்தியானது எவ்விதமான அடிப்படை ஆதாரங்களும் அற்ற நிலையில் பிரசுரிக்கப்பட்டிருப்பதைத் தங்களின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

குறித்த தினத்தில் முதலமைச்சர் சந்திரகாந்தன் தனது பணி நிமித்தம் ஆரையம்பதி கிராமத்தில் நந்தகோபன் கலாசார மண்டபத்தில் மாலை 6.00 மணியளவில் மக்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டிருந்தார். இக்கலந்துரையாடலில் முதலமைச்சருடன் கிழக்கு மாகாணசபை உறுப்பினர், மாவட்ட மேலதிக அரச அதிபர், ஆரையம்பதி பிரதேசசபைத் தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் உட்படப் பல்வேறு முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டிருந்தார்கள்.

இந்நிகழ்வில் குறித்த காணி எல்லைப் பிரச்சினை விடயம் தொடர்பாக ஆராயப்பட்டபோதும், முதலமைச்சர் தங்களது பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருந்த சொற்பதங்களையோ, வசனங்களையோ பயன்படுத்தவில்லை. மாறாக இது இரு கிராமங்களைத் தாண்டி இரு சமூகம் சார்ந்த பிரச்சினை என்பதனால் ஒரு பொறுப்பு மிக்க முதலமைச்சர் என்ற வகையில் நிதானமாகவும் பக்கச்சார்பில்லாமலும் செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இருந்தார். இவ்வாறான உயர் நோக்கங்களோடு நடைபெற்ற கலந்துரையாடலில் முதலமைச்சரின் கௌரவத்துக்கும் பதவிக்கும் இழுக்கு ஏற்படுத்தும் வகையில் தாங்கள் செய்தி பிரசுரித்திருந்ததானது வேதனைக்குரிய விடயம் ஆகும் - என்றுள்ளது.

(ஆசிரியர் குறிப்பு:- இது தொடர்பாக நாம் ஆரையம்பதி சமூக அபிவிருத்தி அமைப்புடன் தொடர்புகொண்டு கேட்டோம். அவர்கள் தமது நிலைப்பாட்டை தொடர்ந்து வலியுறுத்தினர்.)

# புனரமைக்கப்படும் வீதியில் புதிதாகக் குன்று, குழிகள்

மூதூர்,ஓக. 25

வெருகல்-சேருவில பகுதிகளுக்கிடையில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஏ-15 நெடுஞ்சாலை புனரமைப்பில் பல குறைபாடுகள் தென்படுகின்றன என மக்கள் முறையிடுகினறனர்.




வெருகலுக்கும், சேருவிலவுக்கும் இடையில் அமைக்கப்பட்டுவரும் வீதியில் தற்போதே சில இடங்களில் குன்றுகளும், குழிகளும் மிக இலகுவாக ஏற்பட்டு வரு கின்றன என இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

வீதிப்பணிகள் இன்னும் முற்றுப் பெறாத இந்நிலையில், பூநகர், மகிந்தபுரக் கிராமப் பகுதியில் போடப்பட்ட தார் கலவைகளின் நடுவே குழிகள் ஏற்பட்டிருக்கின்றன.

எனவே, இவ்வீதி புனரமைப்பில் உயர் அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் இவர்கள் கோரிக்கை விடுக்கிறார்கள்.

(ளி)

# கிண்ணியாவில் மீனின் விலை அதிகரிப்பு

திருகோணமலை,ஓக.25

கிண்ணியா பிரதேசத்தில் மீன்பிடித் தொழிலில் வீழ்ச்சி ஏற்பட்டதனால், மீனுக்கான விலை அதிகரித்துக் காணப்படுகிறது.

இதனால் நுகர்வோர்கள் அதிகமான பணத்தைக் கொடுத்து மீனைப் பெற வேண்டியுள்ளது.

இம்மீன் விலையேற்றத்துக்கு கால நிலையில் ஏற்பட்ட மாற்றம், மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்ற மையே காரணம் எனக் கூறப்படுகிறது.

பொதுச் சந்தையில் முன்னர் ஒரு கிலோ சூரை மீன் 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது ஒரு கிலோ 450 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

சாதாரண மணலை, கீரி மீன்கள் முன்னர் ஒரு கிலோ 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டன. தற்போது 350 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.(ளி)

# 30 வருட யுத்தத்தை முடித்த ஜனாதிபதி டெங்கு ஒழிப்பிலும் வெற்றிவெறுவார்

## ஊடகத்துறை அமைச்சர் ரம்புக்வெல தெரிவிப்பு

கண்டிஓக.25

''முப்பது வருட யுத்தத்தை ஜனாதிபதி தலைமையில் முறியடித்தது போல டெங்கு நுளம்புக்கு எதிரான யுத்தத்திலும் வெற்றி பெறுவோம். உல்லாசப் பயணிகள் விரும்பும் எழில்மிகு கண்டி நகரை சுத்தமிகுந்த நகரமாக மாற்றுவோம்''

- இவ்வாறு தெரிவித்தார் ஊடக தகவல்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.

கண்டி நகரின் சுகாதாரத்தைப் பாதுகாப்பது மூலம் மேலும் உல்லாச பயணிகளின் வருகையை அதிகரிக்க முடியும்.

கண்டி போன்ற அழகான நகரை உலகில் காண்பது அரிது என்றும் அவர் தெரிவித்தார்.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துடன் இணைந்து நேற்று முன்தினம் கண்டி மாநகரசபை ,மத்திய மாகாண சுகாதார அமைச்சு, பொலிஸ், இராணுவம், அரச உத்தியோகத்தர், பாடசாலை மாணவர் ஏற்பாடு செய்திருந்த டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சியின் ஆரம்ப வைபவத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, மாகாண சுகாதார அமைச்சர் சுனில் அமரதுங்க, பதில் மேயர் சுமிந்த விக்ரமசிங்க, சரத் கோங்காகே மாகாணசபை எதிர்கட்சி உறுப்பினர் சாந்தினி கோஹங்காகே, மாகாணசபை உறுப்பினரும், நடிகையுமான அனார்கலி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கண்டி சிட்டி செண்டரில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ், சிங்கள கலை நிகழ்ச்சிகள் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டன. கண்டி நகர வீதிகளில் பெரஹரா பார்க்க வந்தவர்களுக்கும், பஸ்களில் பயணம் செய்வோருக்கும் டெங்கு ஒழிப்பு பற்றி பிரசாரம் செய்யப்பட்டது.

இராணுவ அணியும், கண்டி மாநகர சபை சுகாதார அணியும், மாகாண சுகாதார உத்தியோகத்தர்களும் இணைந்து சுதும் பொல, மஹியாவ, கட்டுக்கலை ஆகிய மூன்று கிராமங்களையும் சுத்திகரிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இங்கு உரையாற்றிய மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க கூறியவை வருமாறு-

கண்டி நகரில் டெங்கு நோய் ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது மாவட்டத்தில் நூற்றுக்கு எழுபது வீதம் டெங்கு ஒழிக்கப்பட்டு விட்டது.

இவ்வாறான செயல்திட்டங்கள் மூலம் நூற்றுக்கு நூறு சதவீதம் டெங்குநுளம்புகள் ஒழிக்கப்படும்.

இதற்கு மக்களின் உதவிதேவை. மக்களுக்கு இதுகுறித்த விளக்கங்கள் போய்ச் சேரவேண்டும்.

ஊடகத்துறையையும் இணைத்து டெங்கு ஒழிப்புத் திட்டத்தை நடைமுறைபடுத்துவதன் மூலம் மக்களுக்கு பிரசாரம் சென்றடையும். மக்களை விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலமே டெங்கு நுளம்பை ஒழிக்க முடியும் - இப்படி முதலமைச்சர் தெரிவித்தார். (ளி)

# ஆலய இரதோற்சவத்தில் குளவிகள் அட்டகாசம்

கொழும்பு,ஓக.25

அப்புத்தளை பொலிஸ் வலயத்துக் குட்பட்ட தங்கமலை - கிளென நோர் தோட்ட ஆலயத்தில் இடம்பெற்ற வருடாந்த இரதோற்சவத்தில் கலந்துகொண்டவர்களை திடீரென குளவிகள் சூழ்ந்து கொட்டியதில் சனக்கூட்டமும் களேபரப் பட்டுச் சிதறியோடியது.

குளவிகளால் கொட்டப்பட்ட தொன்னூறு தொழிலாளர்களும் பிரதேசவாசிகளும் பங்கட்டி கிராமிய வைத்தியசாலை, அப்புத்தளை மாவட்ட வைத்தியசாலை, தியத்தலாவை ஆதார வைத்தியசாலை ஆகியவற்றில் சேர்க்கப்பட்டனர்.

அத்துடன் மேலும் 287 பேர் சிகிச்சைப் பெற்றுள்ளனர். ஆபத்தான நிலையிலுள்ள 50 பேர் தியத்தலாவை ஆதார வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர் - எனத் தெரிவிக்கப்படுகின்றது.(ளி)




# கொட்டகலை வைத்தியசாலைக்கு மாகாணசபை அமைச்சர் விஜயம்

நுவரெலியா,ஓக.25

கொட்டகலை மாவட்ட வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளைக் கண்டறியும் பொருட்டு ஜனநாயக மக்கள் முன்னணியின் உப தலைவரும், மத்திய மாகாணசபை அமைச்சருமான முரளி ராகுநாதன் கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சைபெற்றுவரும் நோயா ளர்களைச் சந்தித்து கலந்துரையாடிய முரளி ரகுநாதன் அவர்களிடம் அங்குள்ள குறைபாடுகள் தொடர்பாகக் கேட்டறிந்தார்.

மாவட்ட அதிகாரி சமரகே, வைத்தியர்கள் மற்றும் ஊழியர்களுடனும் அவர் கலந்துரையாடி பிரச்சினகள் குறித்துக் கேட்டறிந்தார்.

வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் குறிப்பாக குடிதண்ணீர் தொடர்பாக கடந்தவாரம் பொதுமக்கள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

இதையடுத்தே அப்பிரச்சினை உள்ளிட்ட பல குறைபாடுகளை நேரில் கண்டறியும் பொருட்டு தாம் அங்கு விஜயம் செய்தார் என அவர் தெரிவித்தார்.

வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக மாகாண சுகாதார அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவரப் பட்டுள்ளது.

இப்பிரச்சினைகள் வெகுவிரைவில் நிவர்த்தி செய்யப்படும் என மாகாண சுகாதாரத்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் உறுதியளித்துள்ளார் என அவர் தெரிவித்தார். (ளி)

# சிவனொளிபாதமலைப் பகுதியில் குவியும் உல்லாசப் பயணிகள்

நுவரெலியா,ஓக.25

சிவனொளிபாதமலை யாத்திரிகர் பருவகாலம் நிறைவுற்றபோதிலும் இப்பகுதிக்கு வெளிநாட்டு, உள்நாட்டு உல்லாசப் பயணிகள் அதிகளவில் வந்த வண்ணமுள்ளனர்.

சிவனொளிபாத மலை பருவகாலம் முடிவுற்றாலும் கடந்த காலங்களை விட வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் அதிக அளவில் வருகை தருகின்றனர்.

இங்குள்ள உல்லாசப் பயணிகள் விடுதிகளில் தங்கியிருக்கும் இவர்கள் இரவு நேரங்களில் சிவனொளிபாதமலைக்குச் சென்று தங்கியிருந்து மறுநாள் காலை சூரிய உதயம் பார்த்து விட்டு வருகின்றனர் என்று உல்லாச விடுதிகளின் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமுத்திரத்தில் சீனா!

இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் சீனா முன்னெடுத்துவரும் செயற்றிட்டங்கள் பிராந்திய வல்லரசான இந்தியாவைக் கலக்கமடையச் செய்துள்ளதுடன் இதுதொடர்பில் புதுடில்லி எச்சரிக்கையுடன் இருந்து வருகிறது.

இது குறித்து 'சிபி' நியூஸ் என்ற இணையத் தளத்தில் வெளியான செய்தி ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு,

இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் சீனா முன்னெடுத்துவரும் திட்டங்களைக் கரிசனையோடும் ஆர்வத்துடனும் புதுடில்லி அவதானித்துவருகிறது என இந்தியாவின் முன்னாள் வெளிவிவகாரச் செயலர் மகாராஜா கிருஷ்ணா ரஸ்கோற்றா கூறுகிறார்.

''இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் சீனர்கள் அதீத அக்கறை செலுத்துகிறார்கள். இந்தப் புதிய முனைப்புக்களைப் புதுடில்லி அவதானித்து வருகிறது.

இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் படைத்துறைசார் கரிசனைகளைச் சீனா கொண்டிருக்குமெனில் அதனை வெற்றிகரமாக எதிர்க்கும் பலத்துடன்தான் இந்தியா இருக்கிறது'' என ஏ.என்.ஐ தொலைக் காட்சிக்கு வழங்கிய செவ்வியில் இந்தியாவின் முன்னாள் வெளி விவகாரச் செயலர் தெரிவித்திருந்தார்.

பாகிஸ்தானில் பீஜிங் கொண்டிருக்கும் நலன் தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த அவர்,

''சீனா பாகிஸ்தானிலும் மூலோபாய நலன்களைக் கொண்டிருக்கிறது, பாகிஸ்தான்

மரியத் டி சொய்சா கூறினார்.

இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் இடம்பெற்றுவரும் மிகப் பெரும் போட்டியின் பிரதான களமாக இந்து சமுத்திரப் பிராந்தியம் மாறியிருக்கிறது என அவர் தொடர்ந்தார்.

''இந்துசமுத்திரப்



பிராந்தியத்தில் இடம்பெற்றுவரும் பெரும் அதிகாரப் போட்டிகள் மற்றும் அதிகரித்துவரும் கடல்சார் பிணக்குகள் என்பன இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் முக்கியத்துவத்தினை சுட்டிக்காட்டும் ஓர் அம்சம்.

இந்த முக்கியத்துவமானது வெறும் கடல்சார் பாதுகாப்புடன் மாத்திரம் நின்றுவிடவில்லை - மாறாக, உலகின் பிரதான கடல்வழிப் போக்குவரத்துப் பாதை மற்றும் வான்வெளி ஆகியவற்றைக்

சேமிப்பிடங்கள், புதிய கப்பல்களை இறக்கும் தளங்கள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் கொண்டிருக்கும் அம்பாந்தோட்டைத் துறைமுகத் திட்டமானது இரண்டு தேவைகளுக்கும் பயன்படுத்தக்கூடிய அனைத்து அம்சங்களையும் கொண்டிருக்கிறது'' எனப் புதுடில்லியிலுள்ள பாதுகாப்புத் தொடர்பான கற்கைகள் மற்றும்

ஆய்வுக்கான மையத்தின் மூத்த ஆய்வாளர் கலாநிதி ஆர்.என். தாஸ் கூறுகிறார்.

இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் தனது வளப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் சீனா முன்னெடுத்துவரும் 'முத்துமாலை மூலோபாயத்திற்காக' துறைமுகத்தின் ஒரு பகுதியை பீஜிங் பயன்படுத்தலாம் என ஆய்வாளர்கள் நம்புகிறார்கள்.

''இந்தியா எப்போதுமே இலங்கையுடன் மிக நெருங்கிய

உறவுநிலை தொடர்பில் இந்தியா மீளப் பரிசீலித்து வருகிறது'' என அவர் கூறுகிறார்.

''இந்த உறவுநிலை தொடர்பில் இலங்கை அரசுடன் முட்டிமோதும் நிலைதோன்றுமெனில் அது குறிப்பிடத்தக்களவு தமிழ் சமூகத்தின் எதிர்ப்பைச் சம்பாதிப்பதற்கும் வழிசெய்யும்.

''இருப்பினும், பரந்துபட்ட புவிசார் அரசியல் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு சீனாவிற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதைத் தவிர்ப்பதற்காக இது போன்றதொரு நிலைமைக்கு முகம்கொடுப்பதற்கும் இந்தியா தயாராகவே உள்ளது'' என்கிறார் அவர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்கான அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்த வேளை உதவிகள், கடன், உட்கட்டுமான அபிவிருத்தி மற்றும் பொருளாதார உறவுகள் உள்ளிட்ட பரந்துபட்ட விடயங்களுடன் தொடர்புடைய உடன்பாடுகளில் இந்தியாவும் இலங்கையும் கைச்சாத்திட்டிருந்தன.

இரு நாடுகளுக்குமிடையிலான உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாட்டின் தென்பகுதியில் அமைந்திருக்கும் அம்பாந்தோட்டைப் பிராந்தியத்தில் தனது துணைத் தூதுவராலயத்தினைத் திறப்பதற்கும் இந்தியா திட்டமிட்டிருக்கிறது.

முன்னதாக கடந்த ஜனவரியில் யாழ் - கண்டி நெடுஞ்சாலை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ். குடாநாட்டில் இந்தியா தனது துணைத் தூதுவராலயம் ஒன்றைத் திறந்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

''இலங்கையில் சீனாவிடம் இழந்தவற்றை மீளவும் பெறும் முனைப்புக்களில் இந்தியா முழுவேகத்துடன் ஈடுபட்டு வருகிறது என்பதையே மேற்குறித்த சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன' என்கிறார் தாஸ்.

இந்தப் புறநிலையில் இரண்டு நாடு களையும் ஏதோவொரு வகையில் சாந்தப்படுத்தும் வகையில் சமப்படுத்திய அணு குமுறையை இலங்கை முன்னெடுக்க வேண்டியது அவசியம் என்கிறார் டி சொய்சா.

# கலக்கத்தில் இந்தியா!!

ஊடாக பாரசீகக் குடா வரைக்கும் சீனர்கள் தங்களது கடல்வழிப் பாதைகளைக் கொண்டிருக்கிறார்கள்.

சீனாவின் பொருளாதார நலன்களுக் காக இது பெரிதும் துணைநிற்கும்.

இந்தப் பிராந்தியத்தில் மோதல் நிலை யொன்று தோன்றுமிடத்து, இந்தக் கடல் வழிப் பாதையை இந்தியாவிற்கு எதிராகச் சீனாவினால் பயன்படுத்த முடியும்.

இதுபோன்றதொரு நிலைமையைச் சமாளிப்பதற்கான வழிவகைகளை இந்தியர்கள்தான் கொண்டிருக்க வேண்டும்'' என ரஸ்கோற்றா தெரிவித்தார்.

''இந்துசமுத்திரப் பிராந்தியத்தைப் பொறுத்தவரையில் இந்தியாதான் முதன்மையானதாக இருக்கவேண்டும். அடுத்தடுத்த நிலையிலேயே சீனா இருக்கமுடியும்'' என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ''இலங்கையின் அபிவிருத்திக்கான மொத்தக் கடன் தொகையில் அரைப்பகுதிக்கும் அதிகமானதை சீனாவே வழங்குவதாகக் கூறப்படுகிறது'' என சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் தென்னாசியப் பிராந்தியக் கற்கைக்கான நிறுவனத்தின் ஆய்வாளர்களில் ஒருவரான சாந்தி

கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல் போன்ற அம்சங்களாலும் இந்தப் பிராந்தியத்தினது முக்கியத்தும் அதிகரிக்கிறது'' என ஆய்வாளர் சாந்தி மரியத் டி சொய்சா கூறுகிறார்.

இலங்கையின் உட்கட்டுமான அபிவிருத்திப் பணிகளில் பெரும்பகுதியை முன்னெடுத்துவரும் சீனாவிற்கு நாட்டினது தென்முனையில் அமைக்கப்பட்டு வரும் அம்பாந்தோட்டைத் துறைமுகம் எந்தளவிற்குக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது என்பது தொடர்பில் ஏனைய வல்லுனர்கள் தங்களது கரிசனைகளை வெளியிடுகிறார்கள்.

வெறும் பொருளாதாரத் தேவைகளுக்காக மாத்திரமே அம்பாந்தோட்டைத் துறைமுகம் பயன்படுத்தப்படும் எனச் சீனா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்ற போதும், இந்தத் துறைமுகத்தின் எதிர்காலப் பயன்பாடு சீனாவிற்குக் கிடைத்த பெரும் சொத்தாக அமையலாம் என்ற ஏதுநிலையைப் புறந்தள்ளி விடமுடியாது என வல்லுனர்கள் கருதுகிறார்கள்.

''பாகிஸ்தானின் ஹவ்டார் துறைமுகத்தைப் போலவே எண்ணெய் மற்றும் எரிவாயு

உறவையே கொண்டிருந்திருக்கிறது.

ஆனால், தற்போது இந்த உறவின் நடுவே புகுந்து சீனா குழப்ப நினைப்பதால், இந்தியாவும் கொழும்புடனான தனது உறவு தொடர்பில் மீள்பரிசீலனை செய்துவருகிறது'' எனச் சாந்தி மரியத் டி சொய்சா கூறுகிறார்.

''அம்பாந்தோட்டைப் பகுதியில் துறை முகத்தை அமைப்பதற்கான வாய்ப்பு முதலில் கிடைத்தது இந்தியர்களுக்கே''

''இந்த வாய்ப்பைப் பற்றிப் பிடிப்பதில் இந்தியா காலம் தாழ்த்த, சீனா அதனைத் தன்கையில் எடுத்துக் கொண்டது.

இந்தியச் செல்வாக்கு காலம் காலமாக இருந்துவருமொரு பிராந்தியத்தில் சீனா தன் அதிகாரத்தை அதிகரித்துச் செல்கிறதே என்ற கரிசனை அன்று முதலே ஏற்பட்டு விட்டது.

மியன்மார் தொடக்கம் பாகிஸ்தான் வரைக்கும் இதுபோன்ற தனது நிலைகளை அமைத்து 'முத்துமாலை மூலோபாயத்தின்' ஊடாக சீனா இந்தியாவைச் சுற்றி வளைப்பதாகவே புதுடில்லி கருதுகிறது.

இதன் காரணமாக பாரம்பரிய உறவு நீடித்துவரும் இலங்கை போன்ற நாடுகளுடனான

தமிழில் : வண்ணமதி

''இலங்கைக்கு யார் அதிக உதவிகளை வழங்குவது என்ற போட்டி நிலவுவதன் விளைவாக பெரும் நன்மையடைவது இலங்கைதான்.

இலங்கை திரைமறைவில் சீனாவிற்கு நேசக்கரத்தை நீட்டுவதானது புதுடில்லி யுடனான கொழும்பின் உறவுகள் பாதிப்படைவதற்கு வழிசெய்துவிட்டது.

இலங்கைத்தீவு தனது அண்டை நாடாகிய இந்தியாவுடன் காலம் காலமாக நட்புடன் இருந்து வந்ததுதான் வரலாறு'' என அவர் மேலும் குறிப்பிட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலா சுருங்குகிறது



சமீப காலமாக நிலவில் அதிக வெடிப்புகள் தோன்றியிருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த வெடிப்புகள் நிலா சுருங்குவதனாலே ஏற்பட்டுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கூறிவருகின்றனர். அளவுக்கதிகமான குளிரின் காரணமாகவே நிலா சுருங்குவதாக ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. செயற்கைக் கோள்களின் மூலமாக எடுக்கப்பட்ட படங்களை வைத்துப் பார்க்கும்போது 100 மீற்றர் அளவுக்கு நிலா சுருங்கியிருப்பதாக ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது போன்ற வெடிப்புகள் முதன்முறையாக 1970ஆம் ஆண்டு அப்பல்லோ விண்கலம் அனுப்பிய படங்களின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் தற்போது இது போன்ற 14க்கும் அதிகமான வெடிப்புகள் தோன்றியிருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் புதுத் தகவலைக் கூறியுள்ளனர். இந்த 100 மீற்றர் அளவு சுருக்கம் கடந்த ஒரு பில்லியன் வருடத்திற்குள்ளாகவே நடந்திருக்கக்கூடும் என ஆராய்சியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வெடிப்புகளுக்குக் காரணம் நிலாவில் உள்ள பாறைகள் அதிக குளிரினால் சுருங்கி ஒன்றுடன் ஒன்று மோதுவதனாலே ஏற்பட்டதாக ஆராய்சியில் கூறப்பட்டுள்ளது. ★ **நன்றி:-தொழில்நுட்ப இணையம்.**

# மூளையைச் சுறுசுறுப்பாக வைத்திருப்பது எப்படி?



மூளைக்கு சிறுசிறு பயிற்சிகள் கொடுப்பதன் மூலம் நலமாக வைத்திருக்கலாம் என்று வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். மூளை தொடர்பான ஆராய்ச்சியில் இருக்கும் பேராசிரியர் ஜான் பைர்னி இதற்கான பல வழிமுறைகளைக் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது :

உடற்பயிற்சி செய்வதால் பலருக்கு இதயத்திற்கு நலம் தரும் என்று தெரியும். ஆனால் உடற்பயிற்சியினால் மூளைக்குப் பல நன்மைகள் கிடைக்கின்றன என்பது பலருக்குத் தெரியாது. இதற்கான பல ஆதாரங்கள் உள்ளன.

உடற்பயிற்சியினால் மூளைக்குச் செல்லும் நரம்புகள் மற்றும் செல்கள் நலமாக வைத்திருக்கின்றன. மூளையை நலமாக வைத்திருக்க ஒரு சில உணவுகள் உள்ளன. இதன்மூலம் மூளை சுறுசுறுப்பாக இயக்க வழிவகை செய்கிறது. மூளையில் நல் இயக்கத்திற்கு ஒமேகா 3 எனும் இரசாயனம் உதவுகிறது. இது சாலமன் மற்றும் ஒரு சில மீன் வகைகளில் கிடைக்கிறது. ஆன்ட்டி ஆக்சிடன்ட் அதிகமுள்ள உணவு மற்றும் குளிர்பானங்கள் மூளை சுறுசுறுப்பாக வைத்திருக்க உதவுகின்றன. புத்தகங்கள் வாசிப்பது, குறுக்கெழுத்து போட்டிகளுக்கு விடை கண்டு பிடிப்பது போன்றவை மூளையின் நலத்தைப் பாதுகாக்கும். சுறுசுறுப்பான இயக்கத்துடன் உள்ளவர்களுக்கு முதுமையில் மறதி ஏற்படும் பாதிப்பு குறையும் என்றும் பேராசிரியர் கூறினார். ★

**நன்றி: மருத்துவ இணையம்.**

# புதன் பொய்கை

## கிச்சுகிச்சு மூட்டும் ரோபோ

விதவிதமான வசதிகளுடனும், புதிய புதிய தொழில்நுட்பங்களுடன் ரோபோக்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. அந்த வரிசையில் இப்போது ஜோக் சொல்லும் புதிய ரோபோவை கண்டுபிடித்திருக்கிறார் பிரிட்டிஷ் பொம்மை தயாரிப்பாளர் டோனி எல்லீஸ். இந்த ரோபோ இணையத்தளத்திலிருந்து ஜோக்குகளைப் பிடித்து நம்மிடம் சொல்லிச் சிரிக்க வைக்கும். மேலும் கராக்கி எனும் மியுசிக் வீடியோ கேம்ஸ்சும் இந்த ரோபோ விளையாடுமாம். இந்த ரோபோ வெறும் பொம்மையல்ல, எனது நண்பர் என்கிறார் எல்லீஸ். அவர் மேலும் கூறும்போது, இந்த ரோபோ நமது முகத்தையும், குரலையும் வைத்தே நாம் யார் என்பதைக் கண்டுபிடித்துவிடும். நமது விருப்பு, வெறுப்புகளுக்கு ஏற்ப இன்பர்மேஷன்களையும், நமக்குப் பிடித்த ஜோக்குகளையும்இணையத்திலிருந்து எடுத்துச் சொல்லி நம்மை அசத்திவிடும். இந்த ரோபோ நொடிப்பொழுதில் இன்பர்மேஷன்களைச் சேகரித்து உரிமையாளருக்குத் தந்துவிடுகிறது. இதை அயல்நாட்டு மொழிகளை கற்பிக்கவும் பயன்படுத்தலாம் என்கிறார் எல்லீஸ்.★



# 90 ஆவது பிறந்த தினத்தன்று பரசூட்டில் குதித்து ஒருவர் சாதனை



**90**ஆவது பிறந்த தினத்தன்று 1000மீற்றர் உயரத்திலிருந்து பரசூட்டில் குதித்து சாதனை படைத்துள்ளார் ஒருவர். ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த கார்லோஸ் ரோகு பெல்ட்ரான் என்பவரே இந்தச் சாதனையைப் புரிந்துள்ளார். இவர் ஆர்ஜென்டினாவில் நடந்த சுதந்திரப் போராட்டத்தில் பங்குபெற்றவர். மேலும் அந்நாட்டு இராணுவத்தில் உள்ள பரசூட் வீரர்கள் குழுவிலும் இவர் இடம்பெற்றிருந்தார்.

இவர் தனது 90ஆவது பிறந்த நாளை சமீபத்தில் கொண்டாடினார். அன்று விமானத்தில் பறந்தபடி 1000 மீற்றர் உயரத்தில் இருந்து பரசூட் மூலம் குதிக்கத் திட்டமிட்டார். அதன்படி பரசூட்டில் இருந்து குதித்துச் சாதனை படைத்தார்.

இது தனது வாழ்க்கையில் மிகவும் வியக்கத்தக்க பிரமாண்டமான நாள் என்று அவர் தெரிவித்தார். அவர் தனது வாழ்நாளில் இதுவரை 1200 தடவை பரசூட்டிலிருந்து குதித்துள்ளார். ★

# வாழ்க்கை

**வல்லவனுக்கு அது பூஞ்சோலை**
**வாடிக்கிடப்பவனுக்கு அது கல்லறை**
**சாதிக்க நினைப்பவனுக்கு அது சரித்திரம்**
**சத்தியத்தில் நிற்போருக்கு அது நித்தியம்**
**ஓடிவரும் துன்பங்களைக் கண்டு**
**ஒதுங்கிப் போகாமல்**
**துணிந்து நின்று செய்து பார்**
**அது உன் காலடியில்**

க.சுகந்தினி,
தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: விதியா

### மேடம்



எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நடக்கும். இது வரை உங்களின் வீட்டிற்கு வராத உறவினர் ஒருவர் வரலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். சங்கடத்தில் இருக்கும் ஒருவருக்கு அவசர உதவிகள் செய்யலாம்.

### இடபம்



தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். நேற்று செய்யாமல் விட்ட சில வேலைகளால் இன்று அவதிகளுக்கு ஆளாகலாம். பெற்றோர்களின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். உறவு பெண்கள் வழியில், மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். வழக்கமான பணிகளை தடை, தாமதமின்றி முடிப்பீர்கள்.

### மிதுனம்



உறவினர் ஒருவர் உங்களிடம் பாசமாக நடந்து கொள்ளலாம். நண்பர்கள் சிலரின் செயற்பாடுகளை பார்த்து பொறாமைப்படுவீர்கள். உங்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றொருவரிடம் உதவி கேட்க நேரிடலாம்

### கடகம்



பெரிய எதிர்பார்ப்புடன் இருந்த காரியம் ஒன்று நடக்காமல் போகலாம். நீங்கள் நல்ல மனதுடன் சில உதவிகளை செய்தாலும், சிலர் அதை தவறாக புரிந்து கொள்ளலாம். ஏமாற்றங்களைத் தவிர்க்க தொழில் விடயங்களில் எச்சரிக்கை அவசியம். சக ஊழியர்கள் செயற்பாடுகளால் கோபம், எரிச்சல் அடையலாம்.

### சிங்கம்



சுபச் செலவுகள் அதிகரிக்கும். பலநாள்களாக மனதில் இருந்த ஆசைகள் இன்று நிறைவேறும் வாய்ப்பு உருவாகும். உடன் பிறப்புக்கள் தொடர்பான விஷயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்வீர்கள். பயணங்களால் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். வழக்கு விவகாரங்களில் எச்சரிக்கையான அணுகுமுறை அவசியம்.

### கன்னி



நாடி வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். உங்களின் கொள்கை விடயத்தில் பிடிவாதமாக இருப்பீர்கள். தேக ஆரோக்கியத்திற்காக சிறு தொகையை செலவிடலாம். குறுகிய தூர பயணங்கள் செல்லலாம். தேடி வரும் சில வாய்ப்புகளை ஏற்று கொள்வதா, வேண்டாமா என குழப்பம் அடைவீர்கள்.

### துலாம்



போட்டிகள், எதிர்ப்புகளால் மன உளைச்சல்களுக்கு ஆள்படலாம். இஷ்ட தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அர்ப்பத்தனமாக நடந்து கொள்ளலாம். உடல் உபாதைகளை சந்தித்தாலும், அதைப் பொறுத்து கொண்டு சில வேலைகளை முடிப்பீர்கள். கனவு தொல்லையுண்டு.

### விருச்சிகம்



முன்பன் அனுபவம் இல்லாத விடயங்களில் இறங்க வேண்டாம். திட்டமிட்ட சில வேலைகளை முடிக்க முடியாமல், ஏதோ ஒரு வகையில் தடை ஏற்படலாம். உறவினர்கள் சிலர் சொல்லும் யோசனைகளை கேட்டு நடப்பதன் மூலம் அனுகூலம் பெறலாம். அரசியல் தொடர்புடையவர்களால் நன்மை உண்டு.

### தனுசு



எதிர்ப்புகள் விலகி ஏற்றம் பெறும் நாள். காலை முதல் மாலை வரை பம்பரமாக சுழன்று பணியாற்றுவீர்கள். சிலரிடம் பொய் பேசியாவது உங்களின் காரியங்களை சாதிப்பீர்கள். திட்டமிட்ட பயணங்களில் மாற்றங்கள் செய்யலாம். கணவன், மனைவி இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் விலகி பாசம் அதிகரிக்கும்.

### மகரம்



குதர்க்கமான செயற்பாடுகளால் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். மாமன், மைத்துனர்கள் ஏட்டிக்கு போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். உங்களின் குடும்ப பெருமைகளைப் பற்றி சிலரிடம் பேசுவீர்கள். தெரியாமல் சில விடயங்களில் வாக்கு கொடுத்து விட்டு விழிக்க நேரிடலாம்.

### கும்பம்



பல நாள் முயற்சி ஒன்றுக்கு பலன் கிடைக்கும் சூழ்நிலை உருவாகும். உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். கணிசமான பணவரவுகளுக்கு வாய்ப்புகள் உண்டு. நீங்கள் செய்த உதவியை பற்றி ஒருவர், பலரின் மத்தியில் பெருமையாகப் பேசலாம். குரு வழிபாட்டின் மூலம் குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும்.

### மீனம்



சங்கடங்களையும், சந்தோஷங்களை கலந்து அனுபவிக்கும் நாள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களுடன் தொலைபேசியில் பேசலாம். கணவன், மனைவி இடையே வாக்குவாதங்கள் ஏற்படலாம். தேவையற்ற செலவுகளைச் செய்ய நேரிடுவதால், மனம் வருத்தம் அடையலாம். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும்.


## திருமண வாழ்வில் பொன் விழா வாழ்த்துக்கள்



திரு. திருமதி பிரான்சிஸ் மேரி றோசலீன் தம்பதியினர்
25.08.1960-25.08.2010

நீவிர் நீடூழி வாழ்க!
திருமண பந்தத்தில் பொன்விழாக் காணும்
எம் பெற்றோரே! நீவிர் நீடூழி வாழ்க!
இன்றும் என்றென்றும்
இறைவனின் மகன் இயேசுவுடன்
தூய ஆவி துணை நிற்க
உடல் உள சுகநலத்துடன்
ஆயிரம் கோடி வளர்பிறைகண்டு
நீடூழி வாழ்வு வாழ- நீவிர்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

பிரான்ஸில் தமது 50ஆவது திருமண நிறைவை இன்று (25.08.2010) புதன்கிழமை கொண்டாடும் இவர்களை பிள்ளைகள் ஜோர்ச் (பிரான்ஸ்), மேரி மெரினா (நோர்வே), எடின்பரோ (சுவிஸ்), அன்ரன் கென்னடி(சுவிஸ்), மேரி மெற்றில்டா(ஜேர்மனி), தோமஸ் எடிசன்(அதிபர்,யா/மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை, இலங்கை), டென்சலீனா(பிரான்ஸ்), டிக்சன் (பிரான்ஸ்), அல்வினஸ் (பிரான்ஸ்), மருமக்கள் ஜெயந்தி(பிரான்ஸ்), அன்ரன் பத்மராஜா (நோர்வே), கொலின் (சுவிஸ்), மேரி(சுவிஸ்), மகேந்திரம் (ஜேர்மனி), உதயன்(பிரான்ஸ்), பேரப்பிள்ளைகள் ஜெக்சன்(பிரான்ஸ்), கிறிஸ்ரீனா (பிரான்ஸ்), ஜெனற் (பிரான்ஸ்), கிளிங்ரன்(நோர்வே), வெனிற்றா (நோர்வே), அனிஸ்ரன்(நோர்வே), ஜனுசன் (சுவிஸ்), ஜகானி (சுவிஸ்), ஜதுசன்(சுவிஸ்), மிலானி(சுவிஸ்), மிருஜா (சுவிஸ்), மொறிஷா(சுவிஸ்), றொக்சன்(ஜேர்மனி), றொமினா (ஜேர்மனி), றொமின்சன் (ஜேர்மனி) ஆகியோர் வாழ்த்துகின்றனர்.

இல.1, பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

## வெள்ளி விழாக் காணும் தம்பதியரை
# வாழ்த்துகின்றோம்




திருவேற்காடு கருமாரி அம்மன் துணைகொண்டு இல்லற வாழ்வில் இணைந்து இன்று (25.08.2010) புதன்கிழமையுடன் 25 ஆண்டுகள் இனிதாகப் பூர்த்தி செய்த எம் பெற்றோர் தென்மயிலை குரும்பசிட்டி, தெல்லிப்பழையைச் சேர்ந்த

### திரு.திருமதி ஜெயசுப்ரமணியம் ரோகினி


தம்பதிகளை இன்றுபோல் என்றும் பல்லாண்டு வாழ
வாழ்த்துகின்றோம், வணங்குகின்றோம்.

(102243)

கருமாரி,

பிள்ளைகள் :
ஜெயஜீவன், ஜீவனா, ஜெயசஞ்சீவன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுகராகம் மீட்டுவோம்

ஒரு கல்யாண வீட்டில் பந்தியில் பரிமாறிக் கொண்டிருந்த ஒரு நபரை உற்று உற்றுப் பார்த்தாள் ''உங்களை எங்கேயோ சமீபத்தில் பார்த்த மாதிரி இருக்கிறது என்று இழுத்தார்.

''எங்கே பார்த்திருப்பீர்கள்... போன பந்தியில் பார்த்திருக்கலாம்'' என்றார் சாப்பாட்டு ரசிகர்.

''எப்படி... அடுத்த பந்தியிலும் உட்காரும் எண்ணம் உண்டோ!'' என்று கிண்டல் அடித்தார் பரிமாறுபவர்.

''அது நீர் பரிமாறுவதைப் பொறுத்து இருக்கிறது... இந்தப் பந்தியிலாவது சரியாக பரிமாறிவிட்டால் அடுத்த பந்தியிலே உட்கார வேண்டிய அவசியம் இருக்காது'' என்றார் சாப்பாட்டு ராமன்!

'தேடிச் சோறு நிதம்தின்று' என்று இத்தகையவர்களைப் பாட்டால் அடிக்கிறார் பாரதி. யோகம் கைகூட வேண்டுமென்றால் அளவான உணவு அளவான உறக்கம் அவசியம் என்கிறது கீதை. மனிதன் வாழ்வதற்காக உண்ண வேண்டும். உண்ணுவதற்காக வாழக்கூடாது. மிகுதியாக உண்பவர்கள் அதைச் சீரணிப்பதிலேயே சோர்ந்து போகிறார்கள். குறைவாக உண்பவர்கள் உடம்பின் தேவையை ஈடுகொடுக்க முடியாது சோர்ந்து போகிறார்கள். எனவே மிதமான உணவு என்பதுதான் வாழ்க்கைக் கலை பயில்பவர்களின் உணவுமுறை.

உறக்கமும் அப்படித்தான். சிலர் பஸ்ஸில், ரயிலில் பள்ளியில், நின்றபடி, உட்கார்ந்தபடி எப்படி வேண்டுமானாலும் தூங்குவார்கள். காலநேரம் என்ற வரையறை இருக்காது. இவர்கள் நோயாளிகள் நினைத்தவுடன் தூங்கி நினைத்தபடி விழிப்பவனை குடாகேசன் என்கிறது கீதை. நெப்போலியன் யுத்த களத்தில் குதிரை மீது சில விநாடிகள் தூங்கி ஓய்வு கொண்டு திட்டமிட்டபடி விழித்துப் போர் செய்வான் என்று சொல்லுவார்கள். நம் கட்டுப்பாட்டில் உணவும் உறக்கமும் அமைவது மிக மிக அவசியம்.

உடம்பு வீணையைப் போன்றது என்கிறார் சுவாமி சித்பவானந்தர். நமது உடல் யோக சாதனம். அதைச்சரியாக மீட்டினால் வீணையின் நாதம் போல் சுகராகம் மீட்டலாம். தாறுமாறாக வைத்துக் கொண்டால் அபஸ்வரம் பேசும் ஆபத்து உண்டு.

உடலையும் உள்ளத்தையும் ஒழுங்குபடுத்த யோகாசனம் பயில வேண்டும். எளிய முறையில் உடல், தலை, கழுத்து இவற்றை நேராகக் கொண்டு அசையாது நிறுத்தி தன் நாசியின் நுனியைப் பார்ப்பவன் போன்று அமர்ந்து திசைகளை பாராது இறக்க வேண்டும். முதுகுத்தண்டு நேராக இருந்தால் மூளைக்கு இரத்த ஓட்டம் சீராக இருக்கும். சிந்தனை தெளிவாக இருக்கும். சுவாசம் சீராகும் சுவாசம் சீரானால் மனது சீராகும். உடற்பயிற்சிக்கும் யோகாசனத்துக்குமிடையிலான முக்கிய வேறுபாடு உடற்பயிற்சி உடம்பை மட்டும் பலப்படுத்தும் யோகாசனம் உடம்போடு உள்ளத்தையும் வலுப்படுத்தும் மனோபலம், சிந்தனையாற்றலை எற்பட விரும்புபவர்கள் யோகாசனம் பயில வேண்டும். பொறிகள் புலன்கள் மனம் நம் வசப்படும். வாழ்க்கை சீராகும்.

பிரம்மச்சர்யம் மிக மிக அவசியம். பன்னிரண்டு ஆண்டுகாலம் பிரம்மச்சர்ய நெறியில் இருப்பவர்கள் மேதா நாடி ஒன்றைப் பெறுகிறார்கள் என்கிறார் பகவான் இராமகிருஷ்ணர். இதற்கு சாட்சி விவேகாந்தர் பிரம்மச் சார்யத்தால் மனிதன் பல ஞானம் பெற முடிகிறது என்பதற்கு அவர் அடையாளம். புலன் அடக்கம், பிரம்மச்சர்யம் இவை ஒழுக்கக் கட்டுப்பாடு மட்டுமல்ல அது வாழ்வியல்துறை ஆகும். இதுவே எஸ்ட்ஸுக்குத் தடுப்பு மருந்தென்பது விஞ்ஞானம் கண்ட உண்மை. அதுதான் சரியான வாழ்க்கைமுறை. இளைஞர்கள் கஷ்டமாக இருந்தாலும் இதைக் கடைப்பிடிப்பது அவசியம் பிரம்மச்சர்யம் உடம்பை விட உள்ளத்தை வலுப்படுத்தும் உன்னதசக்தி.

யோகியின்மனம் காற்றில்லாத இடத்தில் வைத்த தீபம் போல ஆடாது அசையாது ஒளிவீசும் என்கிறது கீதை. யோகம் மூலம் மனதை வசப்படுத்தலாம். உடலையும் உள்ளத்தையும் நம்வசம் வைத்துக் கொண்டு தொழிலில் இருந்து விலகாமல் அதன் பலனில் இருந்து விலகி நன்றாக தொழிற்படுவதே கீதை காட்டும்பாதை.

# கெட்டதைக் கேட்காதே

பொதுவாக கேட்டதைப் பேசாதே கெட்டதைப் பார்க்காதே என்று சொல்வார்கள் கெட்டதைக் கேட்கக்கூடாது என்பதற்கு ஒரு காரணம் உண்டு. தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தால் என்றைக்காவது அதைச் செய்து விடுவோம்.

கண் பார்ப்பதை கை செய்யும் என்பது பழமொழி. குழந்தை ஒன்று வீட்டில் சின்ன சின்ன விஷயங்களை யாரும் செய்வதைப் பார்த்துத்தான் தானும் செய்யப்பழகும். இதுபோலத் தான் எந்த வார்த்தையை தொடர்ந்து கேட்கிறீர்களோ அந்த வார்த்தையை அப்படியே பேசி விடுவீர்கள்.

ஒரு வேடிக்கை சொல்கிறேன். சில பெண்கள் வட்டமாக உட்கார்ந்து ஊர்க்கதை பேசுவார்கள். கௌரவமாக இருக்கும் பெண்கள் அந்த இடத்தில் இருந்து பேசக்கூடாது. சில பேர் சொல்வார்கள் நான் ஒன்றும் பேச மாட்டேன். பேசுவதைக் கேட்டுக் கொண்டு தான் இருப்பேன் என்பார்கள். இது தவறு நாம் கேட்டால் அதை நிறுத்தக்கூடிய ஆற்றல் மனதுக்குக் கிடையாது.

ராமர் கதையில் சீதா உட்கார்ந்திருக்கும் பொழுது தகாத வார்த்தைகளை சில பேர் பேசுகிறார்கள். சீதை காதை மூடிக்கொண்டாள். ஏன் அவ்வார்த்தைகள் காதுக்குள் போகக்கூடாது என்பதற்காக.

சமய நூல்களில் சொல்லியிருக்கிறார்கள் உயர்ந்த விஷயங்களை காதில் கேட்பதால்தான் காதை ஓம் என்ற வடிவத்தில் கடவுள் படைத்திருக்கிறார். உயர்ந்த விஷயங்களை கேட்க வேண்டும் கீழானதைக் கேட்கக் கூடாது என்றுதான் அப்படிப் படைத்து இருக்கிறார்.

**சுகி.சிவம்.**

# முயலுக்கு மூன்று கால்

ஒரு ஊரிலே ஒரு குருவும் சிஷ்யனும் இருந்தாங்க இவங்க ஒரே மாதிரியான குருவும் சிஷ்யனும். சிஷ்யன் ஒரு நாள் முயல் வேட்டைக்கு காட்டுக்கு போய் முயல் பிடித்து வந்து நெருப்பிலே சுட்டு காலிலே ஒன்றை மட்டும் சாப்பிட்டான் மீதி முணுகால் இருந்தது! அதைக் கொண்டுபோய் தன் குருவிடம் ரொம்ப பணிவுடன் கொடுத்தான்.

அந்த குரு என்ன அந்த அளவுக்கு தெரியாத ஒரு அப்பாவியா? ரொம்ப ஊக்கமா 'இன்னொரு கால் எங்கேப்பா?' என்று சிஷ்யன் பார்த்தான். 'நான் பிடிச்ச முயலுக்கு மூணுகால் தானே இருந்தது! என்றான். சிஷ்யன் பொய் சொல்லுகிறான் என்பது குருவுக்கு தெரிஞ்சதும் சரி... இவன் சொன்னதுதான் சொன்னான். சொன்ன பொய்யை காப்பாத்துற சாமர்த்தியமாவது இவனுக்கு உண்ட என்கிறதை சோதிச்சு பார்க்கணும்! என்று முடிவு பண்ணினார்.

கொஞ்ச நாள் கழித்து சிஷ்யனை கேட்டபோதும் இதே பதில்தான் வந்தது. இவன் பொய்யை காப்பாத்திறதிலே ரொம்ப பிடிவாதமாக இருக்கிறான். இவனுக்கு ஒரு பரீட்சை வைக்க வேண்டும் என முடிவு செய்தார். சிஷ்யனை கூப்பிட்டு அவன் நெத்தியில் பொட்டு வைச்சு நீ எனக்காக ஒரு காரியம் செய்யனும் என்றார். செய்யிறேன் என கேட்க நீ ஒவ்வொரு நாளும் ராஜாவின் சாப்பாட்டை திருடிக் கொண்டு வர வேண்டும் என உத்தரவு அளித்தார். அவனும் தொடர்ந்து இவ்வாறே செய்து கொண்டிருந்தான். அரசனுக்கு அவமானமாக போட்டுது இதை கண்டு பிடிக்க முடிவு செய்தார். இதை கண்டுபிடிச்சு தருபவர்களுக்கு ஆயிரம் பொன் என அறிவிச்சார். குரு ராஜாவிடம் சென்று சாதம் - குழம்பு எல்லாம் சூட வைச்சிருந்தா திருடனை கண்டுபிடிக்கலாம் என அறிவிச்சார். அப்படியே ராஜாவும் செய்தார். வழக்கம்போல சிஷ்யன் ராஜாவோட சாப்பாடை திருடப்போனார். பாத்திரத்திலே எல்லாம் சூடா இருந்ததினால் ஆவி பறந்தது. இவன் அப்படி பாத்திரத்தை தூக்கிக் கொண்டு மெதுவாக நகர்ந்தான்.

அந்த ஆவி இவன் நெற்றியில் பட்டு பொட்டு அழிந்தது இதைவச்சு திருடனை சுல்பமாக கண்டு பிடிச்சுட்டுச் சுட்டார் ராஜா. இவனுக்கு தண்டனை வழங்குங்கள் என உத்தரவிட்டார். அந்த சமயத்திலே குரு வந்து சிஷ்யனை பார்த்து அடேய் சிஷ்யா! இப்பவாவது நீ பிடிச்ச முயலுக்கு எத்தனை கால் என்று உண்மையை சொல்லு! உன்னை தண்டனையில் இருந்து காப்பாத்திறேன் என்றார். அவன் அப்பவும் மூன்று கால் என்றான். குரு அசந்து போனார். ராஜாக்கிட்டே சிபார்சு பண்ணி குடுத்த தண்டனையை ரத்து பண்ணினார். அதுக்கப்புறம் சிஷ்யனை அழைத்துக் கொண்டு போய் உட்கார வைத்து உபதேசம் பண்ணினார்.

சொன்னது பொய்யா இருந்தாக்கூட அந்த பொய்யை காப்பாத்திறதில எவ்வளவு உறுதியா இருந்திருக்கிறான் பாருங்க அந்த ஆள்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA
## TENDER NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed tenders from civil works contractors registered with ICTAD for the following works.

| Work Details | Approximate Direct Construction Cost (Rs. in mn) | Refundable deposit (Rs.) | Non refundable depo sit (Rs.) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|
| Raising up Boundary wall at theHostel in Jaffna Town. Universityof Jaffna | 1.3 | 13,000.00 | 400.00 | M 8/ C 9 (Buildings) |
| Modification of one room in RAFA Hostel. Maruthanarmadam as Health Centre, Universit of Jaffna | 1.0 | 10,000.00 | 400.00 | M 8/ C 9 (Buildings) |

'Tender forms may be obtained from Senior Assistant Registrar / Capital Works & Planning, University of Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above tender fee at the Shroff's Counter, University of Jaffna until 06.09.2010.

Perfected tender should be sealed and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna, P.Box 57, Thirunelvely, Jaffna or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna.

Tenders will be accepted till 2.00 p.m on 09.09.20 10 and open immediately thereafter.

Tenderers or their accredited representatives could be present at the time of opening of tenders.

Tender forms may be inspected by the tenderers free of charge at the Capital Works & Planning Branch of this University during office hours, if necessary.

P-0 Box 57,
Thirunelvely,
Jaffna.
24.08.2010

Registrar,
University of Jaffna.

(C/570127)

# கொவிசெத
உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 769
சீட்டிழுப்பு திகதி 23.08.2010

எழுத்து: R
வெற்றி இலக்கங்கள்: 01 65 67 69

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 22,157,531.20 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 08 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 307 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 613 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 14983 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 8544 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 213342 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 33532 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,164,540.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 22,668,774.40

வெற்றிப் பெறும் சீட்டுகள் மோதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk

# கே.பியின் பணம் குறித்து எதிர்கட்சி கரிசனை: நகைப்புக்கிடமானது என்கிறார் அமைச்சர் சுசில்

கொழும்பு, ஒக. 25

அரசுக்கு ஆதரவு வழங்குவது குறித்துச் சிந்திக்காமல் கே.பியிடமுள்ள கணக்கு மீதி தொடர்பாக எதிர்க்கட்சியினர் கரிசனை காட்டுகின்றமை வேடிக்கைக் குரியது என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

கே.பியை கைது செய்தது எதிர்க்கட்சியா, என அக்கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள கே.பியிடம் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

அத்துடன், தடுத்து வைக்கப்பட்டுள்ள கே.பியினால் சர்வதேசரீயில் வைக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்குகள் மற்றும் சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் அவர் கூறினார்.

இது குறித்து ஒரே தடவையில் கருத்துக்களை கூற முடியாதுள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, தடுத்து வைக்கப்பட்டுள்ள கே.பியினால் சர்வதேசரீயில் வைக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்குகள் மற்றும் சொத்துக்கள் உள்நாட்டிலும் இனங்காணப்பட்டால் அவை அரசுடமையாக்கப்படும் என்றும் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த குறிப்பிட்டார்.

(ஒ-11)

Mega SAT
After O/L & A/L Join CSC-ASIAN
மெகா ஸ்கொலர்ஷிப் 2010
Win 75% SCHOLARSHIP
கொம்ப்யூட்டர் உயர்கல்விக்கான இலவச புலமைப்பரிசில் பரீட்சை
இலவச பரீட்சை
செப்டெம்பர் 12th ஞாயிறு

கொம்ப்யூட்டர் புலமைப்பரிசில்
- பரீட்சை அனுமதி முற்றிலும் இலவசம்
- பரீட்சையை தமிழ் or ஆங்கிலத்தில் எழுதலாம்
- அடிப்படைத் தகைமை G.C.E. (O/L)
- வினாத்தாள் 50 நிமிடங்கள் மட்டுமே
- O/L பாடத்திட்டம் மற்றும் பொது அறிவு வினாக்கள்
- 75% வரையான ஸ்கொலர்ஷிப் (கட்டணக்கழிவு)
- இலவச பாடநூல்கள் (இந்தியா & இலங்கை)
- தவணைமுறை கட்டண வசதி
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்



O/L, A/L பரீட்சைகளின் பின் Why Pay More?
உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ICT துறையில் ஆர்வம் உள்ளவர்கள் அனைவரும் மெகா இலவச புலமைப்பரிசில் பரீட்சையில் பங்குபற்றி, பெறும் மதிப்பெண்களுக்கமைய 75% வரையிலான ஸ்கொலர்ஷிப்பைப் பெற்றுக்கொள்ளலாம்.

Collect Your Free Admission Card, Today !
விரையுங்கள், வெற்றிபெறுங்கள் !

CSC-ASIAN COMPUTER EDUCATION
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-2262399
230, 1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி. T.P : 021-2270267

Auto A/C

வாகன குளிரூட்டி
சகல திருத்த வேலைகளுக்கும் பொருத்துதல்களுக்கும் விசேட நிபுணத்துவம் பெற்றவர்கள்
1 நாள் சேவை
Ranco Air Conditioning Services
No. 12, Wasala Road, Dehiwala.
T.P. 2737274, 0777-487788
வில்லியம் கிரைண்டிங் மில்லுக்கு எதிரே

## ROTARACT CLUB OF JAFFNA MID - TOWN

விளையாட்டுப் போட்டிகளின் விவரங்கள்

| இல | போட்டி | பிரிவு | நிபந்தனை |
|---|---|---|---|
| 01. | கூடைப்பந்து | வயதெல்லை அற்றது ஆண்/பெண் | 5 பேர் கொண்ட 10 நிமிடங்கள் |
| 02. | கரப்பந்து | வயதெல்லை அற்றது ஆண்/பெண் | 3 பேர் கொண்ட 11 புள்ளிகளை கொண்ட 3 சுற்று |
| 03. | வலைப்பந்து | வயதெல்லை அற்றது பெண் | 7 பேர் கொண்ட 20 நிமிடங்கள் |
| 04. | சதுரங்கம் | 11,13,15,17,19 மற்றும் வயதெல்லை அற்றது | வயதெல்லை அற்ற போட்டி |
| 05. | கிரிக்கெட் (மென்பந்து) | வயதெல்லை அற்றது ஆண் | 6பேர் கொண்ட 5 ஓவர்கள் |

விண்ணப்பப் படிவங்களை பின்வரும் இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
1.உதயன் பணிமனை
2.ரமணன் ஸ்போட்ஸ், இல.175, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0777167887
*போட்டி நிரல் தெரிவு 29.08.2010 (ஞாயிறு) பி.ப.2.30 மணிக்கு உதயன் பணிமனையில் இடம்பெறும்.
*முடிவு திகதி: 28.08.2010.
தொடர்பு கொள்ள வேண்டிய தொ.பே: 0778460089, 0771738095.
*போட்டிகள் அனைத்தும் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தாலியில் இலங்கைத் தூதரத்தின் மோசடி குறித்து விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஓக. 25

இத்தாலிக்கான இலங்கைத் தூதரகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இத்தாலிக்கான இலங்கைத் தூதரகத்தில் சுமார் ஒரு கோடி முப்பது லட்சம் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்படப்படுகிறது.

இலங்கைக் கணக்காய்வாளர்களினால் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இது தொடர்பான விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என இத்தாலிக்கான இலங்கைத் தூதுவர் ஹேமந்த வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தச் சம்பவம் குறித்து வெளிவிவகார அமைச்சிற்கு தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (சி)

# சோமாலியாவில் கடத்தப்பட்ட இலங்கையரை விடுவிப்பதற்கு நாற்பது லட்சம் டொலர் கப்பம்

கொழும்பு, ஓக. 25

சோமாலியர்களால் கடத்தப்பட்ட இலங்கையர்களும் அடங்கிய கப்பலை விடுவிப்பதற்கு, 40 லட்சம் அமெரிக்க டொலர்கள் கப்பமாக கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எகிப்திய செய்தித்தாளான 'அல் அஹ்ராம்' இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

எம் வீ சூயிஷ் என்ற இந்த கப்பல், ஓகஸ்ட் மாதத்தின் ஆரம்பத்தில் கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

23 கப்பல் அதிகாரிகளுடனான இந்த கப்பலில், 11 எகிப்தியர்களும், இந்திய மற்றும் இலங்கை அதிகாரிகளும் தங்கி இருப்பதாக அந்தச் செய்தித்தாள் தெரிவித்துள்ளது. (சி)

# கிராம சேவையாளர்களின் பணிகளை பார்வையிடும் பிரதேச செயலர்

யாழ்ப்பாணம், ஓக. 25

யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராம சேவையாளர்களின் பணிகளை பிரதேச செயலர் நேரடியாகச் சென்று பார்வையிட்டு வருகின்றார்.

கிராம சேவையாளர்களின் பணி அவர்கள் மக்களுக்கு ஆற்றும் சேவைகள், அவர்களின் முகாமைத்துவம் போன்றவை பிரதேச செயலரினால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

சிறந்த முகாமைத்துவமும் சேவையும் கொண்ட கிராம உத்தியோகத்தர்கள் இனம் காணப்பட்டு அவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (த-26)

# புதர் மண்டிக் காணப்படும் அச்சுவேலித் தபாலகக் காணி

அச்சுவேலி, ஓக. 25

அச்சுவேலியில் தபால் நிலையத்துக்கு நிரந்தரமான கட்டடம் நிர்மாணிப்பதற்கு பொதுமக்களின் நிதி உதவியுடன் கொள்வனவு செய்யப்பட்டு அஞ்சல் திணைக்களத்துக்கு கையளிக்கப்பட்ட காணி பற்றைக்காடாக புதர் மண்டிக்கிடக்கிறது.

பொதுமக்களின் நிதி உதவியுடன் அச்சுவேலி தபால் நிலைய அபிவிருத்திச்சபை 5 பரப்புக் காணியை அச்சுவேலி - சங்கானை வீதியில் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அண்மையில் கொள்வனவு செய்து அஞ்சல் திணைக்களத்துக்கு வழங்கியுள்ளது.

5 வருடங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்து வழங்கப்பட்ட காணியில் இதுவரை புதிய கட்டடம் கட்டப்படவில்லை. இதுதொடர்பாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அஞ்சல் திணைக்களத்துக்கு சொந்தமான இந்தக் காணி டெங்க ஒழிப்பு வேலைத் திட்டத்தில் கூட துப்புரவு செய்யப்படாமல் புதர்மண்டிய நிலையில் இருப்பதாக பொதுமக்கள் பேசிக் கொள்கின்றனர்.

அஞ்சல் நிலையத்தின் சொத்து என்பதை அடையாளப்படுத்தும் பெயர் பலகையோ, காணியின் எல்லையை உறுதிப்படுத்தும் வேலிகளோ இல்லாமல் அது காணப்படுகின்றது. (த-11)

## இறுப்பிட்டி வீதி விரைவில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 25

புங்குடுதீவு, இறுப்பிட்டி வீதியைத் தார் ஊற்றி புனரமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் புனரமைப்புப் பணிக்கு முன்னோடியாக தற்பொழுது கற்கள் பறிக்கப்பட்டு வருவதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

போக்குவரத்து செய்யமுடியாத அளவுக்கு இந்த வீதி சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-26)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.25

நல்லைக் கந்தன் ஆலயப் பெருந் திருவிழாவையொட்டி இளங்கலைஞர்மன்றமும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானமும் இணைந்து துர்க்கா மணி மண்டபத்தில் நடத்தும் இசையரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு யசோதரன் நவரூபன், யசோதரன் காண்டீபன் ஆகியோரின் சக்ஸபோன் கச்சேரி இடம்பெறும்.

திருமதி கிருஷ்ணாலினி அகிலன் வயலினும், ஆர். ஆனந்தகணேசன் தவிலும்,எஸ்.செந்தூரன் முகர்சிங்கும் வாசிப்பர். (201)

* * *

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழா காலத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடத்தும் சமயச் சொற்பொழிவுகள் மற்றும் கலைநிகழ்வுகள்வரிசையில் இன்று பி.ப 3 மணிக்கு 'ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது' என்னும் தலைப்பில் சைவப் புலவர் நா.நவராஜின் சிறப்புச் சொற்பொழிவு இடம் பெறும்.

சைவவித்தியா விருத்திச் சங்க அறநெறிப்பாடசாலை, திருநெல்வேலி தவசிகுளம் கண்ணகை அம்மன் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெறும். (201)








# நல்லூர் பெருந்திருவிழாக் கால சிறப்பம்சம்

## உன் திருவடி பணிந்தேன் ஞானவடிவேலா!

கதம்ப வனத்தில் உறையும் கந்தா!
எம் மனக் குறையினை தீர்த்திடுவாய் ஐயா!
வள்ளி மணவாளா, கொஞ்சும் எழில் பாலகா!
கேட்பதனைத் தரவல்ல எந்தன் முருகா!
பக்தர் குறை தீர்த்திடுவாய் அருட் குமரா!
பரமசிவனுக்கு உபதேசித்த ஞானமுருகா!
பார்வதி கையில் தவழ்ந்த பாலகனே முருகா!
ஆனைமுகன் தம்பியே ஆறுமுகா!
அசுரரின் குடிகெடுத்த வேல்கொண்ட வேலவா!
நல்லைப் பதியிலே அழகு காட்டும் அழகுவடிவேலா!
உன் திருவடி பணிந்தேன் ஞானவடிவேலா!
என்றும் எம்மை காத்திடுவாய் வேலவனே முருகா!

சி.சுபாங்கி
வண்ணார்பண்ணை.

## விளையாடி வருகிறான்

நல்லூரின் பதியிலுறை அழகு மிகு கந்தன்
மக்களது வெள்ளத்துள் மிதந்து வருகின்றான்
கா லெடுத்து வைக்க இடமில்லா இடத்தில்
வேல் கையில் ஏந்தியவன் விளையாடி வருகிறான்

அழகான மயில் மீது ஒய்யாரமாக
ஓங் கார மூர்த்தியின் தம்பி வரு கின்றான்
ஓங்கு புகழ் கைலையின் சங்கரனின் மைந்தன்
குன்று தோறாடிய குமரன் வருகின்றான்

பழனி மலை மீதிலே ஆண்டியாய் நின்றவன்
பக்தர் கள் குறை தீர்க்க நல்லூரில் வருகிறான்
பச்சை மயில் ஏறி நின்று சூரனைத் தொலைத்தவன்
வள்ளி தெய்வ யானையுடன் எமக்கருள வருகிறான்.

நடராஜ்முருகன்
யாழ்ப்பாணம்.

## குறை தீர்க்க எழுந்தருள்வாய்

ஆறுபடை முருகா - எமக்கு
அருள் செய்யும் கந்தா
ஆறுதல் இழந்த எமக்கு நீ
அருளிடுவாய் அமைதிவாழ்வு
நல்லூர் பதி முருகா - உனை
நாடி வந்தோம் நலம் பெறவே
உன்தன் பதம் தேடிஓடி வரும் - பக்தர்
குறை தீர்க்க எழுந்தருள்வாய்.

அ.ஜெனிசி
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

## விரைவாக வந்திடுவாய்

நல்லூர் வேந்தா நலமருளும் கந்தா
நாடி வரும் பக்தர் தம்
வேண்டுதல்கள் விருப்பங்களை
பூர்த்தி செய்ய நீயேதான்
வர வேண்டும் விரைவாக
உன் அருளை வேண்டி நிற்கும்
அடியவர்கள் குறைதீர்க்க
வந்திடுவாய் ஆறுமுகா
தந்திடுவாய் உன்னருளை

சுஜீவன்
சாவகச்சேரி.

## வேண்டும் வரம் தருவோனே

நல்லைப் பதிவாழும் நல்லூர் முருகனே
வல்ல வடிவே லழகனே - சொல்லரிய
உன்புகழை உன் அடியார் ஓதிவழிபடவே
உன்னதமாய் வாழ்வார் உயர்ந்து

வெற்றிவேல் குமரனே வேண்டும் வரம் தருவோனே - எம்
சஞ்சலங்கள் தீர்த்து நீ சாந்தி தர வேண்டும்
வள்ளி தெய்வானை விரும்பிடும் மன்னவா
வரவேண்டும் அனுதினமும் அடியார்க்கு அருள்தரவே

ஜெ.கேதா
வட்டக்கச்சி.

## இன்பங்கள் பொங்கும் இனிது

நல்லூரின் கந்தா உனைநாடி வந்தவர்க்குப்
பொல்லாதன வெல்லாம் போகுமே - நில்லாது
துன்பங்கள் நீங்குஞ் சுகவாழ்வு கைகூடும்
இன்பங்கள் பொங்கும் இனிது.

அமரர் சி. இராசரத்தினம்
வேலணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்காபிஷேகம்

துணவி, சிவனின்கூடல் ஞானவைரவ சுவாமி ஆலய கும்பாபிஷேக தின சங்காபிஷேக நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. அன்றையதினம் முற்பகல் 11 மணிக்கு 108 கலச சங்காபிஷேகம் நடைபெற்று அதனைத் தொடர்ந்து விசேட பூசையும் இடம்பெறும்.

மாலை 6மணிக்கு பூசை ஆரம்பமாகி இரவு 7மணிக்கு சோடசோபசார பூசை இடம்பெற்று சுவாமி திருவீதியுலா வருவார். (204)


# Jaffna College Institute of Technology

Vaddukoddai

A training Institute registered with the Tertiary and Vocational Educational Commission (TVEC) Under P25/0014

## Commencing in first week of September 2010

**01.Diploma coures One Year full time**

**I. Computer Programming & Data Processing**

System Analyzing & Design
Data base Management System
Fundamentals of Computer Technology
Data Processing
Application Packages
Visual Basic dotnet
Oracle C++
Java English

**II.Civil Draughtsmanship**

Building Construction
Construction Materials
Sanitary Engineering
Engineering Science
Engineering Drawing
Draughtsmanship
Quantity Surveying
AutoCAD, English, Maths

**2. CraftCertificateCourses (fulltime)**
**(தமிழ்மொழிமூலம்)**

I. Electrical Wiring
மின் இணைப்பும், நிர்மாணமும்
II. Air Condition & Refrigeration
குளிரூட்டுதலும், பதனிடலும்
III. Machine shop Practice
லேத், வெல்டிங் பிற்றிங் பயிற்சி
IV. Automobile Mechanic
மோட்டார் வாகன தொழில்நுட்பம்
V. Radio,TV& Serving Practice
றேடியோ, ரி.வீ பழுது பார்த்தல்
VI.Domestic Electrician
மின் இணைப்பும் நிர்மாணமும்
VII..Aluminum Fitting & Fabrication
அலுமினியம் பொருத்துதலும், இணைத்தலும்

**Computer Certificate Courses 3 months Part time**

**Microsoft Office**
- ms word
- Ms Excel
- Ms Access
- Ms Power point

**Printing Technology**
- Page Maker
- Corel Draw
- Photos Shop

- Auto CAD
- C++
- Pascal
- HTML
- Maya
- Visual Basic 6/.Ne
- Computer Hardware
- Internet & E-Mail

**Fundamentals of Information and Computer Technology (FICT) Duration 1 1/2 Years**

Computer System 1& 2
PC Application
ICT for National Development
HTML
Fundamental of Multimedia
Internet & E-Mail
Computer Programming (Pascal &VB)
Data Communication & Network
Information System & Technology

**Computerrize Business Accounting**

Accpac,
Tally, Quick Book

**மேலதிக வசதிகள்**

குறுகிய காலப் பயிற்சிநெறிகள்.
குறைந்த கட்டணம்! அதுவும் தவணை முறையில் செலுத்தும் வசதி
நிறைவான செய்முறைப் பயிற்சிகளுடன் கூடிய நன்கு வடிவமைக்கப்பட்ட கற்கை நெறிகள்.
மேலதிகமாகக் கணனி, ஆங்கிலம் ஆகிய துறைகளிலும் அனைவர்க்கும் பயிற்சி.
சிறந்த நூலகம், விளையாட்டுத்துறை, விடுதி போன்ற மேலதிக வசதிகள்.

**Further Details:**
Director, JCIT, Vaddukodd4 Sri Lanka.
Tel:0213213139/0212228275 E-mail:jcit@sltnet.lk


# 2 ஆம் ஆண்டு நினைவலைகள்





| தங்கராசா | கணபதி | பொன்னுத்துரை |
|---|---|---|
| ஜேந்தன் | திருநாவுக்கரசு | சுவிந்தன் |
| தோற்றம் | தோற்றம் | தோற்றம் |
| 11.11.1983 | 30.11.1946 | 17.08.1991 |

மறைவு - 16.09.2008

இருள் சூழ்ந்த எம் வாழ்வு இனி விடியமாட்டாதா - எம்
இதயத்தில் பதிந்து வைத்த - உறவு மீண்டும் வராதா
இருள்மேகம் மறைந்து பகலவனும் வருகின்றான்
பாசமே வடிவான ஜெயந்தனும், சுவிந்தனும்
மாமனாரின் உறவோடு காற்றிலே கரைந்தனரே
வருவாரோ மூவரும் எம் வாசலில் மீண்டும்.

வளர்மதி,
கரவெட்டி கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

# அனைத்துச் செய்கை நிலங்களிலும் வவுனியாவில் இம்முறை பயிர்ச்செய்கை

கொழும்பு, ஓக. 25

நான்கு தசாப்தங்களுக்குப் பின்னர் இம்முறை காலபோகத்தில் வவுனியா பிரதேசத்தின் அனைத்துச் செய்கை நிலங்களிலும் பயிர்ச் செய்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாவட்டச் செயலக அலுவலகத்தில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வட பகுதியில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தல் மற்றும் அவர்களுக்கான உட் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் ஆகிய வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

தரிசாகக் காணப்படும் வயல்களில் செய்கை மேற்கொள்வதற்காகக் கண்ணிவெடிகளை அகற்றுதல், காணிகளைத் தயார்ப்படுத்தல் மற்றும் நீர்ப்பாசன நிர்மாணங்கள் ஆகியவற்றைத் துரிதமாக நடைமுறைப்படுத்தப்படுவதாகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கூறினார்.

வடபகுதி மீள் குடியேற்ற நடவடிக்கைகள் குறித்துத் திருப்தியடைய முடியுமெனக் கூறிய அமைச்சர், வெளிநாட்டு உதவிகள் மற்றும் உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்திப் பிரதேச அபிவிருத்திகளை முன்னெடுப்பதாகவும் தெரிவித்தார்.

## அமைச்சர் பஸில் தகவல்

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அமைச்சர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (சி)


**நல்லூரான் உற்சவ தினங்களில் அதிரடி மலிவு விற்பனையில்...**

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குளியலறை சாதனங்கள், சகல மாபிள் வகைகள் கொமட் செட் வகைகள், பைப் வகைகள், "DUKE" பெயின்ற் வகைகள், கால்சீற் பேசின்கள் போன்றவற்றை தரமான மலிவான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

போக்குவரத்து வசதி இலவசம்.

**ஸ்ரார் செராமிக்ஸ்**
இல.05, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 0215672061, 077 7578277.


# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி கந்தவனம் தர்ஷிகா
(மாணவி, கொக்குவில் இந்துக்கல்லூரி)



சிந்தாமணி விநாயகர் அருளியது 25.05.1990

சிந்தாமணி விநாயகர் கழல் சேர்ந்தது 23.08.2002

திதி: 25.08.2010

கந்தவனம் மனையில்
களித்தாறி மீண்டென்கால்
வந்திடுவாய் என்றேதான்
வரந்தந்தனுப்பினரோ?
சிந்தாமணி கஜனார்
செல்வி தர்ஷிகா மகளே!
சிந்தாமணியின் பாதம்
தித்திக்க வாழி அம்மா!

அப்பா, அம்மா, சகோதரர்,
சகோதரிகள்,
உற்றார், உறவினர்.

'கவி போட்டோ',
நவாலி தெற்கு.

(102331)

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர் நடராசா சிவபாக்கியம்

தோற்றம் 15.06.1927

மறைவு 24.07.2010



நாம் வாழும்வரை
உம் நினைவும் வாழும்

கடந்த 24.07.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் இன்று (25.08.2010) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். எமது குடும்பத்தலைவியின் பிரிவுத்துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மெமோறியல் லேன்,
சங்குவேலி தெற்கு,
மானிப்பாய். (102289)

குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




| மறைவு | மறைவு |
|---|---|
| 19.07.2009 | 04.09.2009 |
| தியாகராஜா தர்மலிங்கம் | திருமதி தருமலிங்கம் மனோன்மணி |

இரு ஆலமரம் போல் இருந்து எமக்கு
வழிகளைக் காட்டினீர்களே!
அங்கே ஆலம் வித்துக்களாய்
நாங்கள் இருந்தோமே
மெதுவாய் ஒரு ஆலமரம் சாய
விரைவாய் மற்றையதும் சாய்ந்ததுவே
அதைபோல உம்மை விட்டு நாமும்

எம்மைவிட்டு நீங்களும்
வெகு தூரம் சென்றுவிட்டீரே!
சென்ற தூரம் அறியாமல்
ஓராண்டும் சென்றதுவே
ஆயினும் உம் நினைவுகள்
அன்றும் இன்றும் என்றும்
எம்முள்ளே இருந்துகொண்டே
உள்ளதுவே.

44/4, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு. (102407)

உங்கள் நினைவுகள் மாறாமல்
நினைத்திருக்கும் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தில் தொலைந்த ஆவணங்களை உடன் வழங்க நடவடிக்கை எடுங்கள்

## அரசிடம் வன்னி மக்கள் கோரிக்கை

மன்னார், ஓக. 25

யுத்தம் நிகழ்ந்த காலகட்டத்தில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள், அத்தாட்சிப் பத்திரங்கள் உள்ளிட்ட பெறுமதியான ஆவணங்கள் காணாமற்போயுள்ளதாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் அவ்வப் பிரதேச செயலாளர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

தமது பிள்ளைகள் கல்வி பயிலும் பாடசாலைகளில் அவர்கள் தொடர்பான கோப்புகளில் பத்திரப்படுத்தி வைக்கப்பட வேண்டியுள்ள பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள், ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை சான்றிதழ்கள் போன்றவையும் இவ்விதம் காணாமற்போயும், அழிந்தும் போயுள்ளதாகவும்-

இவ்விதம் காணாமற்போயும், அழிந்தும் போயுள்ளவற்றுள் தேசிய ஆள் அடையாள அட்டைகளும் உள்ளடங்கியிருப்பதால் அவை அனைத்தையும் மீளப் பெறுவது தொடர்பாக கவனம் செலுத்துமாறும் வன்னிப் பிரதேச மக்கள் பிரதேச செயலாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க)

# வன்னியில் தொடரும் கடும் மழை

கிளிநொச்சி, ஓக. 25

சில தினங்களாக வன்னிப் பிரதேசத்தில் தொடரும் கடும் மழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

மீள்குடியமர்ந்த மக்கள் இந்தத் திடீர் மழையினால் செய்வதறியாது திண்டாடிக் கொண்டிருப்பதனைக் காண முடிகின்றது. தற்காலிகக் கொட்டில்களில் குடியிருப்போர் வெள்ள நீர் உட்புகுந்ததால் தமது எஞ்சிய உடைமைகளைக்கூட காப்பாற்றுவதற்கு இயலாத நிலையில் உள்ளனர்.

பல இடங்களில் வெள்ளநீர் தேங்கியுள்ளதால் தொற்றுநோய்கள் பரவும் அபாயமும் தோன்றியுள்ளது. (க-405)

# திருநகர் நீர்போக்கி வேலைகள் அரைகுறையில்; போக்குவரத்தில் பயணிகள் பெரும் சிரமம்

கிளிநொச்சி, ஓக. 25

கிளிநொச்சி நகருக்கு அண்மையில் உள்ள திருநகர் வீதியில் மஞ்சுளா பேக்கரிச் சந்திக்கு அண்மையில் அமைக்கப்பட்டு வரும் நீர்ப்போக்கி (போக்) வேலைகள் இதுவரை பூர்த்தி செய்யப்படாமையால் இவ்வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

ஒரு வாரத்திற்கு மேலாக மந்தகதியில் நடைபெற்றுவரும் இவ்வேலைகளால் இவ்வீதியால் வாகனங்கள் எதுவும் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

அண்மையில் பெய்த மழையினால் இந் நீர்ப் போக்கியில் இரு மருங்கும் சேறும் சகதியுமாகக் காணப்படுவதால் நடந்து செல்பவர்களும், சைக்கிள், மோட்டார் சைக்களிள்களில் செல்பவர்களும் வழுக்கி விழுந்து செல்வதைக் காண் முடிகின்றது.

வீதி திருத்தப்பணிகள் இடம்பெறும் போது அப்பகுதிக்கு முன்னுள்ள சந்திகளில் மாற்று வழிகளைப் காட்டும் குறியீடுகள் அல்லது அறிவுறுத்தல்கள் வைக்கப்படுவது வழக்கமாகும். ஆனால் இங்கு அவ்வாறான எதுவும் இடம்பெறவில்லை.

இதனால் இவ்வீதியில் வரும் வாகனங்கள் அப்பகுதிவரை வந்து திரும்பிச்செல்ல வேண்டியுள்ளது.

ஒரு சில மணி நேரங்களில் பூர்த்தி செய்யக்கூடிய இவ்வேலைகளை இவ்வாறு ஒரு வாரம் கடந்துள்ள நிலையிலும் பூர்த்தி செய்யாமல் இருப்பது குறித்து பிரதேச மக்கள் விசனமடைகின்றனர். எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் விரைந்து இப் பணியினை நிறைவு செய்து இவ்வீதியூடான போக்குவரத்துக்கு உதவ வேண்டும் என மக்கள் கோருகின்றனர். (க-405)

# கிளிநொச்சி கணேசபுரம் பகுதியில் தொடர்ந்து கொட்டப்படும் கழிவுகள்

கிளிநொச்சி, ஓக. 25

கிளிநொச்சி நகருக்கு அண்மையில் உள்ள கணேசபுரம் பகுதியில் தொடர்ந்தும் கழிவுகள், குப்பைகள் கொட்டப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாகச் செல்லும் கணேசபுரம் வீதியின் அருகே புகையிரத வீதி அமைந்திருந்த இடத்தில் கழிவுகள் கொட்டப்பட்டிருந்தன. இது தொடர்பாக கடந்த 21ஆம் திகதி உதயனில் செய்தி வெளியாகியிருந்தது. தற்போது இப்பகுதியில் மக்கள் மீளக்குடியேறாத வெறும் காணிகளில் தற்போது கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன.

தற்போது டெங்கு நுளம்பினைக் கட்டுப்படுத்த பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இவ்வாறு கிளிநொச்சி நகருக்கு அண்மையில் மக்கள் குடியிருக்கும் இடங்களில் கழிவுகள் கொட்டப்படுவதைத் தடுக்க உரிய தரப்பினர் முன்வர வேண்டும் என பிரதேச மக்கள் கோருகின்றனர்.

(த-405)

# வட பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த ஒரு லட்சம் முஸ்லிம்கள் அகதி வாழ்வு

## மீள்குடியேற்ற அமைப்பின் தலைவர் விசனம்

மன்னார், ஓக. 25

வடபகுதி அகதி மக்தள் அனைவரும் முற்றாக மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். இன்னும் ஐந்து சதவீதத்தினரே (சுமார் 10 ஆயிரம் பேர் மட்டுமே) மீதமுள்ளனர் என்று வடமாகாண ஆளுநரும் அரசாங்கமும் தொடர் அறிக்கைகள் விட்டபோதும் 1990 இல் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களில் சுமார் ஒரு லட்சத்துக்கு அதிகமானோர் இன்னும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டவில்லை என்று விசனத்துடன் கருத்து வெளியிட்டார் மன்னார் முஸ்லிம் மீள்குடியேற்ற அமைப்பின் தலைவர் எம்.காதர்.

இதுபற்றி அவர் கூறுகையில், 1990 இல் விடுதலைப்புலிகளால் வடக்கிலிருந்து சுமார் 15 ஆயிரம் முஸ்லிம் குடும்பங்கள் வெளியேற்றப்பட்டு இன்று வரையில் அவர்கள் சுமார் 30ஆயிரமாகப் பெருகிவிட்டனர். இவர்களில் சுமார் இரண்டாயிரம் குடும்பங்கள் மட்டுமே மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் தாமாக மீள்குடியேறியுள்ளனர். மீதமுள்ள சுமார் ஒரு லட்சத்துக்கு அதிகமான முஸ்லிம்களை மீள்குடியேற்ற, மீள்குடியேற்ற அமைச்சோ, அரசாங்கமோ எவ்வித காத்திரமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த நிலையில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துடன் 20 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இதன்பின்னரும் எமது மீள்குடியேற்றம் தாமதமானால் நிச்சயமாக எமது சகல குடியியல் உரிமைகளையும் இழக்க நேரிடும் எனவும் அவர் அச்சம் தெரிவித்தார்.

(க-80)

# மீள்குடியேறிய மக்களுக்கு வழங்கப்பட்ட சிமெந்துப் பைகள் பழுதடைந்து வீணாகின

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய மக்களுக்கென இந்தியாவால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட சிமெந்துப் பைகள் பழுதடைந்த நிலையில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்து மீள்குடியேறிய மக்களின் தேவைகளுக்காக இந்தியா 500 சிமெந்துப் பைகளை அன்பளிப்பாக வழங்கியிருந்தது. இவை உரியவர்களுக்கு விநியோகம் செய்யப்படாத நிலையில் வவுனியா பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டத் தொகுதியில் கடந்த மூன்று மாதங்களாக அடுக்கிவைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை பயன்படுத்த முடியாத நிலையில் பழுதடைந்து காணப்படுகின்றன.

மீளக்குடியேறிய மக்கள் தறப்பாள்கள், கொட்டில்கள் என்பவற்றில் தஞ்சமடைந்து துயரமடைய அவர்களுக்கு வழங்கப்பட்ட சிமெந்து மூடைகள் இவ்வாறு வீணே பழுதாகிப் போவது பலருக்கும் வேதனையைக் கொடுப்பதாகவும் தெரியவருகிறது. (க)

# வேலையற்ற இளைஞர்கள் நடுவீதியில்; மீள் நியமனம் பெற்ற முதியோர்கள் அலுவலகத்தில்

[illegible], ஓக. 25

மன்னாரில் அரச திணைக்களங்களில் ஓய்வுபெற்ற ஊழியர்களும், 60 வயதைத் தாண்டியவர்களும் தொடர்ந்து மீண்டும் சேவைக்கு நியமிக்கபடுவதால் வேலையற்றவர்களும், பட்டதாரிகளும் வேலை ஏதுமின்றி ஆயிரக்கணக்கில் வாடுவதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

படித்து முடித்து வேலையற்று நாங்கள் காத்திருக்க இந்த வயது முதிர்ந்த ஊழியர்களை மீண்டும் உள்ளீர்ப்பது என்பது அரசு இளைஞர்களுக்குச் செய்யும் மாபெரும் துரோகமாகும் என்று வேலையற்ற ஒருவர் கவலையுடன் தெரிவித்தார்.

இவர்கள் தங்கள் ஓய்வூதியத்துடன் புதிய சம்பளத்தையும் மேலதிகமாகப் பெற்று வருகின்றனர். ஆயினும் மக்களுக்கு எவ்வித நிறைவான சேவைகளும் இவர்களால் கிடைப்பதில்லை. அனைவரும் அலுவலகங்களில் தூங்கி வழிகின்றனர். அத்துடன் இவர்களுக்கு வழங்கப்படும் மேலதிக சம்பளத்தை இரண்டு புதிய நியமனங்களுக்கு வழங்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (க-80)




## வன்னியில் இறுதி யுத்தத்தின்போது

# கைவிடப்பட்ட மோ.சைக்கிள்களை இனங்காணும் முயற்சியில் திணைக்களம்

கிளிநொச்சி, ஓக. 25

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தின் நடமாடும் சேவை கடந்த 21ஆம், 22ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் நடைபெற்றது.

கிளிநொச்சியில் யுத்தத்தின்போது கைவிடப்பட்ட மோட்டார் வாகனங்களின் பாதுகாப்பு நிலையத்தில் ஆரம்பமான இந்த நிகழ்வுக்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமை தாங்கினார். இந்த நிகழ்வின் போது மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் 'ஒன்லைன்' சேவையும் அரச அதிபரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இறுதி யுத்தத்தின்போது கைவிடப்பட்ட ஆயிரக்கணக்கான மோட்டார் சைக்கிள்களும், நூற்றுக்கணக்கான ஏனைய மோட்டார் வாகனங்களும் பாதுகாப்பு நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை 20 தொழிலாளர்கள் பராமரித்து வருகின்றனர். மழைகாலம் நெருங்குவதால் இந்த வாகனங்களின் உரிமையாளர்களைக் கண்டுபிடித்து அவர்களிடம் இவற்றைக் கையளிப்பதற்கான நடவடிக்கைகளின் ஒரு அங்கமாக 22 மோட்டார் வாகனப் பரிசோதகர்கள் வாகனங்களை பரிசோதித்து அவற்றின் உரிமையாளர்களின் விவரங்களைக் கண்டறிந்தனர்.

முதற்கட்டமாக 1000 மோட்டார் சைக்கிள்களினதும் 31 ஏனைய வாகனங்களினதும் உரிமையாளர்களின் விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இவர்களுக்குத் தனித்தனியே கடிதங்கள் அனுப்பி வைக்கப்படுவதோடு பொது விளம்பரமும் பிரசுரிக்கப்படும். இந்தப் பணிகள் தொடர்ந்து அடுத்த மாதம் வரும் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-405)

# இரத்தப் பரிசோதனை அறிக்கை தாமதம்; ஒரு மாதமாகக் காத்திருக்கும் நோயாளர்கள்

கிளிநொச்சி, ஓக. 25

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் மேற்கொள்ள முடியாத இரத்தப் பரிசோதனைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படும் நோயாளர்களின் இரத்தத்துக்குரிய இரத்தப் பரிசோதனை அறிக்கைகள் ஒரு மாதமாகியும் கிடைக்கப் பெறாமையால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் மீளக்குடியேறத் தொடங்கியவுடன் ஆரம்பிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சாதாரண இரத்தப் பரிசோதனைகளை மாத்திரம் மேற்கொள்ள முடியும். ஏனைய பரிசோதனைகளுக்காக நோயாளரின் இரத்த மாதிரிகள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. ஆனால் இவற்றுக்குரிய அறிக்கைகள் கிடைப்பதற்கு ஒரு மாதத்துக்கும் மேலாகக் காத்திருக்க வேண்டியுள்ளது. இதனால் நோயாளர்கள் தமது நோய்க்குரிய சிகிச்சைகளைத் தொடர முடியாத அவல நிலையில் உள்ளனர்.

ஆனால் தனியார் மருத்துவமனைகளில் ஒருசில நாள்களிலேயே இந்த இரத்த அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆகவே உரியவர்கள் இந்த விடயத்தில் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதே பாதிக்கப்பட்ட நோயாளர்களின் வேண்டுகோள். (க-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் வங்கியின் 49ஆவது வருட நிறைவை முன்னிட்டு ஊர்காவற்றுறைக் கிளையில் அண்மையில் நடைபெற்ற வாடிக்கையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் உரை நிகழ்த்துவதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும், பாடசாலை மாணவி ஒருவருக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.சிறிமோகனன் பரிசில் வழங்குவதையும் முதலிரு படங்களிலும் நீண்டகால வாடிக்கையாளர் ஒருவரை கௌரவித்து ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.சிறிமோகனன், மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் க.சுசிந்திரன், ஊர்காவற்றுறைக் கிளை முகாமையாளர் ந.சுகுமார் ஆகியோர் இணைந்து ஞாபகச் சின்னம் வழங்குவதை இறுதிப் படத்திலும் காணலாம். (த)

# தமிழ்க்கலாசாரத்தை.....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் நிலங்களில் இன்னமும் படையினர் குந்தியிருக்கிறார்கள். உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பொதுமக்களது சொத்துக்களைப் படையினர் தொடர்ந்தும் தம்வசப்படுத்தியே வைத்திருக்கிறார்கள்.

20 ஆண்டுகளுக்கும் மேலாக இடம்பெயர்ந்து வசிக்கும் வலிகாமம் வடக்குப் பிரதேசத்தின் மக்களின் மீள்குடியேற்றத்திற்கான ஒருங்கிணைத்த முனைப்புக்கள் எதுவும் இடம்பெறுகின்றனவாகத் தெரியவில்லை. வலிகாமம் வடக்கில் மாத்திரம் 24 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் தற்போதும் இடம்பெயர்ந்து வசிக்கிறார்கள்.

குடாநாட்டில் மொத்தமாக உள்ள பெண்களில் விதவைகள் மற்றும் அங்கவீனமடைந்த பெண்கள் 46 சதவீதம் இருக்கின்றனர் என அண்மையில் இலங்கையினது சமூக சேவைகள் அமைச்சு தகவல் வெளியிட்டிருக்கிறது. பிற மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது இந்த எண்ணிக்கை மிகவும் அதிகம். குடாநாட்டில் மாத்திரம் 26300 யுத்த விதவைகள் இருக்கிறார்கள். பெரும்பாலும் பெண்களைக் குடும்பத் தலைமையாகக் கொண்ட இந்தக் குடும்பங்கள் தமக்கான தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் சுயதொழில் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகிறது.

இவ்வாறாக குடாநாடு வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருப்பது என்னவோ உண்மைதான். வேலையில்லாப் பிரச்சினை, வேலைக்கேற்ற ஊதியம் கிடைக்காமை, சுதந்திரமான நடமாட்டம் எனப் பல பிரச்சினைகள் இன்னமும் குடாநாட்டில் இருக்கத்தான் செய்கின்றன. குடாநாட்டைப் பொறுத்த வரையில் பலநூற்றுக் கணக்கான பல்கலைக்கழகப் பட்டதாரிகள் கூட இன்றும் வேலையில்லாமல் இருக்கின்றனர்.

சமூகச் சீர்கேடுகள் பெரிதாக வெளியே தெரிவதில்லை என்றாலும், குடாநாட்டில் இதுபோன்ற செயற்பாடுகள் தற்போது அதிகம் காணப்படுகின்றன. இளம் தலைமுறையினர் பெரிதும் மாறிவிட்டார்கள் என யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கல்விமான் ஒருவர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார். மேற்கத்தேய உடையணிந்த உள்ளூர் பெண்களை நகர வீதிகளில் தற்போது அதிகம் காணமுடிகிறது.

குடாநாட்டில் உள்ளூர் சேவையில் ஈடுபட்டிருக்கும் பேருந்துகளின் பின் இருக்கைகளில் திருமணமாகாத இளம் சோடிகளை அதிகம் காணமுடிகிறது. பேருந்தில் பிரயாணம் செய்யும் ஏனையவர்கள் முகம் சுழிக்கும்படி இவர்கள் நடந்து கொள்வது அருவருப்பானது.

குடாநாட்டில் இளம் வயதினர் தற்கொலை முயற்சியில் ஈடுபடும் சம்பவங்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதற்குப் பல்வேறுபட்ட காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. போர் தந்த இழப்புக்களால் ஏற்பட்ட மன அழுத்தமும் இதற்கானதொரு காரணம்.

எது எவ்வாறிருப்பினும் குடாநாடு பெரிதும் மாறிவிட்டது. இந்த மாற்றங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடுகின்றன எனச் சிலர் வாதிடுகிறார்கள். ஆனால், கலாசார ரீதியிலான அதன் தனித்துவத்தை யாழ்ப்பாணம் மெல்ல இழந்து வருகிறது என்பதுதான் உண்மை.

நன்றி: 'புதினப்பலகை'


## கண்ணீர் அஞ்சலி



எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய உற்றதோழன்

**வைத்தீஸ்வரன் சாரங்கன்**

24 ஆம் அணி மாணவன், மருத்துவபீடம்

நற்றமிழ் மற்றும் பல கலைகள் தேர்ந்து
பெற்றமனம் பெருமையுற மருத்துவ மாணவனாக
உற்ற நண்பர், உறவுகள் இன்று கதறியழ
பற்றறுத்து எங்கே நீ பறந்து சென்றுவிட்டாய்....!

அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:
அன்பு நண்பன்
அங்கஜன் இராமநாதன்
அமைப்பாளர், சிறிலங்கா சுதந்திரக் கட்சி. யாழ்.மாவட்டம்.



## பணியாளர்கள் தேவை

புத்தகம் கட்டுநர் (ஆண் - வெட்டுதல், கட்டுதல் முன் அனுபவம் உள்ளவர்), கணனி படித்தவர் (பெண்) உதவியாளர், ஓ(F)வ்செற் மெசின் பழக விரும்புபவர்கள் (ஆண்கள்)

தொடர்பு: 077 7159730

(இ/570142)



## தேவை

சந்திரன் டிஜிற்றல் வீடியோ ஸ்ரூடியோவுக்கு போட்டோசெப், வீடியோ எடிற்றிங் தெரிந்தவர்கள் தேவை.

தொடர்பு:
**சந்திரன் ஸ்ரூடியோ**
சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.
தொ.பே.: 077 7033902

(இ/570138)



## கண்ணீர் பூக்கள்

**வைத்தீஸ்வரன் சாரங்கன்**



அறிவுப் புதையலொன்று ஆழப் புதைந்ததுவோ
மெய்யறிவுப் பயணமொன்று மௌனித்துப் போனதுவோ
பொய்யறியாப் பிள்ளைமனம் பொசுங்கிப் பேதலித்ததுவோ
நல்லறிவுப் பொக்கிசமே நடை ஓய்ந்து நலிந்ததென்ன?
எத்துறையில் பேசுவதற்கும் என்றும் நீ சளைத்ததில்லை
புத்தழகுக் கவிதை மழை வித்தகனாய் நீ பொழிவாய்
எத்தடையும் இல்லாமல் சட்டவிதி நீ உரைப்பாய்
அத்தனையும் அறிந்தவனே எப்படி நீ உனை அழித்தாய்
பாசத்தின் திருவுருவே நீ பறந்து போனதெங்கே
நேசத்தின் மறுபதிப்பே நீண்டதுயில் கொண்டதென்னே
தூசாகயெமையெல்லாம் துடைத்தெறிந்து போனதெங்கே
நீசர் வாழ் பூமியென்றோ நீ பிரிந்து சென்றுவிட்டாய்
உலகமெனும் அரங்கினிலே உன் பாகம் முடிந்ததுவோ
உள்ளமெனும் அரங்கினிலே உன் வடிவம் பதிந்ததுவோ
நிலவுலகின் பாதையிலே நின் பயணம் முடிந்ததுவோ
அலையோசைச் சிரிப்பொலியை ஐயா நாம் கேட்பதெப்போ
விலைபேசமுடியாத வித்தகனே விடை தரவோ
மலைபோல உயர்ந்த பண்பின் மாண்புடையாய் அமைதிகொள்க
நிலையாத புவிவாழ்வில் நிலையானாய் எம் மனதில்
...ருவே கலங்காதே அமைதி கொள்க
...மடியினிலே மனம் நிறைந்து வளர்ந்தவனே மகாஜனனே வானுலகில் மாண்புயர நீ உயர்வாய்.



பிரகலாதனின் நண்பர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளின்ரன், கவாஸ்கர் அதிரடியான ஆட்டம்; காலிறுதிக்கு முன்னேறியது சென்.பற்றிக்ஸ்

யாழ்ப்பாணம்,ஒக.25

கிளின்ரன் - கவாஸ்கர் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டம் கைகொடுக்க காலிறுதிக்குத் தகுதிபெற்றது சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி.

17 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்தவாரம் கம்பஹா டறனகம மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் டறனகம மகாவித்தியாலய அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது.

முதலில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 39.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 241 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கிளின்ரன் 5 சிக்ஸர், 6 பவுண்டரி அடங்கலாக 74 ஓட்டங்களையும் கவாஸ்கர் 6சிக்ஸர், 5பவுண்டறி அடங்கலாக 66 ஓட்டங்களையும் ரியூடர் 35 ஓட்டங்களையும் லிவிங்ஸ்ரன் 12 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கம்பஹா டறனகம மகா வித்தியாலய அணி வீரர்களான பெரேரா 7 ஓவர்கள் பந்துவீசி 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சமறா 7.5 ஓவர்கள் பந்துவீசி 42 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

242 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கம்பஹா டறனகம மகாவித்தியாலய அணி 31.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 137 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் சமறா 21 ஓட்டங்களையும் ஆராய்ச்சி 24 ஓட்டங்களையும் பெரேரா 29 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர்களான நோபேட் நான்கு ஓவர்கள் பந்துவீசி 24 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் கிளின்ரன் 6 ஓவர்கள் பந்துவீசி 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 104 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (த-23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,ஒக.25

யாழ்.மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் இவ்வாண்டுக்கான தாச்சிச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

பிற்பகல் 3.30 மணி

கைதடி குமரகுரு விளையாட்டுக் கழகம் எதிர் சுதுமலை புவனேஸ்வரியம்பாள் விளையாட்டுக் கழகம் (த-23)

## குத்துச்சண்டை போட்டி சுகததாச அரங்கில்

வலி.வடக்கு,ஒக.25

இலங்கை விளையாட்டுத் திணைக்களத்தினால் மாகாண பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண்களுக்கான குத்துச்சண்டைப் போட்டிகள் அடுத்த மாதம் 11ஆம், 12ஆம்,13ஆம் திகதிகளில் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளில் 20 வீரர்கள் கலந்து கொள்ளவுள்ளனரென எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்போட்டிகளில் வடமாகாண பாடசாலைகளுக்கு இடையே போட்டிகள் நடைபெறாமையால் வடமாகாண வீரர்கள் இதில் கலந்துகொள்ளமாட்டார்கள். (த-86)

## அச்சுவேலி அம்மன், யாழ்.பல்கலை. அணிகள் கரப்பந்தாட்டத்தில் வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக.25

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் கனகரத்தினம் பாலகிருஷ்ணர் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான மின்ஒளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் அச்சுவேலி அம்மன் விளையாட்டுக் கழக அணி, யாழ். பல்கலைக்கழக விளையாட்டுக் கழக அணி ஆகியன வெற்றிபெற்றன.

. முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் அச்சுவேலி அம்மன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதியது.

மூன்று செற்களைக் கொண்ட போட்டியில் அச்சுவேலி அம்மன் விளையாட்டுக் கழக அணி 25:19, 25:21 என்ற புள்ளி அடிப்படையில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக அணியை வெற்றி கொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றைய ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதியது.

மூன்று செற்கள் கொண்ட போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணி 25:15, 25:17 என்ற புள்ளி அடிப்படையில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை வெற்றி கொண்டது. (த-23)

## கீர்த்திகா சாதனை



யாழ்ப்பாணம்,ஒக.25

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட தடகளப் போட்டிகளில் பெண்களுக்கான முப்பாய்ச்சல், 100 மீற்றர் தடை தாண்டல் போட்டிகளில் யாழ்.மாவட்டதைச் சேர்ந்த எஸ்.கீர்த்திகா மாகாண மட்டத்தில் புதிய சாதனை படைத்துள்ளார்.

**சாதனைகளின் பதிவுகள்**

வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான 100 மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தைக் கீர்த்திகா 18.5 செக்கன்களில் ஓடிமுடித்தும், முப் பாய்ச் சல் போட்டியில் 10.72 மீற்றர் பாய்ந்தும் சாதனை படைத்துள்ளார்.

இவர் மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற முப்பாய்ச்சல் போட்டியில் 10.24 மீற்றர் பாய்ந்து மாவட்ட ரீதியிலான சாதனையையும் தனதாக்கிக்கொண்டார். (த-23)

## புதிய சவாரித் திடல் மட்டுவிலில் திறந்துவைப்பு

தென்மராட்சி, ஒக.25

மட்டுவில் வடக்கு சித்திரன் கிராவிலில் அமைக்கப்பட்ட மாட்டுவண்டிச் சவாரித்திடல் கடந்த 15ஆம் திகதி ஞாயிறு நண்பகல் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. சவாரித் திடலை மட்டுவில் பிரதேச இராணுவ அதிகாரி கப்டன் ஜ.பி.குமாரவும், சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி.ஐ. சனத் குமாரவும் சம்பிரதாயபூர்வமாக நாடாவெட்டித் திறந்து வைத்தனர்.

சவாரித் திடலை திறந்துவைத்த அதிகாரிகள் மலர்மாலை அணிவித்து ஊர்வலமாக சவாரித்திடல் அமைக்கப்பட்ட மண்டத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு மங்கல விளக்கு ஏற்றப்பட்டது. மங்கள விளக்கினை மட்டுவில் பிரதேச இராணுவ அதிகாரி கப்டன் ஜ.பி.குமார, சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.ஜ.சனத்குமார உட்பட மட்டுவில் அம்பாள் சனசமூக நிலைய தலைவர் க.கந்தையா, காணி அன்பளிப் புச் செய்த வா.இராசலிங்கம் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து தேசியக் கொடியை மட்டுவில் பிரதேச இராணுவ அதிகாரி கப்டன் ஜ.பி.குமார ஏற்றிவைத்து நிகழ்வினைக் கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

நிகழ்வில் வேகநடை, ஆறுதல் சைக்கிள் ஓட்டம், ஆறுதல் மோட்டார் சைக்கிள் ஓட்டம், கைக்கொடி சவாரிப் போட்டிகள் உட்பட இறுதியாக மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நான்கு அணிகளாக தரம் பிரிக்கப்பட்டு போட்டிகள் இடம்பெற்றது.

சவாரிப்போட்டி 'ஏ' அணியில் முதலாம் இடத்தை நவக்கிரியைச் சேர்ந்த வர்மிலன் என்பவரது சவாரி மாடுகளும், 'பி' அணியில் முதலாம் இடத்தை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மகாலிங்கம் என்பவரது மாடுகளும், 'சி'அணியில் முதலாம் இடத்தை மீசாலையைச் சேர்ந்த சின்னத்தம்பி என்பவரது மாடுகளும், 'டி' அணியில் முதலாம் இடத்தை அராலியைச் சேர்ந்த நிதுஷன் என்பவரது மாடுகளும் பரிசில்களைச் தட்டிச் கொண்டன.

இந்தச் சவாரிப் போட்டியில் 48 சோடி காளை மாடுக்ள் பங்குபற்றின. குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வன்னியிலிருந்தும் கொண்டுவரப்பட்ட காளைகள் போட்டியில் பங்குபற்றின.

இந்த நிகழ்வையொட்டி சவாரித்திடல் மைதானம் பொதுமக்களால் நிரம்பின. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தென்மராட்சியில் இவ்வாறான மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-131)




## வென்றது கைதடி குமாரநகர் வி.க.

யாழ்ப்பாணம்,ஒக.25

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் இவ்வாண்டுக்கான தாச்சிச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் கைதடி குமார நகர் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

கைதடி குமாரநகர் விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய இணுவில் அண்ணா விளையாட்டுக்கழக அணியை 8.5 என்ற புள்ளி அடிப்படை வெற்றிகொண்டது. (த-23)

## ஆவரங்காலில் இன்று இரவு மின்னொளியில் கரபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஒக.25

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் கனகரெத்தினம் பாலகிருஷ்ணர் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான மின் ஒளியிலான கரபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்குகொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

- மாலை 5 மணி - அச்சுவேலி விக்னேஸ்வர வி.க. எதிர் கைதடி குமரன் வி.க.
- மாலை 6 மணி - புத்தூர் கலைமதி வி.க. எதிர் மட்டுவில் மோகனதாஸ் வி.க.
- இரவு 7 மணி - காங்கேசன்துறை ஐக்கிய வி.க. எதிர் அச்சுவேலி தோப்பு கலைவாணி வி.க.
- இரவு 7.30 மணி - நாயன்மார்கட்டு பாரதி வி.க. எதிர் கைதடி மின்னொளி வி.க.

(ஐ-23)

## சமநிலையில் முடிந்த உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஒக.25

மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் யாழ்.மாவட்டத்தின் அழைக்கப்பட்ட உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லீக் போட்டியில் மனோகரா - நவசக்தி அணிகளுக்கிடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் நடைபெற்ற முதலாவது போட்டியில் அல்வாய் மனோகரா அணியை எதிர்த்து கரவெட்டி நவசக்தி அணி மோதியது. இந்தப் போட்டியில் இரு அணிகளும் தலா 2 கோல்களைப் போட்டதால் 2:2 என ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

இதேவேளை -

இரண்டாவதாக நடைபெற்ற போட்டியில் உரும்பிராய் சென். மைக்கல் அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதியது. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் 1:0 என்ற கோல் கணக்கில் பாடும்மீன் அணி வெற்றிபெற்றது. (த)



சாவகச்சேரி, கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பா[illegible] இல்ல மெய்வன்மைப் போட்டியின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் விருந்தினர்கள் 'பான்ட்' [illegible] வதை முதற் படத்திலும் அணிவகுப்பு நிகழ்வை இரண்டாவது படத்திலும் இடைவேளை நிகழ்வை சிறுவர்கள் நிகழ்த்துவதை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்:தென்னவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.க.-காங். கூட்டணி தொடரும்; விமர்சிப்போர்மீது கடும் நடவடிக்கை

## கட்சியினருக்கு குலாம் நபி ஆசாத் எச்சரிக்கை



புதுடில்லி,ஓக.25

தமிழகத்திலும், தேசிய அளவிலும் தி.மு.கவுடன் கூட்டணிவைத்துள்ளோம். இது தொடரும். இதை விமர்சித்து காங்கிரஸார் யாரும் பேசக் கூடாது. அப்படிப் பேசினால் பொறுத்துக்கொள்ள முடியாது - என்று மத்திய அமைச்சரும், தமிழக காங்கிரஸ் கட்சி பொறுப்பாளருமான குலாம் நபி ஆசாத் எச்சரித்துள்ளார்.

தி.மு.கவையும், அதன் ஆட்சியையும், அதன் செயல்பாடுகளையும், முன்னாள் மத்திய இணை அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனும், கார்த்தி சிதம்பரமும் தொடர்ந்து விமர்சித்துப் பேசி வருகிறார்கள். இதில் இளங்கோவன் பட்டவர்த்தனமாகப் பேசிப் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறார்.

இதனால் அதிருப்தி அடைந்த முதல்வர் கருணாநிதி, இளங்கோவனின் பேச்சு கூட்டணிக்கு வலிமை சேர்ப்பதை விட வலியையே கொடுக்கும் எனக் கூறியுள்ளார்.

இந்நிலையில், இந்தப் பேச்சுகள் குறித்து காங்கிரஸ் மேலிடம் எதுவும் தெரிவிக்காமல் இருந்து வந்தது. தற்போது குலாம் நபி ஆசாத் வாய் திறந்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியவை வருமாறு-

தி.மு.கவுடன் தேசிய அளவிலும், மாநில அளவிலும் காங்கிரஸ் கூட்டணி வைத்துள்ளது. இது தொடரும். கூட்டணிக்கு எதிராக பேசுவதற்கு எந்த தனி நபருக்கும், கட்சி நிர்வாகிகளுக்கும், அதிகாரத்தில் இருப்பவர்களுக்கும் மேலிடம் அனுமதியோ, அங்கீகாரமோ அளிக்கவில்லை.

யாருக்காவது ஏதாவது பிரச்சினை என்றால் அதை உரிய இடத்தில், உரிய நேரத்தில் எழுப்ப வேண்டும். மாறாக பொது இடங்களிலோ அல்லது பத்திரிகை, ரி.வி. மூலமாகவோ எழுப்பினால் அதைப் பொறுத்துக்கொள்ள முடியாது. எனவே இதுபோன்று கூட்டணிக்கு எதிரான பேச்சுகள், அறிக்கைகளைக் கட்சியினர் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கூட்டணிக்கு எதிரான கருத்துக்கள் கட்சி விரோத நடவடிக்கையாக பார்க்கப்படும். கட்சி மேலிடத்தைத் தவிர வேறு யாரும் கூட்டணி குறித்துப் பேசக் கூடாது - பேச முடியாது.

- இப்படி அவர் தெரிவித்தார்.

யாருடைய பெயரையும் ஆசாத் குறிப்பிடவில்லை என்றாலும் கூட அவரது எச்சரிக்கை, ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனுக்குத் தான் என்று தெரிகிறது.

சமீபத்தில் சோனியா காந்தியைச் சந்தித்த தி.மு.க. எம்.பி. டி.ஆர்.பாலு, இளங்கோவனின் பேச்சுகள் குறித்து முதல்வர் கருணாநிதியின் அதிருப்தியைத் தெரிவித்தார்.

இதையடுத்து ஆசாத் மூலமாக எச்சரிக்கையை விடுத்துள்ளார் சோனியா.

# தி.மு.க. ஆட்சியை மாற்ற வேண்டியது எமது கடமை; கம்யூனிஸ்ட் தெரிவிப்பு



காட்பாடி, ஓக. 25

நாடாளுமன்றத் தேர்தலின்போது அ.தி.மு.கவுடன் ஏற்பட்ட கூட்டணி நீடிக்கிறது. புதிய கட்சிகள் கூட்டணியில் சேர்ந்து வருகின்றன. தி.மு.க. ஆட்சியை மாற்ற வேண்டியது எங்கள் கடமை - என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் கூறினார்.

அதுகுறித்து அவர் அளித்த பேட்டியின் விவரம் வருமாறு -

பெற்றோல், டீசல் விலைகளை எண்ணெய் நிறுவனங்களே தீர்மானிக்கலாம் என மத்திய அரசு கூறிவிட்டதால், இவற்றின் விலை இன்னும் சில நாள்களில் மீண்டும் உயரவுள்ளது.

1.5 கோடி பேர் குடியிருப்பு மனை இல்லாமல் குடிசையில் வாழ்வதாக தமிழக அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இவர்களுக்குக் கணக்கெடுப்பு நடத்தி வீடு வழங்க 7 ஆண்டுகள் ஆகும் என்று முதல்வர் கூறியுள்ளார்.

தமிழகத்தில் கனிம வளங்கள் கொள்ளை போகின்றன. தமிழ்நாடு அரசு கனிம வள நிறுவனம் இப்போது செயலற்று கிடக்கிறது.

2006 ஆம் ஆண்டு தமிழை உயர் நீதி மன்ற வழக்கு மொழியாக தமிழக சட்டப் பேரவையில் அறிவித்து விட்டு, இதுவரை நடைமுறைக்குக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளவில்லை.

மக்களவைத் தேர்தலின்போது அ.தி.மு.கவுடன் ஏற்பட்ட கூட்டணி இப்போதும் நீடிக்கிறது. புதிய கட்சிகள் கூட்டணியில் சேர்ந்து வருகின்றன. தி.மு.க. ஆட்சியை மாற்ற வேண்டியது எங்கள் கடமை.

- இப்படி அவர் கூறினார்.

# விஜயகாந்திடம் கறுப்புப்பணம்; கலைஞர் சரமாரிக் குற்றச்சாட்டு

சென்னை,ஓக.25

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், தான் நடிக்கும் படங்களுக்காகப் பெறும் சம்பளப் பணத்தில் பெரும் பகுதி, வருமான வரி கட்டாமல் கறுப்புப் பணமாக வாங்கப்படுகிறது - என்று முதல்வர் கருணாநிதி குற்றம்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து கேள்வி - பதில் வடிவில் அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய இரண்டு கட்சிகளுமே ஊழல் கட்சிகள் என்றும், அவர்களோடு கூட்டணி கிடையாதுஎனவும் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் கூறியிருக்கிறார்.



தி.மு.க. தலைவராக இருக்கின்ற நான் திரைப்படங்களுக்கு கதை வசனம் எழுதுவதன் மூலம் வருகின்ற ஊதியம் முழுவதையும் வருமான வரி கட்டியது போக மிச்சத்தை பொது நலன்களுக்கான நிதியாக வழங்கி விடுகிறேன். சில நேரங்களில் அரசின் முதல்வரின் பொது நிவாரண நிதியிலும் அந்தத் தொகையைச் சேர்த்து வழங்கச் செய்திருக்கிறேன்.

இதற்கெல்லாம் மேலாக, சென்னை கோபாலபுரத்தில் இப்போது வாழ்ந்து வரும் என்னுடைய வீட்டை ஏழைகளுக்குப் பயன்படும் மருத்துவமனையாக மாற்றிட முடிவு செய்து அதற்கான பத்திரப் பதிவுகளும் செய்யப்பட்டு விட்டன.

இப்படிப்பட்ட என்னையும் ஊழல் கட்சி என்கிறார். மற்றொரு கட்சியையும் ஊழல் கட்சி என்கிறார். இந்த இரண்டு கட்சிகளோடும் கூட்டணி சேர மாட்டேன் என்று கூறுகின்ற விஜயகாந்த், ஒரு படத்திலே கதாநாயகனாக நடிக்க லட்சக்கணக்கில் பணம் வாங்குகிறார்.

அந்தப் பணத்தில் பெரும் பகுதி வருமான வரி கட்டாமல் கறுப்புப் பணமாக வாங்கப்படுகிறது எனக் கூறப்படுகிறது. அவர் ஊழலைப் பற்றி இப்படிப் பேசியிருப்பது உலகத்தினர் வாய் விட்டு சிரிப்பதற்குரிய கேலியாக இருக்கிறது.

ஸ்ரீபெரும்புதூர் 'கிரீன் பீல்டு' விமான நிலையம் குறித்து தெளிவான விளக்கத்தை ஏற்கனவே எழுதியிருந்தேன். தமிழகத்துக்கு வரக்கூடிய நல்ல திட்டங்களையெல்லாம் அரசியல் உள்நோக்கத்தோடு ஒருசில கட்சிகள் எதிர்ப்பதால் நாட்டுக்கும், மக்களுக்கும் தானே இழப்பு.

# முள்ளிவாய்க்கால் துயரத்தைச் சித்திரிக்கும் 'போர் முகங்கள்' மீண்டும் சென்னையில்!



சென்னை,ஓக. 25

ஈழத் தமிழினத்தின் முள்ளிவாய்க்கால் துயரங்களைச் சித்திரிக்கும், ஓவியங்களை 'போர் முகங்கள்' என்ற தலைப்பில் ஓவியர் புகழேந்தி தமிழகமெங்கும் காட்சிப் படுத்தி வருகின்றார்.

முதலில் சென்னையில் தொடங்கப்பட்ட இக்கண்காட்சி, தஞ்சை, நெல்லை நகரங்களைத் தொடர்ந்து தற்போது மீண்டும் சென்னையில் நடந்து வருகின்றது.

நேற்றுமுன்தினம் 23 ஆம் திகதி மாலை சென்னை பிரஞ்சு கலாசார நிறுவனமான அலயன்ஸ் பிரான்சிஸ் நிறுவனத்தில் கண்காட்சியின் தொடக்க நிகழ்ச்சி நடந்தது. பிரஞ்சு கலாசார நிறுவனமான அலையன்ஸ் பிரான்சிஸ் நிறுவனத்தின் சென்னைக் கிளை இக்கண்காட்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தது.

இயக்குநரும் நடிகருமான நாசர் கண்காட்சியைத் திறந்து வைத்தார். அலயன்சிஸ் பிரான்சிஸ் அமைப்பின் இயக்குநர் மேரி பால் சேரே, பண்பாட்டு ஒருங்கிணைப்பாளர்கள் தாரா ரயின், கீதா வேணுகோபால், கமிலா நாசர் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு ஓவியர் புகழேந்திக்குப் பாராட்டுகளைத் தெரிவித்தனர்.

இக்கண்காட்சி வரும் 31 ஆம் திகதிவரை நடக்கிறது.

# அன்னை தெரேசா நூற்றாண்டு விழா

பரூய்ப்பூர், ஓக. 25

அன்னை தெரேசாவின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் மேற்கு வங்கம், பரூய்ப்பூரில் உள்ள கிறிஸ்தவ திருச்சபையில் நேற்று முன்தினம் கோலாகலமாக தொடங்கின.

இந்தியா முழுவதும் அன்னை தெரேசாவின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட கிறிஸ்தவ திருச்சபைகள் திட்டமிட்டுள்ளன. இந்த நிலையில் அன்னை தெரேசாவின் நூற்றாண்டு விழா பரூய்ப்பூரில் உள்ள கிறிஸ்தவ திருச்சபையில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதையொட்டி பரூய்ப்பூர் திருச்சபை தலைவர் பிஷப் சால்வடார் லோபோ தலைமையில் பிரமாண்ட தொடக்க விழா நடந்தது. இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# இந்தியச் செய்திகள்

# கேரளாவில் ஓணம் பண்டிகையை ஒட்டி 6 நாள்களில் ரூ.155 கோடி மது விற்பனை

## ஒரே நாளில் மட்டும் ரூபா 30 கோடி

திருவனந்தபுரம், ஓக. 25

ஓணம் பண்டிகையை ஒட்டி கேரள மதுபான விற்பனை கழகம் மூலம் 6 நாள்களில், 155 கோடி 61 லட்சம் ரூபாவுக்கு மதுபானங்கள் விற்பனையாகின. இது கடந்தாண்டை விட 17.61 சதவீதம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.


கேரளத்தில் ஓணம் பண்டிகையை ஒட்டி மதுபான விற்பனை மோகமாக நடந்து வருகிறது. இதில் 6 நாள்களில் மட்டும் (17 முதல் 22 ஆம் திகதிவரை) கேரள மதுபான விற்பனைக் கடைகளில் 155 கோடி 61 லட்சம் ரூபாவுக்கு மதுபானங்கள் விற்பனையாகி சாதனை படைத்துள்ளது.

ஓணம் பண்டிகைக்கு முதல் நாளான உத்திராட நாளில் (22 ஆம் திகதி) மட்டும் மது விற்பனை 30 கோடி ரூபாவைத் தாண்டியது. இதுவும் சாதனை அளவாகக் கருதப்படுகிறது.

இதிலும் மிக அதிகளவு மதுபானங்கள் திருச்சூர் மாவட்டம் சாலக்குடி பகுதியில் தான் விற்பனையானது. இங்கு மட்டும் 29 லட்சத்து 44 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை நடந்துள்ளது. இப்பகுதிதான் கடந்தாண்டும் மிக அதிகளவு மதுபானங்களை விற்பனை செய்து முதலிடத்தைப் பெற்றிருந்தது. அதே பகுதி இவ்வாண்டும் அதிகளவு மதுபானங்களை விற்பனை செய்து முதலிடத்தைத் தக்க வைத்துக்கொண்டுள்ளது.

# சென்னையில் ஒக்.10ஆம் திகதி தமிழர் இறையாண்மை மாநாடு

## திருமா எம்.பி. அறிவிப்பு



சென்னை,ஓக.25

வரும் ஒக்டோபர் 10 ஆம் திகதி தமிழர் இறையாண்மை மாநாட்டை சென்னையில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்று விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

கடந்த சில ஆண்டுகளாக ஓகஸ்ட் 17 தமிழர் எழுச்சி நாளில் தமிழ் இனம், தமிழ் மொழி குறித்து விழிப்புணர்வூட்டும் வகையிலான மாநாடுகள் விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் நடத்தப்பட்டு வந்தன.

கடந்த ஆண்டு 'எழும் தமிழ் ஈழம்' என்னும் மாநாடு மிகச் சிறப்பாக சென்னையில் நடைபெற்றது. அதைப்போல இந்த ஆண்டு ஓகஸ்ட் 17 அன்று தமிழர் இறையாண்மை மாநாடு நடத்துவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், தந்தை தொல்காப்பியன் காலமானதையொட்டி அம்மாநாடு திட்டமிட்டபடி நடத்தவியலாமல் போனது.

இந்நிலையில் ஒக்டோபர் 10ஆம் திகதி மண்ணுரிமை நாளன்று தமிழர் இறையாண்மை மாநாட்டை சென்னையில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. - இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் மசூதி உட்பட 3 இடங்களில் தற்கொலைத் தாக்குதல்; 38 பேர் மரணம்!

பெஷாவர், ஓக. 25

பாகிஸ்தானில் மசூதி உட்பட மூன்று இடங்களில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்களில் 38 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 30 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தானின் தெற்கு வசிரிஸ்தானில் மசூதி மற்றும் மலைவாழ் பகுதியில் 2 இடங்களில் திங்கட்கிழமை காலை தீவிர வாதிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

தெற்கு வசிரிஸ்தானில் ஒரு கிராமத்திலுள்ள மசூதியில் காலை தொழுகை நடந்தது. அப்போது உடலில் வெடிகுண்டுகளைக் கட்டிக்கொண்டு வந்த தற்கொலை தீவிரவாதி ஒருவர் திடீரென்று குண்டுகளை வெடிக்கச்செய்தார்.

இதில் முன்னாள் சட்ட வல்லுநர் மதகுரு மவுலானா நூர் முகமது உட்பட 26 பேர் உடல் சிதறி இரத்த வெள்ளத்தில் பலியாயினர். மேலும் 30 பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

இந்தத் தற்கொலைத் தீவிரவாத தாக்குதலுக்கு எந்த அமைப்பும் இதுவரை பொறுப்பு ஏற்கவில்லை. இன்னொரு சம்பவம் குர்ராம் மலைவாழ் பகுதியான ஜிர்ஜா என்ற இடத்தில் ஒரு பள்ளியை நிர்வகிப்பது தொடர்பாக நடந்த பேச்சுகளின்போது தீவிரவாதிகள் தன்னியக்கக் கருவி மூலம் குண்டை வெடிக்கச் செய்தனர். இதில் பள்ளி ஆசிரியர் உட்பட 8 பேர் பலியாயினர். மேலும் 10 பேர் காயமடைந்தனர்.

பாகிஸ்தானில் மத்தானி என்ற இடத்தில் திங்கட்கிழமை 3ஆவதாக நடந்த குண்டு வெடிப்பில் தலிபான் தீவி ரவாதிகளுக்கு எதிரான அமைதிக்குழு வைச் சேர்ந்த 3 பேரும், ஒரு குழந்தையும் கொல்லப்பட்டனர். மேலும் 6 பேர் காய மடைந்தனர்.

## வெள்ள நிவாரண முகாமில் இந்துக்கள் ஆர்ப்பாட்டம்

பாகிஸ்தானிலுள்ள வெள்ள நிவாரண முகாம்களில் மாட்டிறைச்சி பரிமாறப்பட்டதால், நூற்றுக்கணக்கான இந்துக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆர்ப்பாட்டத்தை அடுத்து சிந்து மாகாணத்தின் சிறுபான்மை அமைச்சகத்தின் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று அவர்களை சமாதானப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர். முகாம்களிலுள்ள அதிகாரிகள் இதைப் பற்றி அறியாததால் ஏற்பட்ட சம்பவம் இது என்று செய்தித் தொடர்பாளர் கூறினார்.

தற்போது பிரச்சினை சரிசெய்யப்பட்டு விட்டது என்றும் இந்துக்களுக்கு தாங்களாகவே சமைத்துச் சாப்பிடுவதற்கு தேவையான பங்கீட்டு பொருள்கள் தரப்படுகின்றன என்றும் செய்தித்தொடர்பாளர் கூறினார்.

# பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் பஸ்ஸை கைப்பற்றியவர் சுட்டுக்கொலை!

மணிலா, ஓக. 25

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் 25 சுற்றுலாப் பயணிகளுடன் சென்ற பஸ்ஸை கைப்பற்றிய நபரை அதிரடிப் படையினர் சுட்டுக்கொன்றனர். அப்போது நடந்த துப்பாக்கிச் சண்டையில் 7 பேர் பலியாயினர். 8 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர்.

பிலிப்பைன்ஸின் தலைநகர் மணிலாவில், திங்கட்கிழமை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் சென்ற பஸ் ஒன்றை முன்னாள் பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டரான ரோலன்டோ மென்டோசா என்ற நபர் துப்பாக்கி முனையில் கைப்பற்றினார். பொலிஸ் சீருடை அணிந்திருந்த அந்த நபர் பஸ்ஸை நிறுத்தி வலுக்கட்டாயமாக ஏறி அதை சிறை பிடித்தார்.

பஸ்ஸுக்குள் சென்றதும் சாரதியிடம் சொல்லி கதவை மூடச் செய்தார். அந்த பஸ்ஸில் பெண்கள், குழந்தைகள் உட்பட 25 பேர் இருந்தனர். அவர்களில் பெரும்பாலா னோர் ஹொங்கொங்கைச் சேர்ந்தவர்கள்.

சுற்றுலா பஸ்ஸை கைப்பற்றிய 55 வயதான ரோலன்டோ மென்டோசா, போதைப் பொருள், கடத்தல், மிரட்டி பணம் பறித்தல் போன்ற குற்றங்களுக்காக கடந்த ஆண்டு பணியிலிருந்து நீக்கப்பட்டவர்.

இதற்குள் சுற்றுலாப் பயணிகளுடன் பஸ் கைப்பற்றப்பட்ட தகவல் கிடைத்ததும் அந்த இடத்துக்குப் பொலிஸார் விரைந்து வந்தனர். அம்புலன்ஸ் வாகனங்களும், தீயணைப்பு வண்டிகளும் வரவழைக்கப்பட் டன.

குறி பார்த்து சுடுவதில் தேர்ச்சிபெற்ற பொலிஸார் சிறை பிடிக்கப்பட்ட பஸ்ஸை சுற்றிலும் நிறுத்தப்பட்டனர். அந்தச் சாலை 'சீல்' வைக்கப்பட்டு போக்குவரத்து தடை செய்யப்பட்டது.

பஸ்ஸை சிறை பிடித்த மென்டோசா கையில் எம்-16 ரக எந்திரத் துப்பாக்கி வைத்திருந்தார். தன்னை மீண்டும் பொலிஸ் வேலையில் சேர்க்கவேண்டும் என்றும் அப்படி சேர்ப்பதாக உறுதி அளித்தால் சுற்றுலாப் பயணிகள் அனைவரையும் தாம் விட்டு விடுவார் என்றும், இல்லையேல் அனைவரையும் சுட்டுக் கொன்று விடப் போகிறார் என்றும் அவர் மிரட்டினார். இதனால் பொலிஸார் செய்வதறியாது திகைத்தனர்.

பஸ்ஸுக்கு தொலைபேசி இணைப்பு கொடுத்து அதன் மூலம் கடத்தல்காரர் மென்டோசாவுடன் உயர் பொலிஸ் அதிகாரிகள் சமாதான பேச்சுகள் நடத்தினார்கள்.

நீண்ட நேர பேச்சுக்குப் பின்னர் 3 மணி நேரம் கழித்து 2 பெண்கள், 3 குழந்தைகள், நீரிழிவு நோயாளி ஒருவர், பிலிப்பைன் ஸைச் சேர்ந்த சுற்றுலா வழிகாட்டி, புகைப் படக்காரர் உள்ளிட்ட 3 பேர் ஆகிய 9 பேரை கடத்தல்காரர் விடுவித்தார். பயத்தில் உறைந்து போயிருந்த அவர்கள் பஸ்ஸிலிருந்து அவசர அவசரமாக வெளியே வந் தார்கள்.

பஸ்ஸுக்குள் இருந்த மற்றவர்களையும் விடுவிக்க பொலிஸார் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டனர்.

இதைத்தொடர்ந்து, பொலிஸார் சார்பில் 2 பேர் பஸ்ஸின் அருகே சென்று கடத்தல் காரருடன் பேச்சு நடத்தினார்கள். பஸ்ஸின் முன்பக்க வாசலில் நின்றபடி அவர்களுடன் கடத்தல்காரர் பேசினார். அவருடன் நீண்ட நேரம் பேசியும் பலன் இல்லை.

இதனால் அதிரடித் தாக்குதல் நடத்தி பஸ்ஸுக்குள் இருக்கும் சுற்றுலாப் பயணிகளை மீட்பது என்று பொலிஸார் முடிவு செய்தனர். அதன்படி அதிரடிப்படை வீரர்கள் திடீரென்று பஸ்ஸுக்குள் ஏறி கடத்தல் காரரை நோக்கித் துப்பாக்கியால் சுட்டனர். பதிலுக்கு அவரும் சரமாரியாக சுட்டார்.

துப்பாக்கி குண்டிலிருந்து தப்பிப்பதற்காக உள்ளே இருந்த சுற்றுலாப் பயணிகள் இருக்கைகளுக்கு அடியில் குனிந்து ஒளிந்து கொள்ள முயன்றார்கள். துப்பாக்கிச் சண்டை தொடங்கியதும், பஸ் சாரதி கீழே குதித்து ஓடி உயிர் தப்பிவிட்டார்.

துப்பாக்கிச் சண்டை நடந்து கொண்டிருக்கும்போதே பொலிஸார் பஸ்ஸின் பின் பகுதியில் உள்ள அவசரகால வழியைத் திறந்து அதன் வழியாக சில பயணிகளை வெளியே எடுத்தார்கள்.

என்றாலும் துப்பாக்கிச் சண்டையின் போது குண்டு பாய்ந்து பஸ்ஸுக்குள் இருந்த 7 பேர் பலியாயினர். கடத்தல்காரர் சுட்டதில் இவர்கள் பலியாயினர் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். துப்பாக்கிச் சண்டையின் காரணமாக பஸ்ஸுக்குள் இரத்த வெள்ளமாகக் காட்சி அளித்தது.



மொராக்கோ தலைநகர் ரபேட்டில், ஸ்பெயின் உள்துறை அமைச்சர் அல்பெர்டோ பெர்ச்ருபால்கபா, மொராக்கோ உள்துறை அமைச்சர் தையிப் செர்குவை சந்தித்துப் பேசுகிறார்.

உலக அரங்கில்

# பிரசண்டா, சந்திர பெதயால் 5ஆவது முறையாகத் தோல்வி

நேபாளத்தில் புதிய பிரதமரைத் தேர்வு செய்வதில் தொடர்ந்து சிக்கல் நீடிக்கிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் 5ஆவது முறையாக திங்கட்கிழமை நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் மாவோயிஸ்ட் தலைவர் பிரசண்டாவும், நேபாள காங்கிரஸ் தலை வர் ராம் சந்திர பெதயாலும் அறுதிப் பெரும் பான்மை பெறத் தவறி விட்டனர். இதனால் அங்கு அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பிரதமர் பதவிக்கு அறுதிப் பெரும்பான்மை பெற 301 வாக்குகள் தேவை. திங்கட்கிழமை நடந்த வாக்கெடுப்பில் பிரசண்டாவுக்கு ஆதரவாக 246 வாக்குகளும், எதி ராக 111 வாக்குகளும் பதிவாகின. பெதயாலுக்கு ஆதரவாக 124 வாக்குகளும், எதிராக 243 வாக்குகளும் பதிவாகின. யாருக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காததால் செப்டம்பர் 5ஆம் திகதி 6ஆவது சுற்றுத் தேர்தல் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்தேர்தலில் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (ஒருமித்த மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் - சிபஎன் -யூஎம்எல்), மாதேசி கூட்டணி மற்றும் இதர சிறிய கட்சிகள் வாக்கெடுப்பில் பங்கேற்காமல் நடுநிலை வகிக்கின்றன.

# பாக். வெள்ளத்தில் பஸ் மூழ்கியதில் 22 பேர் பலி; பலரைக் காணவில்லை!

பாகிஸ்தானில் லாகூரிலிருந்து பெஷாவர் நகருக்குப் புறப்பட்ட பஸ் ஒன்று, ராஜன்பூர் மாவட்டத்தில் வெள்ளத்தில் சிக்கிக் கொண்டது. வெள்ளத்தின் சீற்றத்தை தாங்க முடியாமல் பஸ் தண்ணீரில் கவிழ்ந்தது.

பஸ்ஸில் பயணம் செய்த 22 பேர் பலியாயினர். பலரைக் காணவில்லை. அவர்களில் 15 பேர் மீட்கப்பட்டனர்.

இந்த விபத்து தொடர்பாக மீட்புக் குழுவினர் ஒருவர் குறிப்பிடுகையில், ''அருகிலுள்ள மலையிலிருந்து தண்ணீர் படுவேகத்துடன் பாய்வதால், வெள்ளத்தில் செல்வது ஆபத்து என்று கருதி அந்த சாலை மூடப் பட்டது.

எனினும், அந்த பஸ் சாரதி எச்சரிக்கையை மீறி, அந்தச் சாலை வழியாக பஸ்ஸை செலுத்தினார். பாதி வழியில் பஸ் வெள்ளத்தில் சிக்கிக்கொண்டது'' என்றார்.

# பாகிஸ்தான் உளவு அமைப்பு தலிபான்களுக்கு எச்சரிக்கை

வாஷிங்டன், ஓக. 25

எமது அனுமதியின்றி ஹமீது கர்சாய் தலைமையிலான ஆப்கானிஸ்தான் அரசுடனோ அல்லது அமெரிக்காவுடனோ பேச்சுவார்த்தையை தொடங்கக்கூடாது என தலிபான்களுக்கு பாகிஸ்தானின் உளவு அமைப் பான ஐஎஸ்ஐ எச்சரித்துள் ளது.

ஐ.எஸ்.ஐ. அமைப்பின் உயர்தலைவர்கள் இதைத் தெரிவித்துள்ளனர் என அமெரிக் காவிலிருந்து வெளிவரும் நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தானைச் சேர்த்துக்கொள்ளாமல் இந்தப் பேச்சுகளை நடத்த ஆப்கானிஸ்தான் முயற்சிக்கிறது. அதை ஈடேற விடுவதில்லை என்ற முடிவுடன் ஐஎஸ்ஐ இருக்கிறது.

ஆப்கானிஸ்தான் அரசுடனும் அமெரிக்காவுடனும் தலிபான்கள் பேச்சுகள் நடத்தினால் எங்கே பாகிஸ்தானுக்கு செல்வாக்கு இல்லாமல் போய்விடுமோ என்ற அங்கலாய்ப்பில் ஐஎஸ்ஐ இருக்கிறது.

ஆப்கானிஸ்தான் அரசுடன் தலிபான் தலைவர்கள் பேச்சுகள் நடத்த முயற்சி மேற்கொள்வதை தெரிந்துகொண்ட ஐஎஸ்ஐ அமைப்பினர், அதை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும் என்னும் உள்நோக்கத்துடன் அமெரிக்காவின் உளவு அமைப்பான சிஐஏயை பயன்படுத்தியே தலிபான் அமைப்பின் இரண்டாம் நிலை தலைவர் எனக் கருதப்படும் முல்லா அப்துல் கனி பராதரை கைதுசெய்தனர்.

கராச்சியில் கடந்த ஜனவரியில் இவர் பிடிபட்டார். அடுத்த சில நாள்களில் மேலும் 23 தலிபான் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் பெரும்பாலானவர்களுக்கு பாகிஸ்தானே பல காலமாக பாதுகாப்பும், வசதியும் கொடுத்து வந்துள்ளது என நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

கைதுசெய்து வைத்திருந்த இந்தத் தலைவர்களை இப்போது பாகிஸ்தான் அரசு விடுதலை செய்துள்ளது. ஆப்கானிஸ்தான் சென்று அங்கு போரில் ஈடுபட்டுவரும் அமெரிக்கப் படைகளுக்கு எதிராக சண்டை யிடுங்கள் எனவும் விடுதலை செய்யப்பட்டுள்ள தலிபான்களை ஐஎஸ்ஐ பணித்துள்ளது என்றும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள் ளது.

முல்லா கயூம் ஜாகிர், அப்துல் கபீர், அப்துல் ரவூப் காதீம் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டுள்ள தலிபான் தலைவர்களில் சிலர்.

அமெரிக்காவுடன் பேச்சுகள் நடத்த தலிபான்கள் முயற்சித்தனர். அது தெரிய வந்ததும் பராதர் உள்ளிட்ட தலிபான் தலை வர்களைக் கைதுசெய்தோம். எங்களை நம்பி தலிபான்கள் உள்ளனர். அவர்களைப் பாது காப்பது எமது கடமை. கர்சாய் அரசுடனோ, இந்தியாவுடனோ அவர் கள் பேச ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என்று ஐஎஸ்ஐ உளவு அமைப்பு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார் என்றும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

தலிபான் அமைப்பின் முக்கிய தலைவர்களைக் கைதுசெய்துள்ளதன் மூலம் அந்த அமைப்பினரை தமது வழிக்குக் கொண்டு வரமுடியும் என்கிற எண்ணத்தில் இருக்கும் பாகிஸ்தான், தமது விரோதியான இந்தியா வுக்கு ஆப்கானிஸ்தானில் எந்த செல்வாக்கும் இல்லாத வகையில் தடுத்து நிறுத்துவது என்பதிலும், ஆப்கானிஸ்தானில் போர் முடிந் தால் அங்கு தனக்கென தனி செல்வாக்கை வளர்த்துக்கொள்வதிலும் உறுதியாக உள்ளது எனக் கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை

வெற்றிடங்கள்:- கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (ஆண்கள்) (50 வெற்றிடங்களுக்கு மேல் உள்ளன)

தகைமைகள்:- க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
(a) இளைப்பாறிய பொலிஸ் / படை உத்தியோகத்தர்கள், சாரணர், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் அங்கத்தவர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.
(b) தடகள, கிரிக்கெட் உதைபந்தாட்டம், கராட்டி, கரப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் மற்றும் சிறந்த வீரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு:- மேற்கூறப்பட்ட தகைமையில் a+b உள்ளவர்களுக்கு கல்வித்தகைமையில் விலகல் அளிக்கப்படும்.
நல்ல தேகாரோக்கியமும் நல்ல கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.
(i) உயரம் 5' 4''
(ii) 20 வயதுக்கு மேற்பட்டோர் (சம்பளம் மாதமொன்றுக்கு EPF & ETF மற்றும் வருகை ஊக்குவிப்பு பணம் உட்பட ரூபா 12,000/-
நேர்முகப் பரீட்சை 337 1/1, கஸ்தூரியார் வீதியிலுள்ள பணிமனையில் 28.08.2010 சனிக்கிழமை அன்று மு.ப. 10 மணிக்கு நடைபெறும்.

*கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்களுடன் சமுகமளிக்கவும்.*
1. *கிராமசேவகரின் நற்சான்றுப்பத்திரம் (6 மாதத்துக்குட்பட்டது)*
2. *வதிவிடச் சான்றிதழ்.*
3. *பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.*
4. *கல்வித்தராதரப் பத்திரங்கள்.*
5. *தேசிய அடையாள அட்டை.*
6. *குடும்ப அட்டை.*

இவை அனைத்தினதும் உண்மைப்பிரதியுடன் போட்டோப் பிரதியும் கொண்டுவரவும்.

*337 1/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

(ச/570146)


# மரண அறிவித்தல்கள்

## *சின்னத்தம்பி ஜெகநாதராசா*

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், மின்சார சபை, யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம், கொட்டடியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஜெகநாதராசா நேற்று (24.08.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வாலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் செல்வராணியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்) பாசமிகு கணவரும் கந்தசாமி ராஜேஸ்வரி, செந்தில்ராசா ஆகியோரின் சகோதரரும் திலகவதி, தங்கராசா (ஓய்வுபெற்ற அதிபர்), ஜெகதீஸ்வரன் (ஓய்வுபெற்ற பட வரைஞர்), மலர்தேவி (ஆசிரியை), வக்சலாதேவி (ஆசிரியை) காலஞ்சென்ற ரவீந்திரராசா (எழுதுவினைஞர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2010) புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம் பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எருளன் இந்து மயா னத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கற்பகப் பிள்ளையார் வீதி,*
*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*

தகவல்:
(102436) செல்வராணி (மனைவி).

## *தம்பித்துரை பூபாலசிங்கம்*



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை பூபாலசிங்கம் நேற்று (24.08.2010) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - அழகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான இராசையா - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் சின்னமணியின் அன்புக் கணவரும் சுசீலா, ஜெயமலா (டென்மார்க்), ஸ்ரீதர் (பிரான்ஸ்), ஜெயகுமார் (சுவிஸ்), சசிகலா, சோபனா ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்தியதேவன் (புத்தளம்), கமலநாதன் (டென்மார்க்), சசிலேகா (பிரான்ஸ்), நவநீதன் (பருத்தித்துறை பிரதேச சபை) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற வன்னியசிங்கத்தின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் வசுமதி ஆகியோரின் மைத்துனரும் பாலசிங்கத்தின் சகலனும் ஜெகன், பிரதீபன், ஜெயீபன், டிலக்சன், றபியா, றனேஷன், லக்ஷிகா, அவிஷிகா, றிசிகன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2010) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டை ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமகிருஷ்ண வித்தியாலய வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
(102432) 021 4590768


## சாரதி தேவை

வைகோ (BACK HOE LOADER) இயந்திர இயக்குநர் உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள். அனுபவமுள்ளவர்கள் தகைமைச் சான்றிதழுடன் முழுநேரமாகவோ/பகுதி நேரமாகவோ பணியாற்ற விண்ணப்பிக்கவும்.

உதயன் மே/பா
விளம்பர இல. 4060

## V.V.M.S. ஜூவெல்லரி
## இடமாற்றம்

சாவகச்சேரி பஸ் நிலைய வீதி, இல. 10 இல் இதுவரை இயங்கிவந்த எமது ஸ்தாபனம் நாளை மறுதினம் (27.08.2010) தொடக்கம் சாவகச்சேரி, கண்டி வீதி, இல. 108 க்கு (சாவகச்சேரி இலங்கை வங்கி முன்பாக) மாற்றப்படவுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*அனைவரும் வருக*

வீ.மகாலிங்கம்.

## விரைவான பயண ஒழுங்கு

ஐரோப்பிய நாடுகளிலும் கனடாவிலும் வேலையுடனும்/வேலை இல்லாமலும் பயண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

★ முற்பணம் இல்லை. ★ மிகக்குறைந்த செலவு.

உடன் தொடர்புகொள்ளவும்.

0724670551

## வாடகைக்கு

TATA வடி வாகனம் நாளாந்த, மாதாந்த வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 0776400441

## தேவை

AD சாரதி அனுமதிப்பத்திரத்துடன் அனுபவமுள்ள சாரதி தேவை.

தொடர்பு: 0776400441


# நல்லூரில் இன்று இசைப் பேருரை

யாழ்ப்பாணம், ஓக. 25

நல்லைக்கந்தன் ஆலய உற்சவத்தை ஒட்டி நல்லூர் சைவமகாசபை நல்லை திருஞானசம்பந்த ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் நடத்தும் தெய்வீக தொடர் இசைப்பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு முத்தமிழருவி பிரம்மஸ்ரீ வை.நித்தியானந்தசர்மா ''பாண்டவர் ஜனனம்'' என்ற தலைப்பில் உரையாற்றுவார்.

ஆர்.எஸ்.கேசவமூர்த்தியின் வயலின், வித்துவான் ரி.இராஜனின் மிருதங்கம் ஆகியன இசைப்பேருரைக்குப் பக்கவாத்தியங்களாக அமையும்.

(ஒ-ஐ)

## ஐக்கிய நாணய சங்க பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 25

வட்டு. மூளாய் ஐக்கிய நாணய சங்கத்தின் 76 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீகணேச வாசிக சாலை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் ப.அருள்ராசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் புதிய நிர்வாக சபைத் தெரிவு, மூத்த அங்கத்தவர்கள் கௌரவிப்பு, சங்கச் செயற்பாடு மற்றும் விடயங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்படும்.

(ஒ-10)




# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 675 திகதி 23-08-2010

வெற்றி எண்கள்

40 45 50 52 F (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 11,015,980/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 11,015,980/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 24 | 2,000/= | 48,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 388 | 1,000/= | 388,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 624 | 1,000/= | 624,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 16112 | 60/= | 966,720/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7641 | 40/= | 305,640/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 189007 | 20/= | 3,780,140/= |
| | | மொத்தம் | ரூ. 6,912,500/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| களுத்துறை | 600312250-3-13 |
| கொழும்பு | 600317440-9-49 |
| பொலன்னறுவை | 600305045-9-49 |
| பதுளை | 600303088-2-22 |
| திருகோணமலை | 600311691-7-07 |
| காலி | 600308054-1-01 |
| கம்பஹா | 600305565-2-42 |
| அம்பாறை | 600303786-7-27 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,312,500/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 11,528,020/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள்

2010 ஒகஸ்ட் 26 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

## வாடகைக்கு

மானிப்பாய் - காரைநகர் பிரதான வீதி, சண்டிலிப்பாயில் 17 பரப்புக் காணியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

T.P: 0773013060

# BROWN & CO. PLC

## SHARP Photocopier



தற்போது SHARP நிழற்பிரதி இயந்திரங்களை குறுகிய கால தவணை அடிப்படையில் பெற்றுக் கொள்ளுங்கள்.

* ஒரு வருடம் / 50000 பிரதிகளுக்கான உத்தரவாதம்.
* ஒருவருட இலவச சேவை.
* இலவச விநியோகம்.

## OLYMPUS

Your Vision , Our Future

முந்திக்கொண்டு பெற்றெடுங்கள்



Rs. 14, 650/=
2GB Memory Chip Free
Rs. 19, 400/=

ஒலிம்பஸ் T 100 அல்லது FE 4030 டிஜிடல் கமராக்களை வாங்கி ஒலிம்பஸ் பெயர் பதித்த தொப்பிகளை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள் முந்துங்கள் இச் சலுகை முதல் 50 வாடிக்கையாளர்களுக்கு மாத்திரமே காத்திருக்கின்றது.

உலகிலேயே சிறந்த தொழில்நுட்பம் திகைக்க வைக்கும் விலைகளில்
T - 100 . 12.0 Mega Pixel, 3x Optical zoom, 2.4" LCD, Face Detection
FE - 4030. 14.0 Mega Pixel, 4x Optical Zoom, 2.7" LCD, 26mm wide Lens



## SHARP Air Conditoners

* Compressor இற்கு 05 வருட உத்தரவாதம்.
* இலவச பொருத்தல் சேவை



Available : Sharp Multimedia Projectors.



Sharp Fax Machines

எப்போதும் தரமான உதிரிப்பாகங்கள் மற்றும் உள்ளீடுகளையே (Toners & Spares) நாடுங்கள்.

## Brown & Co. Plc - IBS இன் அங்கீகரிக்கப்பட்ட ஏக விநியோகஸ்தர்கள்.

# டிஜிட்டல் எலக்ரோனிக்ஸ்

இல. 62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 4040, Fax : 021 222 4040
( ஸ்ரான்லி வீதி சம்பத் வங்கி முன்பாக )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைகள், வள்ளங்கள் வழங்கினால் போதுமா? இரணைமடுவில் மீன்பிடிக்க அனுமதி இல்லையே!

## சாந்தபுரம் கிராம மக்களின் ஏக்கம், கவலை

கிளிநொச்சி, ஓக. 25

மீள்குடியமர்த்தப்படுவதற்காக அழைத்துவரப்பட்டு சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள 281 குடும்பங்கள் தொழில் இல்லாத நிலையில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றன.

இந்த மக்களில் பெரும்பாலானோர் தமது ஜீவனோபாயத் தொழிலாக விவசாயத்தையும் மீன்பிடித் தொழிலையுமே செய்து வந்தனர். இந்த நிலையில் தமக்குத் தொழில் செய்வதற்கான உபகரணங்கள் அரச அதிகாரிகளால் வழங்கப்பட்ட போதும் தம்மை இராணுவத்தினர் தொழில் செய்வதற்கு அனுமதிக்கவில்லை என்று அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்த மக்கள் தொழில் செய்வதற்காக விவசாய உபகரணங்கள், மீன்பிடி வள்ளங்கள், வலைகள் என்பன வழங்கப்பட்டுள்ளன. ஆனால் இவர்களின் காணிகளுக்கு அனுமதிக்கப்படாத நிலையில் விவசாயத்தைச் செய்ய முடியாதுள்ளதுடன், இரணைமடு, கனகாம்பிகைக்குளங்களில் மீன்பிடிக்க விதிக்கப்பட்டுள்ள தடைகளால் இவர்கள் தொழில்களை இழந்துள்ளனர்.

உணவுக்காக அதிகாரிகளின் கைகளையே எதிர்பார்த்துள்ள இந்த மக்கள் தமது உணவுக்காக மீனைப் பிடிப்பதற்கு சுமார் 3 கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்று திருவையாறில் உள்ள வாய்க்கால்களில் தூண்டில் மூலம் மீன்பிடிப்பதாக கவலையுடன் கூறுகின்றனர். (ஒ-எ-6)



## 'ஓசி'ப் பயணிகளிடமிருந்து ரூ. 44 லட்சம் தண்டம்

கொழும்பு, ஓக. 25

ரயிலில் 'ஓசி'ப் பயணம் மேற்கொண்டவர்களிடமிருந்து இவ்வருடம் இதுவரை 44 லட்சம் ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளது. இத்தகவலை ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ரயில்வேத் திணைக்களம் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இவ்வருடத்தில் கடந்த 7 மாதங்களில மாத்திரம் ரயிலில் டிக்கட் இன்றி சட்டவிரோதமாகப் பயணித்த 8ஆயிரத்து 500 பேருக்கும் அதிகமானோர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவ்வாறு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டவர்களிடம் இருந்து 44 லட்சம் ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளது.

அத்துடன் சட்டவிரோதமான முறையில் ரயிலில் பயணிப்போர் தொடர்பாக ரயில்வேத் திணைக்களம் மிகவும் அவதானத்துடன் செயற்படுகின்றது என்று ரயில்வேத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ஒ-சி)

# வந்த வேகத்தில் மின் கம்பத்துடன் மோதி அதனை இரண்டாக முறித்தது "ஹைஏஸ்"

## ஜாஎல வாசிகள் 9 பேர் காயமுற்றனர்



தென்மராட்சி, ஓக. 25

வேகமாக வந்த "ஹைஏஸ்" வாகனம் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த 9 பேர் காயமுற்றனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு எழுதுமட்டுவாழ் ஆசைப்பிள்ளை ஏற்றம் சந்திக்கு அண்மையில் இடம்பெற்றது.

ஜா-எல பகுதியில் இருந்து நயினாதீவுக்கு வந்துகொண்டிருந்த வாகனமே இவ்வாறு மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் பயணம் செய்த ஜா-எல பகுதியைச் சேர்ந்த ராமினி சுமதிங்க (வயது 13), சிசுறு குமாரசாந்தி (வயது 49), நிகுமா (வயது 60), சீலவதி (வயது 77), துவாதிகா (வயது 30), ராகினி (வயது 8), ஜஸா (வயது 36), சுசந்தி ஜாலி (வயது 55), லக்ஷி வீரசிங்க (வயது 66) ஆகியோரே காயமுற்றனர்.

இவர்கள் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வாகனம் மோதியதில் இரண்டாக முறிந்த மின்கம்பத்துக்கு நஷ்ட ஈடாக வாகன உரிமையாளர் 75 ஆயிரம் ரூபா வழங்கியதை அடுத்து நேற்றுக்காலை புதிய மின்கம்பம் நடப்பட்டது. (ஒ-எ-6-207)

# கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் விரைவில் கர்தினாலாக நியமனம்

கொழும்பு, ஓக. 25

கொழும்புக்கான பேராயர் அதிவண. கலாநிதி மல்கம் ரஞ்சித் ஆண்டகை கர்தினாலாக நியமிக்கப்படவுள்ளதாகத் அறிய வந்துள்ளது.

இலங்கையில் கர்தினாலாகப் பதவி வகித்த அதி மேதகு தோமஸ் கூரே ஆண்டகை மரணமடைந்ததன் பின்னர் எவரும் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படவில்லை.

தற்போது கொழும்புக்கான பேராயராகப் பொறுப்பு வகிக்கும் அதிவண. கலாநிதி மல்கம் ரஞ்சித் ஆண்டகையைக் கர்தினாலாக நியமனம் செய்வதற்கான ஆலோசனைகளை மேற்கொள்ளும்பொருட்டு வத்திக்கானில் இருந்து கர்தினால் ஒருவர் வெள்ளிக்கிழமை இலங்கை வரவுள்ளார்.

கொழும்பு பேராயர் இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆலோசனைக் கூட்டத்தில் கத்தோலிக்க ஆயர்கள் வத்திக்கானிலிருந்து வருகைதரும் கர்தினாலுடன் ஆலோசனைகளை மேற்கொள்வர். (க)

# ஜனாதிபதியை அடிக்கடி சந்தித்துக்கொண்டு ரணிலால் கூட்டமைப்பை உருவாக்க முடியுமா?

## மனோ கணேசன் தொடுக்கும் கேள்வி இது

கொழும்பு, ஓக.25

ஜனாதிபதித் தேர்தலின்போது ஏற்படுத்தப்பட்ட எதிர்க்கட்சிகளின் பலமான கூட்டமைப்பு போன்ற ஒரு கூட்டமைப்பையே ஜனநாயக மக்கள் முன்னணி எதிர்பார்க்கின்றது. அத்துடன் பலமான கூட்டணி அமைப்போம் எனக் கூறிக்கொண்டே எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியைச் சந்திப்பதையும் எமது முன்னணி ஏற்றுக்கொள் ளாது.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் நேற்று 'உதயனுக்கு தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு கொழும்பில் நடைபெறவுள்ளது.

ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

ஐக்கிய தேசிய முன்னணியிடம் நாம் எமது இந்தக் கருத்தை வலியுறுத்துவோம். ஐ.தே.கட்சியுடன் வெறுமனே கூட்டுச் சேர்வதால் எதுவிதப் பயனும் ஏற்படப் போவதில்லை. ஜனாதிபதித் தேர்தலின் போது ஏற்பட்ட கூட்டணியைப் போல் பலமான கூட்டணி உருவாகவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு - என்றார். (ஒ-சி)

## சன் சீ கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனேடிய எல்லைச் சேவைகள் முகவர் நிலையம், 'சன் சீ கப்பலில் கனடா வந்திறங்கிய இலங்கை அகதிகள் தொடர்பாக வெளியிட்டுள்ள விவரக்கொத்தில் மேற்கண்ட தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கனேடிய அரசும், கனேடிய எல்லைச் சேவைகள் முகவர் நிலையமும் கனேடியர்களின் பாதுகாப்பையும், உறுதிப்பாட்டையும் முன்னிலைப்படுத்தியே செயற்படுவது முக்கியமானது.

பாதுகாப்பு மற்றும் குற்றவியல் அச்சுறுத்தல் காரணமாக முறையற்று வந்திறங்கிய அனைத்துக் குடிவரவாளர்களையும் சரியான பரிசோதனைகளுக்கு கனேடிய எல்லைச் சேவைகள் முகவர் நிலையம் உட்படுத்தி வருகின்றது.

வயது வந்தவர்கள் நகரத்தின் தென் பகுதியின் பிரதான நிலப்பகுதியில் அவர்களுக்கு உரிய தடுப்பகங்களுக்கு மாற்றப்படுவார்கள்.

குறிப்பிட்ட வயதெல்லையை அடையாத சிறுவர்கள் தடுப்பில் வைக்கப்படவில்லை. அபாயம் குறைந்த இடங்களில் அவர்களின் பெற்றோரின் கவனிப்பில் விடப்படுவார்கள். சாத்தியமான நேரங்களில் குழந்தைகளின் சிறந்த நலனைக் கருத்தில்கொண்டு உறவினர்களற்று வந்த சிறிய வயதினர் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண குழந்தைகள் மற்றும் குடும்ப மேம்பாட்டு அமைச்சிடம் விடப்பட்டு பாதுகாப்பான, ஆபத்தற்ற இடத்தில் பராமரிக்கப்படுவார்கள்.

சன் சீயில் உள்ள இலங்கை அகதிகளுக்கு ஒரு மொழிபெயர்ப்பாளரைப் பெற்றுக்கொள்ளும் உரிமையும், ஒரு சட்டத் தரணியை வைத்துக் கொள்ளும் உரிமையும், அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப் பின் ஏன் தடுத்து வைக்கப்பட் டிருக்கின்றனர் [illegible] உரிமையும் அவர்களின் தடுப்புத் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஆணையாள ருக்கோ அல்லது அவர்களின் தூதுவருக்கோ தெரியப்படுத்தும் உரிமையும் உண்டு.

தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு சட்டத் தேவைகளுக்கான நிதி உதவி வழங்கப்படும். வந்திறங்கியவர்கள் தங்களின் சட்டத்தரணியைத் தாமே தெரிவுசெய்து கொள்ளவும், தடுப்பு மீளாய்வு விசாரணைகளின் முன்னர் சட்டத்தரணியுடன் சந்திப்பதற்கும் முடியும்.

வயது வந்தவர்கள் வெளியில் தொலைபேசித் தொடர்புகளை மேற்கொள்ளவும், தபால் மூலமான சேவைகளைப் பெற்றுக் கொள்ளவும் முடியும். அவர்களைப் பார்வையிட வருவதற்கான அனுமதி உள்ளவர்கள் பட்டியலில் பெயர்களை அவர்களால் இணைத்துக் கொள்ளவும் முடியும்.

பார்வையிட அனுமதி பெற்றவர்களுக்கான பட்டியலில் சேர்க்கப்பட்டவர்கள் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண தடுப்புப் பிரிவுடன் தொடர்புகொண்டு பார்வையிடுவதற்கான ஒழுங்குகளைச் செய்ய முடியும்.

சன் சீ கப்பலில் உறவினர் இருப்பதாக நீங்கள் எண்ணினால், உங்கள் உள்ளூர் கனேடிய செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்துடன் தொடர்புகொள்ள முடியும் - எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## ஹக்கீமுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு எதுவித சேவையையும் செய்ய முடியாது எனவும் இதனால் எதிர்வரும் தேர்தல்களில் மக்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைப் புறக்கணித்து விடுவார்கள் எனவும் அந்த எம்.பிக்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்திடம் எடுத்துரைத்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்துக்கு விஜயம் செய்தபோது ரவூப் ஹக்கீம் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. இங்கு மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கவே நேற்றைய சந்திப்பு இடம்பெற விருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## எதிர்க்கட்சிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்துள்ள கட்சிகள் மாத்திரம் இந்தப் பேச்சில் கலந்துகொள்ளும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எமது நாடு இப்போது மோசமான பாதையில் பயணித்துக்கொண்டிருக்கின்றது. எல்லாத் துறைகளிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரம் மற்றும் மக்களின் வாழ்வாதாரம் முற்றாகப் பாதிப்படைந்துள்ளன.

'ஜி.எஸ்.பி. பிளஸ்'வரிச்சலுகை நீக்கத்தால் எமது தொழிலாளர்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இதைத் தக்கவைத்துக் கொள்ள அரசு எதுவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இந்த நிலையில் பொருள்களின் விலைகளை அரசு அவ்வப்போது அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது.

பொருள்களின் விலை அதிகரிப்பாலும் ஜனநாயகமற்ற ஆட்சியாலும் இந்நாட்டு மக்கள் வாழ முடியாமல் கஷ்டப்படுகின்றனர். இந்த நிலையில் இருந்து இந்நாட்டு மக்களைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு எதிர்க்கட்சிகளாகிய எமக்கு உண்டு. இந்த நிலையில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து இந்நாட்டின் எதிர் காலத்தை மாற்றவேண்டியுள்ளது. இது தொடர்பில் எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு ஒன்றை அமைத்துச் செயற்படுவதே சிறந்த மார்க்கம்.

எமது ஐக்கிய தேசிய முன்னணியில் உள்ள கட்சிகள் நாளை(இன்று) பிற்பகல் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் தலைவர் ரணில் [illegible] தலைமையில் ஒன்று [illegible] தாலோசிக்க உள்ளன - என்றார். (அ-சி)

## மரண அறிவித்தல்

### மாணிக்கவாசகர் சிவபாக்கியம்



வட்டு.தென்மேற்கு, வட்டுக் கோட்டையைச் சேர்ந்த மாணிக்கவாசகர் சிவபாக்கியம் கடந்த 21.08.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கவாசகரின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி இலகுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி முகாந்திரம் விசுவலிங்கத்தின் அன்பு மருமகளும் ஜெயரஞ்சன், ரமேஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பத்மினி, பிரேமினி ஆகியோரின் அன்பு மாமியாரும் சக்தியா, வஜிரா, விசாகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2010) புதன்கிழமை காலை 9 மணிக்கு வட்டுக்கோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலட்டி ஒழுங்கை,*
*வட்டு.தென் மேற்கு,*
*வட்டுக்கோட்டை.*
*தொ.பே.: 0213207494*

(102423)

தகவல் :
மகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லைக்கந்தன் பெருந்திருவிழாவில் நேற்று இடம்பெற்ற மஞ்சத்திருவிழாவின் காட்சிகளை காணலாம். (படங்கள்: ரட்ணம்)

# புலிகள் - தமிழக அரசியல்வாதிகள் தொடர்பு உண்மை நிலையை கே.பி. தெரிவிக்கவேண்டும்

## கலைஞர் கருணாநிதி கோரிக்கை

சென்னை, ஓக. 25

இறுதி யுத்தத்தின்போது தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தமிழக அரசியல்வாதிகள் கொண்டிருந்த தொடர்புகள் குறித்து கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் விளக்கமளிக்க வேண்டும்.

- இப்படி தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து கருணாநிதி தெரிவித்துள்ளவை வருமாறு -

''இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனக் கூறப்படும் குமரன் பத்மநாதன், அண்மையில் ஊடகம் ஒன்றுக்குப் பேட்டி வழங்கி இருந்தார்.

விடுதலைப்புலிகள் அமைப்பின் முக்கிய தலைவரான அவர் அளித்த பேட்டியில், இலங்கையில் போர் நிறுத்தம் வராமல் தடுத்தது வைகோதான் என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார். மேலும் அவர் தமது பேட்டியில் குறிப்பிடுகையில், கடந்த ஆண்டு லோக்சபா தேர்தலுக்கு முன்னர் இலங்கை இராணுவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே உச்சக்கட்ட போர் தீவிரம் அடைந்திருந்தது. இலங்கை இராணுவத்துக்கு இந்திய இராணுவம் மறைமுகமாக உதவி செய்கிறது என்ற குற்றச்சாட்டைத் தேர்தல் பிரசாரத்தில் அ.தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் எழுப்பினர்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டு, இலங்கை அரசுடன் பேச்சு நடத்த முன்வர வேண்டும் என மத்திய அமைச்சர் சிதம்பரம் வேண்டுகோள் விடுத்தார். அவரது வேண்டுகோளை ஏற்று இலங்கை அரசுடன் பேச்சு நடத்த விடுதலைப் புலிகளும் விரும்பினர்.

இந்த முடிவை விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுச் செயலர் நடேசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எம்.எல்.ஏ. மகேந்திரனிடம் தெரிவித்தார். அதை அவர், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவிடம் கூறினார்.

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட்டால், தி.மு.க. மற்றும் காங்கிரஸ் கட்சிகளுக்கு நல்ல பெயர் கிடைத்துவிடும் என்பதால் விடுதலைப்புலிகளின் முடிவை வைகோ மாற்றினார்.

தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்று மத்தியில் பா.ஜ.க. ஆட்சி அமையும் போது விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு நிலையை எடுக்க முடியும் என வைகோ கூறினார் - என்று அவர் தெரிவித் திருக்கிறார்.

ஆனால் ஈழப் போர் நிறுத்தம் குறித்த செய்தியை நாம் வைகோவிடம் தெரிவிக்கவில்லை என்று மகேந்திரன் கூறுகிறார். இதில் எது உண்மை என்பதை விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய தலைவரான குமரன் பத்மநாதன்தான் தெரிவிக்க வேண்டும்.

- இப்படி முதல்வர் தெரிவித்துள்ளார். (ஒ-சி)

# வடக்கு, கிழக்கில் ஆழ்கடல் மீன்பிடிக்கு விரைவில் அனுமதி என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஓக. 25

வடக்குக் கிழக்குக் கடற்பகுதியில் விரைவில் ஆழ்கடல் மீன்பிடி நட்வடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன - என்று இலங்கையின் கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைக்கு வடக்கு, கிழக்கு கடலோரப் பகுதியைப் பயன்படுத்தும் திட்டங்கள் அரசிடம் உள்ளன. இங்கு மூன்று தசாப்த காலப் போரினால் ஆழ்கடல் மீன்பிடி முற்றாகத் தடைப்பட்டுள்ளது. இதனால் இந்தப் பகுதியில் வெளிநாட்டுப் படகுகள் சட்ட விரோதமான முறையில் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றன.

நாட்டின் தற்போதைய மீன் நுகர்வு வீதம் அடுத்த மூன்று வருடங்களில் இரண்டு மடங்காக அதிகரிக்கும்.

2013 ஆம் ஆண்டுக்குள் மீன் உற்பத்தியை 6 லட்சத்து 86 ஆயிரம் மெற்றிக் தொன்னாக அதிகரிப்பதற்கு அரசு சிறப்புத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது. இதன் மூலம் உள்நாடு மீன் நுகர்வு வீதம் அதிகரிக்கும்.

- இப்படி அவர் கூறினார்.

## மூதூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணிகளைத் துப்புரவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த புல்டோசர் வாகனம் ஒன்று சிறிய கண்ணிவெடி ஒன்றில் சிக்கி சேதமடைந்தள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து காணிகளைத் துப்புரவாக்கும் ஐ.நாவின் திட்டம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

அகற்றப்படாதிருந்த சிறிய கண்ணி வெடி ஒன்றே வெடித்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இதுகுறித்து மூதூர்ப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளுடனான இறுதிக் கட்ட யுத்தத்தின்போது 58ஆவது படைப் பிரிவை வழிநடத்திய இவர், வெள்ளைக் கொடியுடன் வந்த விடுதலைப் புலி உறுப்பினர்களை சுடுமாறு உத்தரவிட்டார் என சரத் பென்சோ தொலைக்காட்சி ஒன்றுக்குத் தெரிவித்திருந்தார் எனவும் செய்தி வெளியானமை தெரிந்ததே. (சி)

## இடம்பெயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தி.மு.க. எம்.பி.க்கள் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்றுக்காலை நடைபெற்றது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு -

இலங்கையில் நடைபெற்ற போரின் காரணமாக இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் மீண்டும் அவர்கள் இடத்திற்குச் சென்று வசிக்கின்ற வாழ்வாதாரங்களை இன்னமும் இலங்கை அரசு செய்து தராமல் காலம் கடத்தி வருகிறது.

இடம்பெயர்ந்த தமிழர்களின் மறுவாழ்வுக்காக இந்திய அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகளை வரவேற்கின்ற அதே நேரத்தில், இந்திய அரசின் கருத்துக்கும் எதிர்பார்ப்புக்கும் மாறாக இலங்கை அரசு இடம்பெயர்ந்த தமிழர்களின் பிரச்சினையில் இன்னும் மந்த நிலையில் செயற்படுவதை இந்தக் கூட்டம் சுட்டிக்காட்டுகிறது. அத்தோடு உடனடியாக இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வுக்கு உரிய வழி காண வேண்டுமென்று இந்திய அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

கூட்டம் முடிவடைந்த பின்னர் முதல்வர் கருணாநிதியிடம் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் அதற்கு முதல்வர் அளித்த பதில்களும் வருமாறு -

கேள்வி - இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தியா, சர்வதேச நாடுகள், ஐ.நா. சபை ஆகியவற்றுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று எல்லோரும் சொல்கின்ற சூழ்நிலையில், மத்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவ் கடந்த சில தினங்களுக்கு முன்னர் உங்களைவந்து சந்தித்தார். அதன் தொடர்ச்சியாக ஏதாவது உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

பதில் - இதே கருத்தை நான் நிருபமா ராவ், என்னைச் சந்தித்தபோது அவரிடம் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன்.

அவரும் அதனை மத்தியிலே உள்ளவர்களிடம் தெரிவித்து, நான் கேட்டுக் கொண்டவாறு அங்குள்ள நிலைவரங்களை அறியவும் இலங்கை அரசு வழங்கியுள்ள வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப் பட்டிருக்கின்றனவா என்பதைத் தெரிந்து கொள்ளவும் முயற்சிகளை மேற்கொள்வதாக உறுதியளித்திருக்கி றார். அதற்கான தூதுக் குழு ஒன்று அல்லது தூதுவர் ஒருவர் விரைவில் அனுப்பப்படு வார் என்பதை என்னிடம் உறுதியாகத் தெரிவித்திருக்கிறார்.

கே - அந்தத் தூதுக்குழுவில் தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாராவது இடம் பெறுவார்களா?

ப - இல்லை.

கே - சில கட்சிகள் தூதுவரை அனுப்புவதை விட அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை அனுப்பி அங்கேயுள்ள நிலைவரத்தை ஆராயலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். வேறு சில கட்சிகள் தூதுவரை அனுப்புவதே தேவையற்ற ஒன்று என்று சொல்லியிருக்கிறார்களே?

ப - இதற்கு நான் என்ன செய்ய முடியும்? இவைகள் எல்லாம் செய்திகள். - என்றார். (அ-சி)

## கடத்தப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையர்களுடன் கடத்தப்பட்ட மேற்படி கப்பல் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கென்யா மற்றும் வாஷிங்டனிலுள்ள இலங்கைத் தூதரகங்களிடம் இலங்கை கேட்டுள்ளது.

சோமாலியாவில் இலங்கைத் தூதரகம் இல்லாத காரணத்தால் சோமாலிய கடற் கொள்ளையர்களுடன் தொடர்புகொள்வதற்கான ஒழுங்குகளைச் செய்யுமாறு கென்யாவிலுள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது எனவும் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார். (ஒ-சி)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஸில்ராஜபக்ஷ தமது இரண்டு நாள் விஜயத்தின் போது இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உட்பட முக்கிய தலைவர்களையும் உயர் அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்த இருக்கிறார்.

வடக்கில் போர் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு, இனப் பிரச்சினைக்கான தீர்வு ஆகிய விடயங்கள் குறித்து அவர் மன்மோகன் சிங்குடன் பேச்சு நடத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

பஸில் ராஜபக்ஸ மட்டும் இந்தியா செல்கிறார். பாதுகாப்பு அமைப்புச் செயலரும் நானும் இந்தியா செல்லவில்லை என்று ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்தார்.

அமைச்சர் பஸில் தலைமையில் மூவர் குழு இம்மாதம் 15 ஆம் திகதி இந்தியா பயணம் ஆவதாக திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் இந்திய அரசின் விருப்பத்துக்கு அமைவாகவே அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மட்டும் செல்வதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-ஐ)

## கரும்மழை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளனர் .இரு மாதங்களுக்கு மேலாகியும் இன்னமும் அவர்களது சொந்தக் காணிகளைக் கூடப் பார்க்க விடாது தடுக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமையும் நேற்றும் பெய்த மழையால் தறப்பாள்களை மட்டும் கொண்டதாக அமைந்த வீடுகளுக்குள் மழை வெள்ளம் புகுந்ததால் மக்கள் அங்கு தங்குவதற்கு இடமில்லாது பெரும் அவலத்தை எதிர்நோக்குகின்றனர். பாடசாலையிலும் ஒரேயொரு கட்டடம் மட்டுமே அமைந்துள்ளதால் அனைவரும் தங்குவதற்கு போதுமான வசதி இல்லை.

தாழ்ந்த பகுதி என்பதால், வெள்ளம் தேங்கி நிற்பதால், இரவில் கடும் மழை பெய்வதால் மக்கள் தொடர்ந்தும் அங்கு தங்கியிருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தொற்றுநோய்கள் பரவும் அபாய நிலையும் தோன்றியுள்ளது.

வாந்திபேதி நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதுடன் நேற்றுமுன்தினம் கி.எழில் (வயது 2 ½) என்ற சிறுமி வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். தற்போது அங்கு வாந்திநோய் பரவும் அபாயம் காணப்படுவதாக அங்குள்ள மக்கள் கவலையுடன் தெரிவித்திருக்கின்றனர்.

எமது சொந்தக் காணிகளில், சொந்த இருப்பிடங்களில் போய்த் தங்குவதற்கு உதவ எவரும் இல்லை? இனிமேலாவது நாம் சுதந்திரமாக வாழ அரசாங்கம் வழிவிடாதா என்று அவர்கள் ஏக்கத்துடன் கேட்கின்றனர். (ஒ-எ-6)

**விற்பனையாகின்றன**

**இந்தியாவிலிருந்து 10,000 வகைகளுக்கும் அதிகமான புத்தகங்கள் புதிதாகத் தருவிக்கப்பட்டுள்ளன. நூலகங்கள், பாடசாலைகள் மற்றும் கல்வித்துறை சார்பானவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.**

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ், 212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றியபின்னர் தொடரும் கற்றலுக்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

- அதிபர் -

The Express Institute
Irupalai, Kopay.

**GIT இலவசக் கருத்தரங்கு**

காலம் :- 25.08.2010 (Thu)
நேரம் :- 7.00 - 10.00 am
இடம் :- THE SCIENCE CORNER CLOCK TOWER LANE, JAFFNA

BY - K. SELVAN B.sc (Hons)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org